வானதி பதிப்பகம்

# மாட்சி



# பாடகி

தென்னரசு

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு: ஜனவரி 1984

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 9-00

கயல் அச்சகம்

155, பீட்டர்ஸ் ரோடு
சென்னை - 600 086,
தொலை பேசி: 89849.

# முன்னுரை

இந்தக் கதை — வெளியில் எழுதத் தொடங்கி உள்நாட்டுப் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் (மிசா) நான் மதுரைச் சிறைச் சாலையில் இருந்த போது முடிக்கப் பெற்றது.

இந்தக் கதையின் கரு மிகவும் நுணுக்கமானது; ஆனால் உண்மையானது. எனக்குக் கிடைத்ததை வைத்துக் கொண்டு ஒரு நாவலை எழுதியிருக்கிறேன்.

நான் தொழிலுக்காக எழுதுபவனுமல்ல; வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதற்காக எழுதுபவனுமல்ல. எழுதுவதற்கு உரிய சினைப் பொருள்கள் கிடைத்தால் எனக்கு எழுதுவதற்கு உற்சாகம் பிறக்கும்; அவ்வளவுதான்!

நான் ஒரு பாவம் செய்த எழுத்தாளன்; ஏனென்றால் நான் ஒரு அரசியல் கட்சியில் இருக்கிறேன். அதனால் வாசகர் வட்டத்தின் ஒரு பகுதியினர் எங்கள் எழுத்துக்களை பார்க்காமலே புரட்டி விடுகிறார்கள். என்னைக் கேட்டால், அவர்களைத் தன்னம்பிக்கை அற்றவர்கள் என்றுதான் கூறுவேன். எங்கள் எழுத்துக்களைப் படித்தாலே அவர்கள் மனம் மாறி விடும் என்று பயப்படுகிறவர்கள் எந்தக் கட்டத்திலும் எதிலும் நிலைக்க மாட்டார்கள் என்பது எனது அசைக்க முடியாத கருத்து.

நான் இந்தக் கதைக்கு 'பாடகி' என்று பெயர் வைத்திருக்கிறேன். வேண்டாதவனுக்கு வாழ்க்கைப்பட்ட ஒரு பெண் — தமிழ்ப் பெண், ஒரு இசையரசி தன் வாழ்க்கையை எவ்வளவு கஷ்டப்பட்டு மங்களமாக மாற்றிக் கொள்கிறாள் என்பதே இந்த நாவலின் சாரம்.

அன்பன்,
**தென்னரசு**

# பாடகி

அவள் இசைவாணி.

பிசிறு தட்டாத அமுதக் குரல் அவளுடையது. அழகிலும் அவள் நிகரற்று விளங்கினாள். மலை முகட்டின் சிகரத்திலிருந்து உருகி வரும் வெள்ளி ரசம் போல் அவளது நெடிய கூந்தல் சுருள் சுருளாகக் காணப்படுகிறது. அவளுடைய நெற்றித் திலகம் சந்தனக் கட்டையில் சிவப்புக்கல் பதித்திருப்பது போல் தெரியும். அவளது சிரிப்புக்கு முல்லைப் பூவையும், செவ்விதழுக்கு ஆரஞ்சுச் சுளைகளையுமே உதாரணங்களாகச் சொல்ல முடியும்.

அந்தக் காலத்துக் கர்னாடக இசை வாணிகளுக்கே உரித்தான மூன்று கல் மூக்குத்தி, முத்துவடம் அவளுடைய அழகிற்கு மேலும் மெருகூட்டிக் கொண்டிருந்தன.

வழவழப்பான தரையில் எலுமிச்சைப் பழத்தை உருட்டி விட்டதைப் போல் அவள் நடப்பாள். அவளது நடை பார்ப்போருக்கு அவள் பாடகியா அல்லது பரத நாட்டிய கலாநிதியா என்ற ஐயத்தைக் கிளறும். அவள் ஓடும் பொழுதும் நடக்கும் பொழுதும் கால் கொலுசுகள் காலம் தவறாமல் தாளம் போடும். ஆனால் அவள் நாட்டியக்காரியல்ல; பாடகிதான். பாடகி என்றாலும் கானக்குயில்! அவளுடைய இனிய குரல் பச்சைப் பாம்பின் ஓட்டத்தைப்போல், பெருகி வரும் பேராற்றின் கிளை நதியைப் போல் நெளிந்து நெளிந்து ஓடக்கூடியது. அவள் சுரம் பாடுகையில் வீணையின் மணிக்குரல் கேட்கும்; நாதசுரத்தின் கமகமப்புத் தெரியும். தனித்திருந்து அவள் முணகும் போது வெகுதொலைவில் யாரோ வயலின் வாசிப்பது போல் மனதுக்குப்படும்.

இசைக்கு — குதித்தோடும் கன்றை நிறுத்தும் சக்தி, குத்த வரும் காளையைத் தடுத்தாளும் மகிமை, கொத்த வரும் பாம்

பைப் படுக்க வைக்கும் ஆற்றல் உண்டென்ருல் — இந்த மூன்று சக்திகளிலும் அவளை மிஞ்சுபவர்கள் யாரும் பிறந்திருக்க முடியாது.

அவள் அடாணு ராகம் பாடினுல் ஆடவரையும் பெண்டிரையும் அடலேருய் ஆக்கி விடுவாள். அப்போது அவள் குரலில் போர் முரசு ஒலிக்கிறது. அவள் முகாரி பாடினுல் எதிரே அமர்ந்திருப்பவர்கள் எதையோ இழந்தவர்களைப் போல் கண் கலங்கி விடுவார்கள். நீலாம்பரி பாடத் தொடங்கி விட்டாலோ, இசை கேட்கும் பெண்கள் தங்கள் மடியில் கிடக்கும் மழலைகளைத் தட்டிக் கொடுக்கத் தொடங்கி விடுவார்கள்.

கச்சேரிக் கொட்டகையைச் சிரிக்க வைத்துத் தானும் சிரிப்பாள். அடுத்த கணத்தில் அதே கச்சேரிக் கொட்டகையைத் தேம்ப வைத்துத் தானும் தேம்புவாள். நிகழ்ச்சி முடிந்து அவள் போகும்போது அவளுடைய கார் புழுதிக்குள் மறையும்வரை ரசிகர்கள் சிலையாக நின்று பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அத்தகைய கோகில கான இசைவாணி இப்போது பாடுவதில்லை. ஊமையைப் போல் காணப்படுகிருள். இயந்திரத்தைப் போல் காலத்தைக் கழிக்கிருள். நிலவோடு பேசியவள், நீல மேகத் தாரகைகளை அழைத்தவள், தன் இன்பக் குரலால் ஊரையே துயிலச் செய்தவள் இப்போது ஊமையாகி விட்டாளே ஏன்?

பொது நலத்திற்காக இருந்த பூங்கா அழிந்து விட்டதைப் போல காதலர்கள் வருந்தினர்; கல்லூரி மன்றங்கள் சோர்ந்து கிடந்தன. 'குயிலே, நீ பாடமாட்டாயா?' என்று கவிகள் துக்கப்பட்டனர். ஏன் இந்தச் சோகம்?

வைகைக் கரையில் ஒரு சிங்காரச் சிற்றூர். அந்த ஊரைச் சிலைமான் என்று அழைக்கிருர்கள். அழகிய தமிழ்ச் சொற்களை மகுடங்களாகக்கொண்ட ஊர்களில் அதுவும் ஒன்று. தென்னங்கீற்று வீடுகளுக்கு மத்தியில் வண்ணம் பூசிய தெப்பத்தைப் போல ஒரு அழகிய மாடிவீடு தெரிகிறது.

அழகுக்காகக் கட்டப்பட்டிருக்கும் அந்த வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் பொம்மைகள் கூட கைகளில் வீணைகளை வைத்

துக்கொண்டிருக்கின்றன. வீட்டு முகப்பில் தொங்கிய ஒரு நீலத் திரையில் இசைக் கலைஞன் ஒருவன் தன் சிஷ்யைக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பது போல் சித்திரம் தீட்டுப்பட்டிருக்கிறது. அப்படியானால் அதுதான் அந்தப் பாடகியின் வாசஸ்தலமாக இருக்குமோ!

கோகிலம்!

கவர்ச்சியான அவளது குரலுக்கு ஏற்ற பெயர்.

பத்தாண்டுகளுக்கு முன் கோகிலம் அந்தக் கிராமத்திற்குக் கச்சேரிக்காக வந்தாள் அப்போது அவள் தங்கியிருந்த இடம் இசையிலே அளவுகடந்த பற்றுதல் கொண்ட ஒரு ஜமீன்தாரின் பங்களா; அவருக்குப் பாடத் தெரியாது. ஆனாலும் அவர் 'சங்கீதம் சரவணபவா' என்ற பட்டப் பெயரைப் பெற்றிருந் தார். பாம்பாட்டி முதல் பாடத் தெரிந்தவர்கள் வரை அவரது இசைப் பைத்தியம் பரவியிருந்தது. அதுவும் வாய்ப்பாட்டு என்றால் அவருக்கு உயிர். இந்த சின்ன வயதில் சரவணபவா விற்கு இவ்வளவு இசை ஞானம் வளர்ந்ததைப்பற்றி வியப்படை யாதவர்களே இல்லை. மற்றவர்களைப் போலத்தான் அந்த ஊர்க்கச்சேரிக்கு வந்திருந்த கோகிலமும் ஆச்சரியப் பட்டாள். அழகான வீடு ராஜபோக வாழ்வு, ஊரிலே நல்ல கீர்த்தி —இருந்தும் அவர் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளா மல் இருக்கிறார்" — அண்டை வீட்டுக் காரருக்குக் கூட ஏற படாத இந்தச் சந்தேகம் இசைவாணிக்கு ஏற்பட்டது.

இரவு நேரம்!

நட்சத்திரங்கள் அவளைக் கச்சேரிக்குப் போக வேண்டும் என்பதை உணர்த்தின. அவள் கச்சேரிக்குப் புறப்பட்டு விட் டாள். சரவணபவா எதையோ ஒரு கீர்த்தனையை முணகிக் கொண்டே கச்சேரி கேட்க ஆயத்தமாகும் நிலையில் பரபரப் பாகக் காணப்பட்டார்.

சரவணபவாவின் முணுமுணுப்பு இசைவாணியின் உள்ளத்தில் எறும்பு ஊர்வது போன்ற உணர்ச்சியை உண் டாக்கியது. அவள் உற்றுக் கவனித்தாள்.

"முப்பது வயதாகிவிட்டது, இன்னும் நான் கலியாணம் செய்து கொள்ளாமலிருக்கிறேன். இப்படியே இருந்தால் உறவினர்கள் என்னுடைய பிறப்பிலேயே சந்தேகம் கொண்டு விடுவார்கள். ஒரு பணக்காரன், அதுவும் பார்ப்பதற்கு வசீகரமான தோற்றமுடையவன். ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமலிருக்கிறான்? இவன் ஆணுமல்ல, பெண்ணுமல்ல அலி போலிருக்கிறது என்று கேலிபேச ஆரம்பித்து விடுவார்களே; என்னுடைய இலட்சியம் யாருக்குத் தெரியப்போகிறது? இந்த சரவணபவா ஒரு சங்கீத கலாநிதியைத்தான் திருமணம் செய்யக் காத்திருக்கிறான் என்று தண்டோராப் போட முடியுமா?"

—இதுதான் சரவணபவாவின் கொள்கை என்று இசைவாணிக்கு அப்போதுதான் தெரிந்தது. அவள் மெதுவாக எழுந்து சென்று மறைந்து கொண்டாள். அவள் பின்னாலே நிற்பது அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? ஒருவேளை இசைவாணி கூந்தலில் குடியிருந்த முல்லைப்பூ அவள் நிற்பதை அவனுக்குக் காட்டி விட்டதோ?

சரவணபவா அருள் பெற்றவனைப் போல் திரும்பிப் பார்த்தான். சங்கீதமே பெண் உருவில் வந்து நிற்பதுபோல அவனுக்குத்தெரிந்தது. அவனுடைய முகத்திலே ஒரு மயக்கம்! அவனது கண்களிலே ஒரு மின்வெட்டு!

"கோகிலா! நீ எப்படி இங்கே வந்தாய்?"

கோகிலம் பதில் சொல்லவில்லை.

"என்னுடைய மனத்தாங்கலை உனக்கு எப்படிச் சொல்லுவது என்றிருந்தேன்? என்னுடைய புலம்பலே உனக்குப் புரியவைத்து விட்டது. தெய்வத்தின் உதவி பைத்தியங்களுக்கும் கிடைக்கும் என்பதை இப்போது உணருகிறேன்"- சரவணபவா தாகம் நிறைந்தவன் போல் தவித்துக்கொண்டே பேசினான்.

வசந்தத்தின் விளிம்பிலே மதிமயங்கி விளையாடிக் கொண்டிருக்கும் பருவத்தில் திளைத்து நின்ற கோகிலம் அந்த இடத்திலேயே மனக்கோட்டை கட்டத் தொடங்கினாள். — அரண்மனை போன்ற வீடு, அரசபோக வாழ்க்கை; தினசரி கச்சேரி

நடத்திஞல்கூட இவ்வளவு சொத்துக்களைச் சேகரிக்க முடியாது —கோகிலத்தின் இன்ப நினைவுகள் முடியவில்லை. அதற்குள்ளாக கச்சேரிக் கொட்டகையிலிருந்து அவளை அழைத்துப்போக ஆள் வந்து விட்டது.

பொழுது விடிந்தது.

இரவு முழுவதும் இசையைக் குடித்திருந்த அந்தக் கிராமம், சூரியோதயம் ஆகியும் மயக்கம் தெளியாமல் இருந்தது.

சரவணபவா சிறைச்சாலைக்குச் செல்ல நேரம் குறிக்கப் பட்ட கைதியைப்போல் கலங்கிப்போய் உட்கார்ந்திருந்தான்.

"கோகிலம் புறப்படப் போகிருள்; வண்ணப்பட்டு நூலைப் போன்ற அவளுடைய மெல்லிய குரலும் 'அவளோடு போகப் போகிறது; அவள் இந்தக் கிராமத்திற்கு வந்ததிலிருந்து நான் என் உணவைப்பற்றியோ, உடையைப்பற்றியோ கவனிக்க வில்லை. மேகத்திரளுக்குள் ஊடுருவிப்பறக்கும் பருந்தைப்போல நான் பொழுதைக் கழித்தேன். என் உள்ளத்தைப் பூட்டிவிட்டு அவள் சாவியைக் கொண்டு போகப் போகிருள்" — சரவணப வாவின் இந்த ஏக்கத்திற்கு ஒலி இருந்திருக்குமாஞல் கோகிலத் தின் காது செவிடாகக் கூட ஆகியிருக்கும்.

வசந்தகோகிலம் தன்னிடம் விடை பெற்றுச் செல்ல வரு வாள். அவளை வெறுங்கையோடு அனுப்பக் கூடாது என்று எண்ணி அவளுக்கு ஒரு விலையுயர்ந்த காசு மாலையை அன்பளிப் பாகக் கொடுப்பதற்குக் காத்திருந்தான் சரவணபவா.

ஆஞல் நடந்ததென்ன?

இசைவாணி வசந்தகோகிலம் பனித்துளி தோய்ந்த ரோஜா மாலையோடு, மேகத்திலிருந்து குதித்ததைப்போல சரவணபவாவின் எதிரே வந்து நின்ருள்.

சரவணபவா அவன் கண்களையே நம்பவில்லை. தன்னுடைய கனவுதான் இப்படிக் கானலாகத் தோன்றுகிறதோ என்று அவன் குழம்பிஞன்.

"இசைவாணி!"

—அவள் அசையவில்லை.

இலேசாகச் சிரித்தாள். பெண்மைக்குத்தான் எவ்வளவு அற்புதமான சக்தி. ஆடவர்கள் அரைமணிநேரம் பேசிக்காட்டு வதை பெண்கள் அரைப்புன்னகையிலேயே பேசிக்காட்டி விடு கிறார்கள்.

சரவணபவா இருக்கையிலிருந்து எழுந்து தூணைப்பிடித்தான் அவன் ஏன் தூணைப் பிடிக்கவேண்டும்? தடுமாற்றமா? இல்லை; தன் முன்னே கோகிலமாகத் தோன்றுவது உண்மையான உரு-வந்தானு என்பதை அறிந்துகொள்ளவே அவன் தூணைப் பிடித் தான். அப்போது சரவணபவாவின் அன்னை அங்கே வந்தாள்.

''சரவணு! கோகிலா ராத்திரியே என்னிடம் சொல்லி விட் டாள். உன்னுடைய இலட்சியம் நிறைவேறி விட்டது. அவள் ஊருக்குத் திரும்பப்போவதில்லை''—என்று பெருமூச்சுக்கு மத்தி யில் அவனுடைய தாயார் அளந்து பேசினுள்.

அந்த மாளிகையில் பூசப்பட்டிருந்த வண்ணத்தையும் மிஞ்சி தினந்தோறும் அந்தச் சுவர்களில் கோகிலாவின் இசை படிந்துகொண்டிருந்தது. கோகிலத்தின் குரல் குளிர்ந்த இரவு நேரத்தில் அந்தக்கிராமத்துக்கே தாலாட்டாக அமைந்தது.

மலர்ந்து கொட்டிய மகிழம் பூக்களைப் போல அவளுடைய இசை, கோயில், குளம், மாளிகைகள், சேரிகள் அனைத்திலும் மணத்தது. திரவியங்களுக்குப் பாடி வந்த வசந்த கோகிலம் பசுஞ்சோலைகளுக்கு மத்தியில் அவளுடைய உள்ளத்தில் இன் பம் மகிழும் போது சுதந்திரமாகப் பாடும் கருங்குயிலாகிவிட் டாள். அமுத இசையில் மயங்கிக் கிடந்த அக்பரின் மாளிகை யைப்போல் சரவணபவாவின் மாடிவீடு சங்கீதத்தில் மிதக்கும் தெப்பமாகவே இருந்தது. அவள் இப்போது கச்சேரிக்குப்போவ தில்லை. காசுக்காகப் பாடிய அவள், காலமெல்லாம் செலவழித் தாலும் கரையாத செல்வம் தன் காலடியில் குவிந்திருக்கும் போது இப்போது எதற்காக அவள் காசுக்குப் பாடவேண்டும்?

பல்லாயிரக்கணக்கான மக்களின் கையொலிக்கிடையே இழையோடிய அவளுடைய குரல் தன்னை ஆட்கொண்ட ஒரே ஒரு இதயத்திற்காக மட்டும் ஒலித்தது.

''நீங்கள் ஏன் பொதுமேடைகளுக்குப் பாடவருவதில்லை

என்று யாராவது கேட்டால், பொழுது போக்கிற்காக என்னுடைய குரலை பத்தாயிரம்பேர் ரசிப்பதைவிட, வாழ்க்கையின் ஊன்றுகோலாக மதிக்கும் ஒருவருடைய ரசிகத்தன்மையே எனக்கு மேலானது'' — என்று அவள் சொன்னாள்.

''பூபாளம் பாடி அவரது பூ விழிகளை மலர வைக்கிறேன். நீலாம்பரி பாடி அவரை நித்திரையில் ஆழ்த்துகிறேன். இதை விட எனக்கென்ன கடமையிருக்கிறது?'' — என்று அவள் ஜானகியாக, சாவித்திரியாக, நளாயினியாகப் பேசினாள்.

என்று, கோகிலம் சரவணபவாவின் வீட்டிற்கு வந்தாளோ அன்று முதல் அவன் வீட்டைவிட்டு வெளியேறுவதில்லை. அவனது நண்பர்கள் ''சரவணபவா நொண்டியாகிவிட்டானா? அல்லது நடமாடமுடியாத அளவிற்கு அவனுக்கு நேத்திரம் கெட்டு விட்டதா? ஏன் இப்படி அடைக்கோழியாகிவிட்டான்?''-என்று கேலி செய்யத் தொடங்கிவிட்டார்கள். சரவணபவாவிற்கு இதெல்லாம் எங்கே எட்டப்போகிறது? மெலிந்த ஒற்றை நாடி சரீரமுடைய கோகிலம் பாடும்போது சரவணபவா பாம்பாக ஆடினான்.

தூங்குகிறவன் நெற்றி வியர்த்துக் கொட்டுவதைப் போல இசையிலே மயங்கி ஆடும் அவனுடைய நெற்றியும் வியர்த்துக் கொட்டியது. கண்ணாடிப் பாத்திரத்திற்குள் மூடிவைத்திருக்கும் இனிப்புப் பதார்த்தத்தைப்போல மனதை இழுக்கும் கோகிலத்தை அவன் ரசிக்கவில்லை. அவளது தேன் குரலையும் அந்தக் குரலின் தெளிவையுமே அவன் ரசித்தான்.

புருஷன் தன்னைப் பார்த்துச் சிரித்தால் அவன் தன்னையே அதிகமாக நேசிக்கிறான், தன் மீது மையல் கொண்டிருக்கிறான் என்று நினைக்கும் சாதாரணப்பெண்ணைப்போலவே கோகிலமும் நினைத்தாள் ராகங்களில் புதிய நுணுக்கங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று துடிக்கின்ற சங்கீதமேதையான அவள் தன்னை ஆட்கொண்டவனின் பார்வையில் உள்ள அந்தரங்கத்தை ஆராயவில்லை. அவளுக்கெதிரே உட்கார்ந்து அவன் ஆடுவதையும், 'ஆகா!' 'ஊகூ' என்று சபாஷ் போடுவதையுமே எண்ணி மகிழ்ந்தாள். தன்னுடைய குரல் அவளைக் கடவுள் மடியிலே''' கொண்டு சேர்த்துவிட்டதாக நினைத்தாள்.

ஆனுல் அவள் வாழக்கை......?

வசந்த கோகிலத்தின் குடும்பம் இ ர ண் டு மூன்று தலை முறைகளுக்கு முன்பிருந்தே இசையோடு இணைந்து வந்தது. அவளுடைய தகப்பனுர் புகழ்பெற்ற மி ரு த ங் க வித்துவான். தாயாரோ வீணைக் கச்சேரி நடத்துவதில் வல்லவர். இருவருக்கும் பிறந்த வசந்த கோகிலம் அவளது தொட்டில் பருவத்திலிருந்தே சங்கீதத்தையும் ஒரு உணவாகக் கொண்டு வளர்ந்தாள்.

வசந்த கோகிலம் பள்ளிப் பருவத்திலேயே பெ ரி ச் சி க் கோயில் மீனுட்சி சுந்தரம்பிள்ளையிடம் சங்கீதம் கற்ருள். அந்தக் காலத்தில் மீனுட்சிசுந்தரம் பிள்ளை சிட்சைக்கு நல்ல மதிப்பு இருந்து வந்தது. எண்சுவடி சொல்லிக் கொடுக்கும் ஏட்டுப் பள்ளிக் கூடத்து வாத்தியார் போல அவர் கடுமையாக நடந்து கொள்வார். “உடலுக்குத் தேகப்பயிற்சி எவ்வளவு அவசியமோ அதைப்போலவே இசைவாணர்களுக்கும் கு ர ல் ப யி ற் சி தேவை” என்று அவர் வாதாடுவார். எல்லோரும் இசைக்கலைஞர்களாக வந்துவிட முடியாது என்பது அவர் கருத்து. வேலை கிடைக்காதவன் ஏதாவது வேலை கொடுங்கள் என்று கேட்பதைப் போல பொழுது போகாதவனெல்லாம் இசைத்துறையில் இறங்கக்கூடாது; அப்படிப்பட்டவன் முன்னேறவும் முடியாது. அவனுல் இசையும் கெட்டுவிடும்—என்று அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பார்.

மீனுட்சிசுந்தரம்பிள்ளை ஒரு அலாதியான குணம் படைத்தவர். யார் அவரிடத்தில் சங்கீதம் பயில வந்தாலும் முதலில் அவர்களுக்கு இசையின்மீது இயற்கையிலேயே பற்று இருக்கிறதா என்று பரிசோதித்து விட்டுத்தான் சங்கீதம் கற்றுக் கொடுக்கத் தொடங்குவார்.

வசந்தகோகிலம் அவரிடம் சங்கீதம் பயிலச் சென்ற போது அவளுக்கு வயது பத்து இருக்கும். வர்ணம் பூசிய பளிங்குப் பொம்மையைப் போன்ற உருவம் உள்ள அவள் தன் குடும்பத்தின் இசையறிவை அப்படியே பிரதிபலித்தாள். தினசரி குரலைப் பக்குவம் செய்யாவிட்டால் வாத்தியார் தொடையில் கிள்ளு

வாரே என்ற பயம் ஆறுமாத காலத்திற்குள் அவளுடைய ரத்தத்தில் ஊறிப்போய்விட்டது. காலையில் ஐந்துமணிக்கு எழுந்துவிடுவாள். அவளுடைய தாயார் அவளைக் குளிப்பட்டி ஈரத்தலையோடு கோகிலத்தைப் பயிற்சிக்கு அனுப்புவாள். தேக்கு மரத்தைப்போன்ற அவளுடைய மாநிற உடம்பிற்கும் அவள் நெற்றியில் பூசியிருக்கும் திருநீறுக்கும் ஏதோ ஒரு சக்தி இருப்பது போல் மீனுட்சிசுந்தரம் பிள்ளை நினைத்தார்.

"என்னுடைய பெயரைக் காப்பாற்றப் போகிறவள் கோகிலம்தான்" — என்று எத்தனையோ முறை மீனுட்சி சுந்தரம் பிள்ளை வெளிப்படையாகச் சொல்லியிருக்கிருர். இதனுல் மற்ற பிள்ளைகள் கோகிலத்தின் மீது பொருமைப் படத்தான் செய்தார்கள். பிறர் பொருமைப் படுவதற்கும் ஒரு தகுதி வேண்டுமல்லவா! அந்தத் தகுதியை நூற்றுக்கு நூறு கோகிலம் பெற்றிருந்தாள். வசந்த கோகிலம் ஒவ்வொரு நாளும் அவள் குரலைச் சாதகம் செய்து கொள்ளுவதைப் பார்த்து மீனுட்சி சுந்தரம் பிள்ளையே திகைத்துப் போய்விடுவார். மாலையில் சொல்லிக் கொடுத்ததை மறுநாள் காலையில் பாடிக்காட்டுவதும், காலையில் மீனுட்சி சுந்தரம் பிள்ளை பாடிக்காட்டும் கீர்த்தனையை மாலையில் அவள் பாடிக்காட்டுவதும் கோகிலம் தெய்வப்பிறவியோ என்று மற்றவரை நினைக்க வைத்தது.

இப்படியே வசந்த கோகிலம் மீனுட்சிசுந்தரம் பிள்ளை தந்த இசைப் பயிற்சியில் வளர்ந்து அ ர ங் கே ற் ற மு ம் கண்டாள். மைசூர் மன்னர் தலைமையில் அவள் கச்சேரி அரங்கேறியது. அவளை ஆளாக்கிய மீனுட்சி சுந்தரம் பிள்ளைக்கு வசந்த கோகிலத்தின் தந்தை ஆ யி ர ம் வெண் பொற்காசுகளை வழங்கினுர். ஆனுல் அதிலெல்லாம் மீனுட்சி சுந்தரம் பிள்ளை திருப்திப்படவில்லை. அவருடைய உள்ளத்தில் ஒருவிதமான ஆசை மறைந்து கிடந்தது. அதை எப்படி வெளிப்படுத்துவது என்று அவர் நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

அரங்கேற்றம் முடிந்த அன்று இரவு மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவருடைய வீட்டு மொட்டை மாடியில் படுத்துக் கொண்டு விடிய விடியச் சிந்தித்தார். "புதையல் இருப்பது கண்ணுக்குத்

தெரிகிறது; ஆனால் அதை எப்படி எடுப்பது என்று தான் எனக்குப் புலப்படவில்லை" — என்று அவர் முணங்கிக் கொண்டிருந்தார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்குக் கலிய மூர்த்தி ஒரே மகன். அவன் கோகிலத்தின் தந்தை தியாகராஜ பிள்ளையிடம் மிருதங்கம் பயின்று வந்தான். மீனாட்சிசுந்தரம் பிள்ளை, கலியமூர்த்திக்குக் கோகிலத்தை முடித்து வைத்துவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார். தனக்கும் ஒரே பிள்ளை, தியாகராஜ பிள்ளைக்கும் கோகிலம் ஒரே பெண்தான். இருவருக்கும் திருமணம் நடந்துவிட்டால் இரண்டு பேரும் சிக்கல் இல்லாமல் இருப்பார்கள் என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை நினைத்தார், ஆனால் கோகிலத்தின் தந்தை தியாகராஜ பிள்ளை என்ன நினைத்தாரோ தெரியவில்லை முடிவான பதில் எதுவும் சொல்லாமல் காலத்தைக் கடத்திக் கொண்டே வந்தார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்குப் பொறுமையில்லை. சீக்கிரமாக ஒரு முடிவைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவர் நினைத்து நேராகத் தியாகராஜ பிள்ளை வீட்டிற்குச் சென்று கடைசி முறையாகக் கேட்டார்.

தியாகராஜ பிள்ளை தயங்கவில்லை. மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் சொல்லுவதற்குக் கூச்சப்பட்டுக் கொண்டிருந்த பதிலை அன்று அவர் படீரென்று சொல்லிவிட்டார். "என்னுடைய மகள் கோகிலம் அவளைவிடச் சிறந்த வாய்ப்பாட்டுக்காரனைத் தான் மணக்க விரும்புகிறாள்" என்று தியாகராஜ பிள்ளை சொன்னதும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை கொதித்துப்போனார்

"அப்படியா! கோகிலமா அப்படிச் சொன்னாள்? சரி; கோகிலத்தின் முடிவுதான் உங்களுடைய முடிவா?" — மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆழமாகப் பேசினார்.

"வாழப்போகிறவள் அவள்தானே! இதில் நான் ஏன் குறுக்கிட வேண்டும்?" — என்று அடக்கமாகப் பதில் சொன்னார். தியாகராஜபிள்ளை.

"நான் அதைக் கேட்கவில்லை. வாய்ப்பாட்டைவிட மிருதங்கம் மட்டமான தொழிலா? நீயோ ஒரு மிருதங்க வித்துவான்.

நானே வாய்ப்பாட்டுக்காரன், உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? உனக்குக் கையிலே இசை இருக்கிறது, எனக்கோ வாயிலே இசை இருக்கிறது. அதற்காக உன்னை விட நான் பெரியவன் என்று பேசிவிட முடியுமா?'' — மீனாட்சிசுந்தரம் பிள்ளை மிக்க விநயத்தோடு பேசினார்.

இந்த நேரத்தில் மாடியிலிருந்து கோகிலம் ஏதோ ஒரு பாட்டை முணங்கிக் கொண்டே கீழே இறங்கி வந்தாள். திண்ணையில் அவளுடைய தந்தையும் அவளுடைய வாத்தியாரும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டாள். மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு உள்ளம் படபடத்தது அவர் நெஞ்சிலே எதையும் தேக்கி வைத்துப் பழக்கப்படாதவர்.

"என்னம்மா கோகிலம்? வாய்ப்பாட்டுக்காரனைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன் என்று சொன்னாயாமே!'' என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை கேட்டுவிட்டார்.

அதற்காக கோகிலாவும் மடங்கிப்பேசவில்லை. "அவரவர் எதிர்காலத்தைப் பற்றி யோசித்துத்தானே எதையும் முடிவு செய்ய வேண்டும். அதனால்தான் அப்படிச் சொன்னேன் நான் புருஷனைவிட சம்பாதித்தால் அது குடும்பத்திற்கு நல்லதல்ல. அதற்காகத்தான் என்னைவிடச் சம்பாதிக்கும் ஒருவரைத் தேடுகிறேன். இந்த முடிவு என்னுடைய சங்கீதப் பயிற்சிக்கு எந்த வகையிலும் குந்தகம் ஏற்படக்கூடாது என்பதனால் எடுத்த முடிவுதான். கலியமூர்த்தியை அவமானப்படுத்த வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை'' — என்று கோகிலம் ஓர் ஆலாபனையே நடத்தி விட்டாள்.

"கோகிலா! நீ மறைத்துப் பேசுகிறாய் உன்னுடைய குரலுக்குள்ள மகத்துவத்தை மனதிலே வைத்துக் கொண்டு நீ சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறாய். உன்னைவிட என் மகன் சம்பாதிக்கக்கூடியவன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் உன் தந்தை தியாகராஜ பிள்ளைக்கு அடுத்தபடியாகப் புகழ் பெற்றவன் கலியமூர்த்திதான். தொடக்கத்திலேயே உன் எண்ணம் இதுதான் என்று சொல்லியிருந்தால் இத்தனை நாள் நான் காத்திருக்கவும் மாட்டேன். இவ்வளவு தூரம் மனச்சங்கடமும் ஏற்

பட்டிருக்காது. கோகிலா! ஒன்றை மட்டும் சொல்லி வைக்கிறேன். நீ எப்பொழுது மிருதங்கத்தைவிட வாய்ப்பாட்டே உயர்ந்தது என்று சொல்லிவிட்டாயோ அப்போதே நான் முடிவு செய்துவிட்டேன் உனக்கு உணர்த்துவதற்காகவாவது உன்னைப்போல் ஒரு பாடகியைத்தான் என் மகன் கலியமூர்த்திக்கு திருமணம் செய்து வைக்கப்போகிறேன். நான் யாரிடமும் சபதம் செய்வதில்லை. இன்று என்னுடைய சிஷ்யையிடத்திலேயே நான் இந்தச் சபதத்தைச் செய்கிறேன்'' — என்று சொல்லிவிட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வேகமாக வீட்டைவிட்டு வெளியேறினார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை போனபிறகு கோகிலத்தை அவளது தந்தை தியாகராஜபிள்ளை மிகவும் கடிந்து கொண்டார்.

"என்ன இருந்தாலும் நீ என்னை வைத்துக் கொண்டு இப்படிப் பேசியிருக்கக் கூடாது மீனாட்சி சுந்தரம் ஒரு முரடன். கோபம் வந்து விட்டால் மாந்திரீகனைப் போல் கதறுவான், ஊரெல்லாம் பிரச்சாரம் செய்வான்'' — என்றார் தியாகராஜ பிள்ளை.

"இது சாதாராண விஷயமில்லையே அப்பா. ஒளித்து மறைத்துப் பேசக்கூடிய காரியமுமில்லை. நீ குற்றவாளியா இல்லையா என்று கேட்கிற இடத்தில் நான் யோசித்துச்சொல்லுகிறேன் என்று சொல்லமுடியுமா? அதுமாதிரித் தான் இதுவும். உங்களுக்கு விருப்பமானால் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நான் சங்கீதத்தை விட்டுவிட வேண்டும்'' — என்று பதில் சொன்னாள் கோகிலம்

"சரி, நடந்தது நடந்துவிட்டது. இனிமேல்தான் நீ புருஷனை தேர்ந்தெடுப்பதில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால் உன்னைப்போல் ஒரு பாடகியைத்தான் மருமகளாக்கப் போகிறேன் என்று சபதம் செய்துவிட்டுப் போயிருக்கிறான்'' — என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னார் தியாகராஜ பிள்ளை.

"பாடகிகள் அவருக்குக் கிடைக்கலாம். ஆனால் எனக்கு மேல் சிறந்த பாடகி யார் இருக்கிறார்கள்?''

"அப்படி நினைக்காதே! முத்துலெட்சுமி இருக்கிறாள். அவள் தானே இப்போது தமிழ்நாட்டில் பெரிய கச்சேரிக்காரி. காசியி லிருந்து கன்னியாகுமரி வரை அவள் கச்சேரி நடக்கிறது.

"முத்துலெட்சுமி எங்கே! கலியமூர்த்தி எங்கே! ராஜபோ கத்தோடிருக்கும் பெரும் பெரும் ஐமீந்தார்களைக்கூட அவள் திருமணம் செய்துகொள்ள மறுத்து விட்டாளே?"

"ஒரு பெண்ணினுடைய வாழ்க்கையில் எதுவும் நடக்க லாம். எப்படியும் நடக்கலாம். அதை நாம் கணக்குப் போட்டு பார்க்க முடியாது" — தியாகராஜபிள்ளை இப்படிச் சொன்னது கோகிலத்தின் மனத்தில் நெருஞ்சி முள் குத்துவதுபோல் இருந்தது.

அன்றிலிருந்தே கோகிலம் அவளுடைய எதிர்காலத்தைப் பற்றிக் கோட்டைகட்ட ஆரம்பித்தாள். தனக்கு வாய்க்க இருக்கும் புருஷன் சிறந்த சங்கீத வித்வானாக வரவேண்டுமென அவள் ஆசைப்பட்டாள். இல்லாவிட்டாலும் தன்னுடைய சங் கீதத்திற்குப் பாதகம் உண்டாக்காத ஒரு இலட்சாதிபதி கிடைத்தாலும் போதும் என்று கருதினாள். அவளுடைய குறிக் கோள், தனக்கு வரவிருக்கும் புருஷன் தன்னைவிட செல்வத்தில் உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என்பதுதான்.

மனிதர்கள் வாழ்க்கையின் வெற்றிக்கு தங்களுக்குப்பிடித்த மான தத்துவங்களை ஊன்றுகோல்களாகப் பிடித்துக் கொள் கிறார்கள், குடும்பப்பெண்ணாக இருக்கவேண்டும் என்று ஆசைப் படுகிறவள் தனக்கு வாய்க்கும் புருஷனுக்குப் பணமில்லா விட் டாலும் பரவாயில்லை, குணமுள்ளவனாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். உத்தியோகம் பார்க்கும் பெண்ணோ தனது புருஷன் தன்னைவிட படித்திருக்க வேண்டும் எனக்கனவு காண்கிறாள். அதைப் போல்தான் கோகிலத்தின் எண்ணமும் இசையோடு ஒட்டி ஓடியது. தமிழ்நாட்டில், இன்பமாக வாழ வேண்டும் என்று கருதுகிற எந்தப் பெண்ணும் கணவன் தன்னை விட உயர்ந்தே இருக்க வேண்டும் என்றுதான் கருதுகிறாள். இதுதானே தமிழ்நாட்டுக்கு உள்ள தனிச்சிறப்பு!

பெரிச்சிக்கோயில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தன் மகன்

கலியமூர்த்திக்குத் திருமணம் செய்து வைப்பதை ஒரு பலப் பரீட்சையாகவே கருதிவிட்டார். எங்கெங்கே சங்கீதம் படித்தவர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அலைந்து பார்த்தார். அவர் போன இடங்களிலெல்லாம், "என்ன உங்கப் பையனுக்கா பெண் கிடைக்கவில்லை? ரதி மாதிரி இருப்பாளே உங்கள் சிஷ்யை வசந்தகோகிலம், அவளைவிடவா உங்களுக்குப் பெண் வேண்டும்" என்று அவரது நண்பர்கள் சொன்னது மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு மேற்கொண்டு எரிச்சலை உண்டாக்கி விட்டது.

"ரதியாம், மேனகையாம், நான் என்ன அழகான பெண் கிடைக்காமலா சுற்றிக்கொண்டிருக்கிறேன்! பைத்தியக்காரப் பிள்ளைகள்! எவளுடைய குரலில் லயமும் சுருதியும் இருக்கிறதோ, எவள் பாடினால் மேகமே கசிந்து பிதிர்ந்து உதிருமோ அவளையல்லவா நான் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று மீனாட்சி சுந்தரம் மனம் கொதிக்கத் தனக்குள்ளே பதில் சொல்லிக்கொண்டார். அப்படிப்பட்ட நேரங்களிலெல்லாம் அவரது நரம்புகளில் ரத்தத்திற்குப் பதிலாக வெறியும் கோபமும் பாய்ந்து கொண்டிருக்கும்.

மீனாட்சி சுந்தரம் ஆறுமாத காலம் தஞ்சாவூர் ஜில்லா முழுவதும் பெண் தேடி அலைந்தார். எந்த ஊரிலும் அவர் விருப்பப்படி பெண் கிடைக்கவில்லை. மெத்த வருத்தத்தோடு அவர் ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். ரயிலில் அவருக்குத் தூக்கமே வரவில்லை. எப்போது விடியும் என்று விழித்துக் கொண்டே இருந்த அவருக்கு மாயவரத்தைப் பார்த்ததும் மணி ஐந்தாகிவிட்டது என்ற உற்சாகத்தில் ரயிலை விட்டு இறங்கி பிளாட்பாரத்தில் உலாத்தினார். அப்போது அவர் கண்களை ஒரு வர்ணச் சுவரொட்டி சுண்டி இழுத்தது. அது ஒரு சங்கீதக்கச்சேரி விளம்பரச் சுவரொட்டி, அந்தச் சுவரொட்டியைப் பார்த்ததும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் உள்ளத்தில் ஒரு மின்வெட்டுத் தெரித்தது.

"ஏன் இந்த முத்துலெட்சுமி என்ன சாமான்யப்பட்டவளா? இன்றைக்குச் சங்கீத உலகத்திலே இவளுக்கும் கோகிலா

வுக்கும் தானே போட்டாப் போட்டி!'' — மீனுட்சி சுந்தரம் பெட்டியை எடுத்துக் கொண்டு மாயவரத்திலேயே இறங்கி விட்டார்.

கச்சேரி, அன்று மாலே ஐந்து மணிக்கு என்று போட்டிருந் தது. முத்துலெட்சுமி எங்கே தங்கியிருப்பாள்? ஒருவேளை முஜா பரி பங்களாவில் தங்கியிருந்தாலும் தங்கியிருப்பாள் —மீனுட்சி சுந்தரம்பிள்ளை ஒரு மாட்டு வண்டியை வாடகைக்குப்பிடித்துக் கொண்டு முஜாபரி பங்களாப் பக்கமாகப் போனுர்.

அப்போதுதான் பொழுது புலர்ந்தது. ஹோட்டல்களில் ரேடியோப் பெட்டிகள் பாடத் தொடங்கின. மாயவரம்காபி பெயர் பெற்றதாயிற்றே! மீனுட்சிசுந்தரம் ஒரு கடையில் வண் டியை நிறுத்திவிட்டு காபி சாப்பிட இறங்கினுர். வண்டியை விட்டு இறங்கி, இரண்டு அடிதான் அவர் எடுத்து வைத்திருப் பார் — அந்தக் கடை ரேடியோ ஒரு இனிய குரலில் பூபாள ராகத்தைப் பிழிந்து கொட்டத்தொடங்கியது. மணம் நிறைந்த மல்லிகைப் பூக்களை உச்சி முதல் உள்ளங்கால் வரை சொரிவது போல் இருந்தது அவருக்கு! பூபாளத்தின் ஸ்வரங்கள் மீனுட்சி யைப் பனிப்பெட்டிக்குள் அடைத்து விட்டதுபோல் தெரிந்தது.

''எவ்வளவு அற்புதமான குரல்! மதுவைவிட இசைக்குத் தான் போதை மிகுதி! இசை போதைக்கு மிஞ்சிய போதை எதுவுமே இல்லை'' என்று சொல்லிக் கொண்டே மீனுட்சி சுந்தரம்பிள்ளை அந்த ஹோட்டலுக்குள் நுழைந்தார்.

'அடே, மீனுட்சியா? எங்கே இருந்தப்பா, இப்படி வர்றே! வா, காபி சாப்பிடு'' என்று ஒரு குரல் ஹோட்டலின் உள்ளே யிருந்து வரவேற்றது மீனுட்சியை.

''நீயா, வடிவேலு! பத்து வருஷத்துக்கு முன்னுலே ஒன்னை திருவையாத்திலே பாத்ததுதான்! அதுக்கப்புறம் இன்னிக்குத் தான் பார்க்கிறேன். என்ன இப்படி மாயவரம் பக்கம் வந் திருக்கே!'' — மீனுட்சி, அவரது பழைய நண்பரைப் பார்த்துக் கேட்டார்.

''இன்னக்கி நம்ப பாப்பா கச்சேரி இருக்கே! அதுதான் முத்துலெட்சுமி! அதுக்காகத் தொணைக்கு வந்தேன். இப்பக்

கூட பாப்பாவுக்குக் காப்பி வாங்கத்தான் வந்திருக்கேன்'' என்றார் புதிய நண்பர் வடிவேலு.

“ரொம்பச் சந்தோஷம், வடிவேலு! ரேடியோவிலே கேட்டியா ஒரு குரலை! மலர் மாரி பொழிவது போலில்லை?'' என்று ஏக்கத்தோடு கேட்டார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை.

“ஆஹா, அது என்ன அமுதக் குரலாயிற்றே! வசந்த கோகிலத்தின் குரல் அப்படித்தானே இருக்கும்?'' என்றார் வடிவேலு.

மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு முகம் வியர்த்து விட்டது. வானொலியில் கேட்ட அந்தப்பாட்டு முத்துலெட்சுமி பாடியதாகத்தானிருக்கும் என்று அவர் நினைத்தார்.

“என்ன அற்புதமான குரல்! ஒரு இடத்திலாவது பிசிறு தட்டவேண்டுமே! சொற்கள் பூத்தொடுத்தாற்போல் வந்து விழுகின்றன!'' — தனக்குள்ளே பிரமித்துக் கொண்டார்.

ஓட்டல் சிப்பந்தி மேஜையில் காபி வைத்தது கூட அவருக்குத் தெரியவில்லை.

“முத்துலெட்சுமியின் குரல் இதற்கு மேல் இனிமையாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். எப்போதோ ஒரு முறை கேட்ட ஞாபகம். சங்கீதத்தையே தொழிலாகக் கொண்டவனுக்கு எந்தக் குரல் நினைவிருக்கப் போகிறது? இன்றைக்குக் கேட்டு விட்டால் போகிறது'' — என்று பேசிக் கொண்டே வடிவேலுவை அழைத்துக் கொண்டு மீனாட்சிசுந்தரம் பிள்ளை முஜாபரி பங்களாவிற்கு நடந்தார்.

முஜாபரி பங்களாவில் ஒரே தடபுடலாக இருந்தது. சங்கீதக் கூட்டத்திற்கே உரிய வெள்ளிக் கூஜா, வெள்ளி வெற்றிலைப் பெட்டி! எடுபிடியாட்கள், இங்குமங்கும் பரபரப்பாக ஓடிக் கொண்டிருந்தனர். முத்துலெட்சுமியைப் பார்ப்பதற்காக வெளியூர்களிலிருந்து வந்த பல மிராசுதாரர்கள் காத்துக் கிடந்தார்கள். அவர்கள் தங்கள் வீட்டில் நடைபெறக் கூடிய விழாக்களுக்கு முத்து லெட்சுமியைப் 'புக்' செய்ய வந்திருந்தார்கள். அவர்கள் வரிசையில் மீனாட்சி சுந்தரமும் போய் உட்கார்ந்தார்.

மிராசுதாரர்கள் முணு முணுத்துக் கொண்டேயிருந்தார்

கள். கும்பகோணம் வெற்றிலைச் சீவல் காலியாகிக் கொண்டிருந்தது. பாடகி முத்துலெட்சுமி யாரையும் பேட்டிக்கு அழைத்த பாடில்லை. அம்மா தூங்குறாங்க என்பான் ஒருவன். பத்து நிமிஷம் கழித்து இன்னொருவனைக் கேட்டால் அம்மா குளித்துவிட்டு சாதகம் செய்துகொண்டிருக்கிறாங்க என்பான், இந்தப் பதில் காத்துக்கிடந்த மிராசுதாரர்களுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

"ஏப்பா வெத்திலைப் பெட்டி! இந்த முஜாபரி பங்களாவிலே அந்தப் பக்கம் ஏதாகிலும் பாதையிருக்கா?"— என்று கோபமாகக் கேட்டார் ஒரு மிராசுதார்.

"என்னங்க அப்படிக் கேட்டுப்புட்டீங்க!"— என்று கடிப்பதைப் போல் பதில் சொன்னான் எடுபிடி.

"இல்லே. நாங்க ரெண்டுமணி நேரமாகக் காத்துக் கிடக்கிறோம். முத்துலெட்சுமி அம்மா வேறெ பக்கம் கச்சேரிக்குப் போயிற போறாங்களோன்னு கேட்டோம். நீ வேறெ ஒண்ணும் தப்பா நெனைச்சுக்கிடாதே"—என்று அவனைச் சமாதானப்படுத்தினார் அடுத்த மிராசுதார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை சாகித்ய கர்த்தா அல்லவா— அவர் ஏதோ சாகித்யத்தை முணங்கிக் கொண்டேயிருந்தார். அவரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துத் தாங்க முடியாமல் வெத்திலைப் பெட்டிக்காரனை ஒரு ஏவு ஏவினார்.

"இந்தாப்பா! பெரிச்சிக்கோயில் மீனாட்சிசுந்தரம் பிள்ளை வந்திருக்கேன்னு ஒங்கம்மா காதிலே போடு"—என்று கடுப்பாக சொன்னார் மீனாட்சிசுந்தரம்.

"பெரிய பெரிய மிராசுதார்களே காத்துக் கிடக்கிறாங்க. அதுங்காட்டியும் உங்களுக்கென்னவாம்?" — என்று வெத்திலைப் பெட்டி எகிறிக் குதித்தான்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பெருமூச்சு விட்டார். கூட்டம் அப்போது அதிகமாகக் கூடிவிட்டது. புதிய புதிய பண்ணையார்களெல்லாம் வந்து கொண்டிருந்தார்கள்.

"இன்னைக்கு நமக்குப் பேட்டி கிடைக்காது" என்று குறிச்சியை விட்டு எழுந்தார். அதற்குள்ளாக வெத்திலைப் பெட்டி

ஓடோடி வந்து "சேவிக்கிறேன், ஐயாட்டே தெரியாமெ மரியா தைக்குறைவா நடந்திட்டேன். அம்மா உங்களைக் கூட்டி வரச் சொன்னுங்க!"—என்று பவ்யமாகச் சொல்லி, மீனுட்சிசுந்தரம் பிள்ளையை அழைத்துப் போனுன். வெளியே காத்திருந்த மிராசு தாரர்களுக்கு முகம் சிறுத்து விட்டது. அப்போதுதான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை ஒரு பெரிய ஆசாமியாக இருக்கும் என்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

முத்துலெட்சுமி மீனுட்சிசுந்தரம் பிள்ளையை உரிய மரியா தையுடன் வரவேற்ருள். அவளுக்காக வைத்திருந்த பசும்பாலை வெள்ளிக்கிண்ணத்தில் ஊற்றி அவருக்கு கொடுத்தாள். முத்து லெட்சுமியின் ஒவ்வொரு நடவடிக்கையும் இசைமயமாகவே இருந்தது. பைரவி ராகத்தை சுவற்றிலே கோடு கிழிப்பதைப் போல முணங்கிக் கொண்டே இருந்தாள்.

மீனுட்சிசுந்தரம் பிள்ளைக்கு தான் வந்த விஷயத்தைப்பேசு வதற்குக் கூச்சமாக இருந்தது. முத்துலெட்சுமி எந்தக் கட்டத்தி லேயும் தன்னுடைய எதிர்காலம், குடும்பம், சொத்துப் பற்று— எதைப் பற்றியும் பேச்சை எடுக்கவில்லை. ராகம், சாகித்யம், குர லில் இருக்கவேண்டிய நெளிவு சுளிவு இழைப்புகள் இவைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். இருந்தாலும் மீனுட்சி சுந்தரம் பிள்ளையிடத்தில் அவளுக்குத் தனி மரியாதை இருக் கிறது என்பதைக் காட்டிக் கொண்டாள். மீனுட்சிசுந்தரம் பிள்ளை சோபாவில் இருந்தபோது அவள் தரையிலிருந்தாள். அவர் எழுந்து வெற்றிலை எச்சிலைத் துப்பச் செல்லுகிறபோது அவள் எழுந்து நின்று கொள்வாள். அவளுடைய கழுத்திலே வயிர முத்துச்சரம் இருந்தாலும் நெஞ்சிலே காசு மாலை தொங்கி னுலும் அவள் உள்ளத்தில் அடக்கமும் மரியாதையும் இருந்தது.

இவ்வளவு அழகும் செல்வமும் இனிய குரலும் புகழும் உள்ள இளம்பெண்ணை அடக்கி ஆள்வதற்குத் தன் மகனுக்கு ஆற்றல் உண்டா என்று மீனுட்சி சுந்தரம் பிள்ளைக்கு மனத்துக் குள்ளே ஒரு சந்தேகம் எழுந்தது.

வசந்தகோகிலம் அவரிடத்திலே சங்கீதப் பயிற்சி பெற்ற தால் அன்று மீனுட்சி சுந்தரம் பிள்ளைக்கு அந்த எண்ணம் தோன்றவில்லை. முன்பின் பழக்கமில்லாமல் திடீரென்று முத்து

லெட்சுமியினுடைய தோற்றத்தையும் சுற்றுச் சார்பையும் பார்த்தவுடன் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு அந்த எண்ணம் தோன்றியது.

"எங்கே இப்படிக் கிளம்பி வந்துவிட்டீர்கள்" முத்து லெட்சுமி பேச்சைத் தொடுத்தாள்.

"பட்டணத்துக்குப் போயிட்டு வர்றேன். மாயவரம் ஜங்ஷனில் உன் கச்சேரி சுவரொட்டியைப் பார்த்தேன். கேட்டுவிட்டுப் போகலாம் என்று இறங்கிவிட்டேன்" என்றார் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

"ரொம்பச் சந்தோஷம், இன்றைக்கு என் கச்சேரி இலக்கண வரம்பை மீறாமல் நடக்கவேண்டும் இல்லையா? உங்களை வைத்துக் கொண்டு கோகிலம் எப்போதாவது கச்சேரி செய்திருக்கிறாளோ?"

"ஓ! நிறைய செய்திருக்கிறாள். ஆனால் அவளிடம் சேஷ்டைகள் அதிகம். ஆணோ பெண்ணோ பாடும்போதும் முகம் அழகாக இருக்கவேண்டும். அதுவே கச்சேரிக்கு ஒரு கலை! முகக்கலை என்று எதற்காகச் சொல்லுகிறார்கள். அதற்காகத்தானே! யாரும் அழும்போது முகம் பயங்கரமாக இருக்கலாம். சினம் கொள்ளும் போது முகம் சிவப்பாக இருக்கலாம். பிறரை மகிழ்வித்துத் தானும் மகிழும் போது முகத்தினுடைய அழகு ஏன் மாறவேண்டும்! மனோரஞ்சிதம் வாசமுள்ள மலர்தான்; ஆனால் அதைச் சட்டைப்பைக்குள் போட்டுக் கொள்ளலாமே தவிர, சடையில் வைத்துக்கொள்ளமுடியுமா? அதுபோலத்தான் என்னதான் குரல் இனிமையாக இருந்தாலும் பாடுகின்றவர்களுடைய முகாபவமும் களையாக இல்லையென்றால் அந்தக் கச்சேரியைத் தூரத்தில் இருந்து ஒலிபெருக்கியில் கேட்கலாமே தவிர பந்தலில் உட்கார்ந்து பார்த்து ரசிக்க முடியாது." மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் இந்தப் பேச்சு முத்துலெட்சுமியின் மனதை சுருக்கென்று தைத்தது.

"என்ன இப்படிச் சொல்லி விட்டீர்கள்? கோகிலத்தின் இனிய குரலும் குளிர்ந்த முகமும் சங்கீத உலகத்தையே சுண்டியிழுத்துக் கொண்டிக்கிறது என்கிறார்களே" — முத்துலெட்சுமி தொடர்ந்து கேட்டாள்.

மீனுட்சிசுந்தரம் பிள்ளே லேசாகச் சிரித்து "இந்தாம்மா முத்துலெட்சுமி! சங்கீதம், கலே — இரண்டிஞலும் வரும் புகழ் காரணமில்லாமல் உயரும், காரணமில்லாமல் கவிழும். உயரும் போது அதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. கவிழும்போது அதை யாரும் தூக்கி நிறுத்தி விடவும் முடியாது. உன்னேப் பற்றி யும் அப்படித்தான் வெளியே பேசிக் கொள்கிருர்கள். உன்னு டைய பேச்சில் நான் பெருந்தன்மையைப் பார்க்கிறேன். அடக் கத்தைக் காண்கிறேன். ஆனல் நீ யாரையும் மதிப்பதில்லே என்று வெளியே சொல்லிக் கொள்ளுகிருர்கள். பெரும் புக ழுக்கு ஆளானவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் இடையில் எப்படியோ ஒரு நெடுஞ்சுவர் வந்து விடுகிறது. உள்ளே நடப் பது ஜனங்களுக்குத் தெரிவதில்லே. ஜனங்கள் பேசுவது உள்ளே கேட்பதில்லே!" — மீனுட்சிசுந்தரம் பிள்ளே வெற்றிலே போட்டுக் கொண்டே பேசிக் கொண்டிருந்தார்.

முத்துலெட்சுமி பேசிக்கொண்டே, தம்புராவைத் தூக்கி வந்து தரையில் உட்கார்ந்தாள். தம்புரா சிவப்புப்பட்டுத் துணி யால் மூடப்பட்டிருந்தது. அந்தந் துணியை வலக்கரத்தால் எடுத்துவிட்டு மெல்லச் சுருதி சேர்த்தாள். சுருதி சரியாகச் சேர வில்லே துவக்கத்திலேயே அது பஞ்சமத்திற்குச் சென்றுவிட்டது.

காலில் நெருப்புப் பட்டவரைப் போல மீனுட்சிசுந்தரம் பிள்ளே முகத்தைச் சுளித்தார். "நிறுத்தும்மா! உனக்கு மனம் சரியில்லா விட்டால் விரல்களின் ஒத்துழைப்புக் கிடைக்காது. எப்போது எடுத்த எடுப்பிலேயே பஞ்சமத்திற்குப் போய் விட்டதோ அதற்குப் பிறகு ஆயுதத்தை வைத்துவிட வேண்டி யதுதான்". மீனுட்சிசுந்தரம் பிள்ளே இசைத்துறையில் தனக் குள்ள பாண்டித்தியத்தை வெளிக் காட்டிஞர்.

"நீங்க சொல்வது உண்மைதான். கோகிலத்தைப் பற்றி பேச்சு எடுத்ததும் என் மனத்திலே ஒரு குழப்பம், ஓர் அதிர்ச்சி அந்தப் பரபரப்பிலே தான் நான் தம்புராவை எடுத்தேன்" — என்று சொல்லிவிட்டு தம்புராவை மறுபடியும் இருந்த இடத்தி லேயே வைத்துவிட்டாள் முத்துலெட்சுமி.

"யார் எந்தத்துறையில் வல்லுநராக இருக்கிருர்களோ அவர் அந்தத் துறையில் ஆருடராகக் கூட ஆகலாம். அந்த

ஆரூடம் பலிக்கவில்லையென்றால் அந்தத்துறையில் அவர்கள் சரியாகப் பயிற்சி பெறவில்லை என்பதுதான் அர்த்தம்.''

"சங்கீதத்திலும் ஆரூடம் உண்டோ?'' —முத்துலெட்சுமி ஒரு அடிப்படைக் கேள்வியைப் போட்டாள். "ஆரூடம் என்பது என்ன? அது ஒரு வகையான கணக்கு. அந்தக் கணக்கு இசைக்கும் உண்டு. மொழிக்கு உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் இருப்பதைப்போல இசைக்கு ஏழு ஸ்வரங்கள் இருக்கின்றன. கோபம், தாபம், காதல், ஆவேசம், வெறுப்பு, கருணை, வைராக்கியம் — இவைகளைக் கூட அந்த ஏழு ஸ்வரங்களுக்கு இணையாகச் சொல்லலாம். உலகத்தில் உள்ள இந்த ஏழு நிலைகளை ஒன்றாக இணைத்துக் கட்டிப்பிடித்து திருகிக்கொண்டு ஓடுவது இசையின் ஸ்வரங்கள்தாம்.''

—மீனாட்சிசுந்தரம் பிள்ளை இசையின் தத்துவத்தை விளக்க ஆரம்பித்தார்.

முத்துலெட்சுமிக்கு இசையிலே லயிப்பு இருந்ததால் இந்த விளக்கம் அவளுக்குச் சுவையாக இருந்தது. அவள் அடுத்த கேள்வியைக் கேட்டாள்.

"நீங்கள் ஏழு ஸ்வரங்கள் என்று சாதாரணமாகச் சொல்லி விட்டீர்கள். அதைப் பயிலுவதற்கு எவ்வளவு ஆண்டுகள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது? காலையில் ஐந்து மணிக்கு எழுந்திருக்க வேண்டும். குரலைச் சாதகம் செய்ய வேண்டும். அதைப் போல் மாலையிலேயும் செய்யவேண்டும். சாகித்யத்தை மனப்பாடம் செய்யவேண்டும். இப்படி எத்தனை ஆண்டுகள் கஷ்டப்பட்டு இந்த ஏழிசையைக் கற்கவேண்டியிருக்கிறது!'' — என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே பதில் சொன்னாள் முத்துலெட்சுமி.

"ஏழு ஸ்வரங்களும் சாமான்யப்பட்டவையா? ஏழும் வைரங்கள். அதுவும் காலங்களை வெல்லும் வைரங்கள். உண்மையிலேயே இசையின்மீது மானசீகமாகப் பற்றுக் கொண்டவர்களுக்குத்தான் இந்த ஏழு ஸ்வரங்களும் பயிற்சிக்கு வரும். யோக சாதனைக்கு இவ்வளவு கடினம் இல்லை. காட்டிலே தவம் செய்வதுகூட இதைவிடச் சுலபம்தான்'' — மீனாட்சிசுந்தரம்

பிள்ளை இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது வெத்திலைப் பெட்டி உள்ளே ஓடிவந்து "வெளியில் கூட்டம் கூடிவிட்டது. சங்கீத சபைக்காரர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள்" என்ற தகவலைக் கொடுத்தான்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு, வந்த விஷயத்தைப் பேச முடியவில்லையே என்று தர்மசங்கடமாக இருந்தது. இருந்தாலும் கடைசியாக ஒரு கேள்வியைக் கேட்டு வைப்போம் என்று நினைத்து "உனக்கு என்ன வயதாகிறது? உன் எதிர்காலத்தைப் பற்றி என்ன முடிவு செய்து வைத்திருக்கிறாய்?" என்று கேட்டு வைத்தார்.

"என் வயதைப் பற்றிக் கவலைப்படவேண்டிய நினைப்புக்கள் அழிந்து போய்விட்டன. நான் ஸ்வரங்களிலேயே என்னை மறந்து விட விரும்புகிறேன். என்னுடைய வாழ்க்கை சங்கீதம் என்ற தண்டவாளத்திலேயே ஓடட்டும் என்று விட்டுவிட்டேன். ஒரு பெண் சங்கீதத்திலேயே அதிகமாக ஈடுபாடு கொண்டு விட்டால் அவள் யாருக்கும் பணிந்து போக விரும்பமாட்டாள். சங்கீதமும் ஒருவிதமான செருக்குத்தான். நீங்களே சொல்லுங்கள், எனக்கு நிறைய பணம் இருக்கிறது. நிறைய புகழ் இருக்கிறது, நான் யாரையாவது மணந்துகொள்ள வேண்டுமென்றால் எல்லாவற்றிலும் என்னைவிடச் சிறந்தவரை மணக்கவேண்டும். சங்கீதத்தில் சிறந்தவர்களுக்கு என்னுடைய தாத்தா வயதாக இருக்கிறது; ஒன்று நான் வாழ்க்கையைத் துறக்கவேண்டும், இல்லாவிட்டால் என்னுடைய புகழையும் இசையையும் துறக்க வேண்டும். இதில் எது சிறந்தது? நீங்களே சொல்லுங்கள்" — என்று ஒரு முடிச்சைப் போட்டுவிட்டாள்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஏதோ யோசிப்பது போல் அண்ணாந்து பார்த்தார்.

★ ★ ★

இசைவாணி வசந்த கோகிலத்தின் வாழ்க்கையில் குறுக்கிட்ட அவளது திருமணப் பிரச்சினைதான் அவளை சங்கீதம் சரவணபவாவிடம் கொண்டுவந்து சேர்த்துவிட்டது.

தேனினும் இனிய அவளுடைய குரலில் தென்றலில் மிதக்கும் மலர்போல சரவணபவா லயித்துக் கிடந்தான். அவள் அவனுக்கு மனைவிதான் என்றாலும் யாருக்கும் இல்லாத தெய்வீக சக்தி அவளுக்கு இருப்பதாகக் கருதினான். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவளுடைய குரலிலே குந்தகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அவன் அக்கறை காட்டினான். தினசரி வசந்த கோகிலம் குரல் சாதகம் செய்யும்போதெல்லாம் அருகிலேயிருந்து தலையாட்டிக் கொண்டிருப்பான். கோகிலம் யாரையாவது பணியாட்களைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டால் கூட சரவணபவா கையை நெறித்துக் கொள்வான். கோகிலத்திற்குத் தொண்டை கட்டிவிடுமோ என்ற கவலை அவனுக்கு.

சரவணபவா தன்மீது வைத்திருக்கும் பரிவைக் கோகிலம் உணர்ந்தாள். தன் குரலில் அவன் மயங்கிக் கிடக்கும் நிலையையும் அவள் புரிந்திருந்தாள். ஆனால் அவளுடைய உள்ளத்தில் ஒரு கீறல் விழுந்திருந்தது. அது புண்ணாகி விடுமோ என்ற அச்சம் ஒருபுறம் அவளை உறுத்திக் கொண்டிருந்தது.

"வாழ்க்கை என்பது வெறும் சுகபோகம்தானா? அப்படித்தான் என்றால் ராஜகுமாரிகளுக்குப் பிரச்னைகளே இல்லையா? பல ராஜ்யங்கள் காதலால் அழிந்திருக்கின்றன என்பது வெறும் கட்டுக் கதையா?" — என்று அவள் மனச்சாட்சி அவளை உலுக்கியெடுத்தது.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் உடல் நலிவுற்றது. குரலைத் தினசரி சாதகம் செய்து கொண்டிருந்தவள் வாரம் ஒரு முறை செய்தால் போதும் என்று நினைத்து விட்டாள்.

"கோகிலா! வர வர நீ சங்கீதத்தையே மறந்துவிட்டாயா?"

"சங்கீதத்தை என்னால் மறக்க முடியுமா? பாடுவதைக் குறைத்து விட்டேன்."

"நீ எப்போது பாடுவதைக் குறைத்துக் கொண்டாயோ அப்போதிருந்து எனக்கும் சோர்வு தட்ட ஆரம்பித்து விட்டது."

"அது எனக்குப் புரிகிறது; ஆனால் உங்களுக்கு ஒன்று புரிந்திருக்கிறதோ?"

"கோகிலா"

"மாம்பழத்தைக் கடித்துச் சாப்பிட்டால் சாப்பிடுபவர் களுக்கு மட்டுமே இன்பம். மாம்பழத்திற்கு இன்பமில்லை. இது உங்களுக்குத் தெரியாததா?"

"என்ன கோகிலா, புதிய பல்லவியை ஆரம்பித்திருக் கிருய்?"

"பல்லவியை மாற்றுவது பெண்கள் பழக்கமல்ல. பெண் களின் வாழ்க்கை ராகம் போன்றது. ஒரு முறை அமைந்து விட்டால் அதை யாரும் எந்தக் காலத்திலும் மாற்ற முடியாது. கல்யாணி ராகம் கல்யாணியாகத்தான் இருக்கும்; சங்கரா பரணம் என்றைக்கும் சங்கராபரணமாகத்தானிருக்கும். ஆனுல் ஆண்கள் வாழ்க்கைதான் பல்லவியாய்விட்டது. ராகத்திற்கு ஏற்றபடி பல்லவியை மாற்றிக் கொண்டேயிருக்கிருர்கள்"— கோகிலத்தின் கண்களில் கண்ணீர் முட்டி மோதிக்கொண்டு வந்தது.

"கோகிலா! நான் உன்னை மணந்தது உன் அழகிற்காக அல்ல. உன்னுடைய புகழுக்காக அல்ல. உன்னுடைய குரலுக் காகத்தான் உன்னை மணந்தேன்!" — சரவணபவா கடுப்பாகப் பேசினுன்.

"நீங்கள் என்னுடைய குரலைத்தான் மணந்தீர்கள் என்பது இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. நீங்கள் விரும்பிய அந்த இனிய குரல் என்னை விட்டுப் போய்விட்டால்..."

— கோகிலம் ஆவலோடு கேட்டாள்.

"இதற்குப் பதில் உனக்கே தெரிந்திருக்கவேண்டுமே!"

"எனக்குத் தெரிந்துவிட்டது. ஆனுல் உங்களுக்கு இன்னும் உண்மை தெரியவில்லையே என்பது ஆச்சரியமே."

"விளங்கச்சொல், நீ பாடப்போவதில்லை என்கிருயா?"

"இல்லை, நான் பாடப்போவதில்லையென்ருல் அது நானுக எடுத்த முடிவாகத்தானிருக்கும். ஆனுல் என்னுல் இப்போது பாடவே முடியாதே" — என்று தேம்பிக் கொண்டே கதறினுள் கோகிலா.

"கோகிலா!"

"ஆம். என்னுடைய குரல் எப்போதோ கெட்டு விட்டது. நான் பழைய கோகிலமில்லை. இப்போது என்னால் இனி எந்த ராகமும் பாடமுடியாது. அழுகின்ற முகாரியைக் கூட முறையாகப் பாடமுடியாது. என் குரலை மணந்ததாகச் சொன்னீர்களே! இப்போது என்ன சொல்லுகிறீர்கள்?"

சரவணபவா இதற்குப் பதில் சொல்லவில்லை. அவனுடைய கவனம் எங்கோ ஒரு பக்கம் திரும்பியிருந்தது. அடுத்த தெருவிலிருந்த திருமண வீட்டிலிருந்து ஒலித்த இசைத் தட்டு அவன் மனதைக் குழப்பியது.

"ஆஹா! ஸ்ரீரஞ்சனி! இந்த அமுதக்குரலை இவ்வளவு நாட்களாக நான் கேட்டதேயில்லை கோகிலா! உன்னால் இந்த ராகத்தை இப்போது பாட முடியுமா?"

— அவளிடமிருந்து எதுவும் பதில் கிடைக்கவில்லை.

சரவணபவா அவள் பக்கம் திரும்பினான். அவள் மயங்கிக் கிடந்தாள்.

கோகிலத்தை படுக்கையில் கிடத்தினார்கள் அவள் முகம் ஈரம் காணாத பூச்செடியைப் போல, இரத்த ஓட்டமில்லாமல் இருந்தது.

"காபி கொண்டுவரச் சொல்லட்டுமா?"

— சரவணபவாவின் கேள்வியில் பரிவில்லை. மருத்துவரின் பேச்சாகவே இருந்தது.

கோகிலத்தின் உள்ளம் மிரண்டிருக்கிறது என்பதை அவளது விழிகள் வெளிப்படுத்தின. உருட்டி உருட்டி விழித்தாள். சரவணபவா முன்பு அவள் மீது காட்டிய பாசத்தின் இன்ப நினைவுகள் அவளைப் பிசைந்து கொண்டிருந்தன.

"கோகிலா, நீ எப்போதும் ஏழு ஸ்வரங்கள் உள்ள ராகத்தையேதான் பாடவேண்டும். அதில்தான் சம்பூர்ணம் இருக்கிறது."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்! பூரணமில்லாத ராகம்

கூட இனிமையாக இருக்குமே?

"இருக்கலாம் கோகிலா, ஆனால் அதன் இனிமை குறுகிய தாகத்தானிருக்கும்! சம்பூர்ணம் என்பது எவ்வளவு இனிமையான மங்கலமான வார்த்தை தெரியுமா?"

"ராகத்தில் மங்களம், அமங்கலம் என்று இல்லை. எல்லாமே இசைதானே!"

"உண்மைதான்! எல்லோர் குரலும் அப்படியா இருக்கிறது. நீ பாடினால், ஏழு ஸ்வரங்களும் கேட்பவர்களுக்கு ஏழு மந்திரங்களாகவே ஒலிக்கின்றது!"

"ரொம்பவும் புகழுகிறீர்கள் நீங்கள்!"

"வேறு யாரையும் கேட்டுப்பாரேன். உன்னுடைய குளிர்ந்த குரலின் கோமளமான வேலைப்பாடுகள் சங்கீத வித்வான்களையே மதிமயங்கச் செய்து விடுகின்றன. சுருதியுடன் இணைந்து நீ பாடும்போது உன்னை அறியாமலே நீ தேவதையாகி விடுகிறாய்."

—இப்படிப் புகழ்ந்து அவளுடைய காலடியிலேயே கிடந்த சரவணபவா இப்போது தள்ளியிருந்து முகத்தைச்சுளித்துக் கொண்டு பேசுவது அவள் நெஞ்சில் நெருப்பு வைப்பது போலிருந்தது.

வீட்டில் ஒரே அமைதி. எந்த இசை ஓசையும் இல்லை. ஆங்காங்கே எப்போதாவது பல்லிச் சத்தம், அவ்வளவுதான். ஆம்! சரவணபவா குற்றாலத்திற்குப் போய்விட்டான். சீசன் முடிந்துதான் திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

வசந்த கோகிலம் இப்போது அந்த மாளிகையில் இல்லை. அவள் அவளுடைய சொந்தக் கிராமத்திற்குப் போய் விட்டாள். அவளுக்கும் அவளுடைய குரலுக்கும் உள்ள உறவு அறுந்தது போல் சரவணபவாவிற்கும் கோகிலத்திற்கும் உள்ள மையல் தீர்ந்துவிட்டது.

கோகிலத்தின் ஊர் சிறிய ஊர். ஒரு பெருமாள் கோயில் அதை சுற்றி நான்கு வீதிகள். கோயிலுக்கு எதிரே தாமரைத்

தடாகம். இதுதான் அந்தக் கிராமம்.

கோகிலத்தின் வீடு புராதனமானது. கோயில் கோபுரத்தில் குடியிருக்கும் புறுக்கள் அடிக்கடி பறந்து வந்து கோகிலத்தின் வீட்டு மொட்டை மாடியில் அமரும். கிராமத்திற்குத் திரும்பிய புதிதில் அவள் அடிக்கடி புறுக்கூட்டத்தைப் பார்த்து மகிழ்வது உண்டு. சிலநாள் கழித்து அப்பழக்கத்தை விட்டுவிட்டாள். புறுக்கள் ஒன்றையொன்று மையல் கொண்டு மருவி விளையாடியது அவள் மனதைத் துன்புறுத்திக் கொண்டேயிருந்தது. அதனால் அவளுடைய உடல் நலம் மேலும் பாதித்தது. மனம் மகிழ்ச்சியாக இருக்கும் போது எந்தக் காட்சி மகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்கிறதோ அதே காட்சி மனம் துன்புற்றிருக்கும் போது மேலும் மனத்தைத் துன்புறுத்துகிறது.

வசந்த கோகிலம் இப்போது இருமிக் கொண்டிருக்கிறாள். அடிக்கடி இருமிக் கொண்டிருக்கிறாள். அவள் இருமும் போதெல்லாம் எச்சிலை விழுங்கிக் கொண்டேயிருக்கிறாள். அவளுக்கு உரிமையோடு உதவி செய்ய அருகில் ஆள் இல்லை. அவளது தந்தை நடை. உடை இல்லாமல் தளர்ச்சியுற்றிருந்தார். தாயில்லை. அவள் தகப்பனார் வாசித்த மிருதங்கம் உறைபோட்டு முகட்டில் கட்டித் தொங்கவிடப்பட்டுக் கிடந்தது. பழைய காலத்துப் புகைப்படங்கள் சுவரில் தொங்கிய வண்ணம் ஆடிக் கொண்டு கிடந்தன. ஆடிமாதத்து மரங்களைப்போல இலையுதிர்ந்து, கோகிலத்தின் குடும்பம் வெறிச்சோடிக் கிடந்தது. அவளுடைய குரலுக்கு மெருகு கொடுத்து, அவளுடைய புகழுக்குச் சிகரம் வைத்த அவளுடைய தம்பூரா துருப் பிடித்த துப்பாக்கியைப் போல மூலையில் சாய்ந்து கிடந்தது.

உடைந்த சிலையைப் போல அவளது குரல் கெட்டு விட்டது. ராகங்கள் அவளுக்கு மனப்பாடமாக இருந்தாலும் குரல் அவளுக்கு ஒத்துழைக்க அறவே மறுத்து விட்டது. கையிழந்த ஓவியனைப் போல அவள் நிலைமை மோசமாகிவிட்டது. அவள் பாடக்கேட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்த உலகம் அவளை புலம்பிக் கண்ணீர் வடிக்க வைத்து வேடிக்கை பார்த்தது. சிலரது புகழ், வாழ்க்கையை அழித்து விடுகிறது. சிலரது வாழ்க்கை

அவருக்குக் கிடைக்க வேண்டிய புகழை அழித்து விடுகிறது. பாவம், கோகிலா! எலுமிச்சம் பழத்தைப்போல ஒளிமயமாக இருந்த அவள் உடல், காய்ந்து மரமரத்துப் போய் விட்டது. பழைய நிறத்தை இழந்து விட்டாள் கண்கள் கிடங்கு விழுந்து போய்விட்டன. தனக்குள்ளே பாடிக்கூடத் தன்னைத் திருப்தி படுத்திக் கொள்ள அவளால் முடியவில்லை. போர்க்களத்தில் தளபதி ஒருவன் வீழ்ந்து விட்டால் படைகள் அனைத்தும் வாப சாகி விடுவதைப் போல ஒரு மனிதனுடைய வாழ்க்கை, அவனுடைய பிரதானமான குணம் கெட்டு விட்டால், உடனே அவனை நோய் நொடிகளின் துன்பமே பற்றிக் கொள்கின்றன.

கோகிலத்தின் கதையும் அப்படித்தான்.

கோகிலத்தின் தலையில் இன்னொரு பேரிடி விழுந்திருந்தது. அதை அவள் உணரவில்லை. கிராமத்திற்கு வந்த பிறகு தான் அது அவளுக்குத் தெரிந்தது. தன்னுடைய குருவின் மகன் பாடகி முத்துலெட்சுமியைத் திருமணம் செய்து கொண்டு விட்டான் என்ற தகவல் அவளுக்குப் பிற்பாடுதான் தெரிந்தது. அந்தச் செய்தியை அவள் கேள்விப்பட்டதும் அவளால் மூச்சு விட முடியவில்லை. அந்த திருமணத்தைக் கோகிலம் அவளுடைய வாழ்க்கையில் இரண்டாவது தோல்வியாகக் கருதினாள். ஏற்கெனவே குடி படையிழந்து தவித்த மன்னன், அடுத்து மனைவி மக்களையும் இழந்து தவித்ததைப் போலக் கோகிலம் தேம்பித் தேம்பி அழுதாள். ஆணவம் என்பது எந்த ரூபத்திலும் மனிதனை அழித்து விடுகிறது. எந்த இசை அவளைத் தலைநிமிர்ந்து பேச வைத்ததோ அதே இசைதான் அவளை தலைநிமிராமற் செய்தது. படிக்காதவர்களிடத்திலே பண ரூபத்தில் ஆணவம் இருக்கிறது. படித்தவர்களிடத்திலே பதவி, பட்டம் ரூபத்திலே ஆணவம் இருக்கிறது. பெண்ணிடத்திலே அழகு ரூபத்திலே ஆணவம் அவளை ஆட்டிவைக்கிறது. ஆனால் கோகிலத்திடம் பணம். அழகு, இசை இந்த மூன்று ரூபத்திலேயும் ஆணவம் அவள் கண்களையே மறைத்திருந்தன. ஆணவம் யாரையும் வாழ வைத்ததில்லை. ஆணவம் யாரையும்அழிக்கத் தவறியதுமில்லை அதுவும், சின்ன வயதில் குடிபுகும் ஆணவம் கருநாகம்தீண்டியது மாதிரி; அதற்கு மருந்தும் கிடையாது; மந்திரவாதியும் இல்லை.

கோகிலா! மஞ்ரைஞ்சித மலரைப் பறிக்கச்சென்று பூ நாகத்திடம் கொட்டுபட்டவளைப்போல் தினம்தினம் செத்துக் கொண்டிருந்தாள். அவளது வைர நகைகள் வட்டிக் கடைகளில் சரண் புகுந்தன. அவளது பட்டுப் புடவைகள் மார்வாடியிடம் மறு விலைக்குப் போய்விட்டன. என்றும் போல் அன்றும் அழியாமலிருந்தது அவளுடைய நீண்ட கூந்தல் ஒன்று தான். இருமல் சத்தம் தவிர வேறு சத்தம் அவள் தொண்டையிலிருந்து கிளம்பவேயில்லை.

“என்னுடைய சிஷ்யை வசந்த கோகிலம் ஒரு காலத்தில் சாகித்யகர்த்தாவாக வருவாள்” — என்று ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையினுடைய வாழ்த்து அறவே அழிந்து அதுவே அவளுக்கு ஒரு சாபமாக வந்து விடும் என்று வசந்த கோகிலம் கனவிலும் கருதவில்லை.

“கோகிலா!”— வெளித்திண்ணையில் படுத்திருந்தபடி உள்ளேயிருந்த கோகிலத்தை அழைத்தார் அவள் தந்தை.

பதில் பேசச் சக்தியற்ற வசந்த கோகிலம் பொம்மையைப் போல நடந்து வந்து அவர் அருகில் நின்ருள்.

“வைத்தியர் இப்ப வந்து விடுவாரே!”

“வைத்தியர் வந்து என்ன பயனப்பா? அவர் வந்தால் மருந்து வாங்னும். மருந்து வாங்கப் பணம் வேணும். எல்லாம் முடிந்து விட்டது.”

கோகிலத்தின் பதில், அவள் தந்தையின் நெஞ்சில் இரும்பைக் காய்ச்சி ஊற்றுவது போலிருந்தது. “உதவி கோரி வந்த பெண்களுக்கெல்லாம் பட்டுப் புடவைகளைத் தானம் செய்தவளின் நிலை இப்படி ஆகிவிட்டதே”என்று அவர் மன மொடிந்து போனுர்.

“ஏம்மா இப்படியெல்லாம் பேசுகிருய். உயர்ந்த பக்திக் கீர்த்தனைகளைப் பாடிய உன் வாயில் கெட்ட வார்த்தைகள் வரலாமா? இதெல்லாம் ஒரு சோதனை என்று நினைத்துக்கொள்ள வேண்டியதுதான்!” என்று அவர் தேறுதல் சொன்னுர்.

கோகிலம் பதில் ஏதும் பேசவில்லை. அவளை எதுவும் பேச விடாமல் இருமல் தடுத்துக் கொண்டிருந்தது. உடல் சக்தியற்றிருந்ததால் அவளது கண்கள் வறண்ட கிணற்றைப் போல் உலர்ந்திருந்தன.

"ஏம்மா, நீ எவ்வளவோ பேருக்கு உதவியிருக்கிறாய்; கையில் பணத்தை வைத்துக் கொண்டு நீ மறைத்ததே கிடையாது; ஆனால் உனக்கு இப்படி ஒரு சோதனை வந்திருககும் போது ஒருத்தர் கூட வரவில்லையே அம்மா!"

"அதுவா! நாம் இந்த நிலையிலே இருக்கிறோம் என்று அவர்களுக்கு எப்படியப்பா தெரியும். கோகிலம் கோடிக்கணக்காகச் சேர்த்து வைத்திருப்பாள் என்று தான் எல்லோரும் எண்ணிக் கொண்டிருப்பார்கள்". கோகிலத்தின் பதில் இருட்டறைக்குள்ளிருந்து பேசுவது போலிருந்தது.

"அப்போதே நான் நினைத்துக்கொண்டேன்; கோகிலா இப்படி அள்ளிக் கொடுக்கிறாளே! வருங்காலத்தை நினைத்துப் பார்த்தாளா என்று அப்போதே என் மனம் பதைத்தது! தனக்கு மிஞ்சித்தானே அம்மா தானம் தர்மம் எல்லாம்!"

"உங்களுக்கு அந்தப் பழமொழி மீது நம்பிக்கை! எனக்கு தர்மம் தலைகாக்கும் என்ற பழமொழி மீது நம்பிக்கை! என்ன செய்வது உங்கள் பழமொழிதான் இப்போதைக்கு வெற்றி பெற்றிருக்கிறது".

தலையில் நேர் வகிடு எடுத்து கூந்தலை இரண்டாகப் பிரிப்பது போல் முடியலங்காரம் செய்து கொள்ளும் கோகிலா சில நாட்களாகத் தலை பின்னுவதையே நிறுத்தி விட்டாள். பூச்சூடிக் கொள்வதுமில்லை. தினந்தோறும் மனங்குளிரும் ஜவ்வாது பொட்டு வைத்துப் பழகிய அவள் நெற்றி மஞ்சள் பூத்துப் போயிருந்தது. தேய்த்து விளக்கி வைத்த வெண்கலப் பாத்திரம் போன்ற அவளது மேனி களிம்பேறிய பாத்திரம் போல கருத்துப்போய் விட்டது. எந்தக் கட்டத்திலும் பிசிறு தட்டாமல் உச்ச ஸ்தாயியில் ரீங்காரம் செய்து கொண்டிருந்த அவளது இனிய குரல் இப்போது அடுத்தவர்களிடம் உரக்கப் பேசக்கூட முடியாத நிலையை அடைந்துவிட்டது. சங்கீத உலகத்தையே

விழுங்கி ஏப்பம் விடவேண்டுமென்று ஆசைப்பட்ட அவளை அந்தச் சங்கீதமே உருக் குலைத்து விட்டது.

"உயிரோவியம்போல இருக்கிறயே" என்று வர்ணித்தவர்கள் அவளைக் கண்டால் 'இப்படி எலும்புக் கூடாகி விட்டாயே' என்று கண் கலங்குமளவிற்கு மாறிவிட்டாள். கோகிலா அவளுடைய எதிர்காலத்தில் நம்பிக்கையிழந்து விட்டாள். மீண்டும் நலம் பெற்று, ரசிகர்களைச் சந்திப்போம் என்ற நப்பாசை அவளுக்கு இல்லாமல் போய்விட்டது. அவளுடைய உள்ளத்திலே ஒரு தத்துவப் போராட்டம் கிளம்பியது. ஒரு பெண் தன்னை விட செல்வத்தில் சிறந்தவரை மணந்துகொண்டால் சுகம் பெறுவாளா — அல்லது தன்னைப்போல் சம நிலையில் உள்ளவரை மணந்து கொண்டால் சுகம் அடைவாளா, அல்லது தன்னிலும் கீழான நிலையில் உள்ளவரை மணந்து கொண்டால் சுகம் பெறுவாளா — இதுதான் அவளது மனப் போராட்டம். இதற்கு விடை காண்பதிலேயே அவளுடைய ஆவி இயங்கிக் கொண்டிருந்தது.

நீட்டிய காலை மடக்கக்கூட அவளுக்குச் சக்தியில்லை. மேடு பள்ளம் தெரியாத பளிங்குபோல் இருந்த அவளது கைகள் இப்போது வெறும் நரம்புப் பின்னலாகவே தெரிந்தது. மாம்பழம் போன்றிருந்த அவள் கன்னங்கள் பழைய துணியைப்போல் சுருங்கிக் குழி விழுந்து போய்விட்டன.

கோகிலா அவளுடைய வாழ்நாளின் இறுதிக் கட்டம் வந்து விட்டது போலவே கருதினள். அவளுடைய தந்தை தியாகராஜ பிள்ளையோ கோகிலம் வடிக்கும் கண்ணீரைக் கண்டு சகிக்க முடியாமல் தனக்கு முடிவு நாள் வரவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தார்.

"புகழ் கொடியது. அதிலும் சின்ன வயதில் வரும் புகழ் மிகவும் கொடியது. புற்றுநோய்க்குத் தப்பமுடியாத மனிதனைப் போல் சின்ன வயதில் புகழடைவோர் அபகீர்த்தியிலிருந்து ஒரு நாளும் தப்பமுடியாது" என்று தியாகராஜபிள்ளையின் மனம் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது.

வெளிவாசல் கதவைத் திறந்து யாரோ உள்ளே வருவது போல் தெரிந்தது.

"யாரது?"

— பதில் இல்லை.

தியாகராஜபிள்ளை தள்ளாடிக் கொண்டு எழுந்து வந்து கூர்ந்து பார்த்தார்.

"ஓ! கலியமூர்த்தியா! என்ன நீயும் இப்படிப் போய் விட்டாய்! உனக்கு என்ன கவலை? கோகிலத்தைவிட நீ மோசமடைந்திருக்கிறுயே!"

—தியாகராஜபிள்ளை வியப்போடு கேட்டார்.

பதில் சொல்வதற்குப் ப தி ல ா க கலியமூர்த்தி தேம்பித் தேம்பி அழுதான்.

உள்ளேயிருந்த கோ கி ல ா ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

"யாரப்பா அது?"—ஈனஸ் தாயியில் கோகிலம் கேடடாள் "நம்ம வீட்டைச் சுற்றிக் கொண்டிருக்கும் தரித்திரம் மீனுட்சி சுந்தரம்பிள்ளை வீட்டையும் விடவில்லையம்மா! நாங்க ரெண்டு பேரும் உடைந்த வைரம் போல் ஆகிவிட்டோம். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டால் அடையாளம் தெரியாதம்மா மழமழப்பாக மைசூர் நந்திபோல் இருந்தவன் சோளக்காட்டு பொம்மை போல் ஆகிவிட்டானம்மா! நீயே உன் கண்களை நம்ப மாட்டாய். தாடி மீசையோடு அழுக்குப்படிந்த உடைகளோடு வந்திருப்பது வேறு யாருமல்ல, கலியமூர்த்திதான் வந்திருக்கிருன், ஆம் கலியமூர்த்திதான்"

தியாகராஜபிள்ளையின் குரலில் ஒரு பதட்டம் இருந்தது.

கோகிலா பதில் சொல்லவில்லை. தாள்ப்பாளைத் திறந்து இரண்டு கதவுகளையும் திறந்து விட்டாள். அவளால் வெளியில் வந்து பேச முடியாது என்பதற்காகவே அப்படிச் செய்தாள். பெண்கள் ஒன்றை உணர்த்துவதற்கு இன்னென்றைச் செய்வார்

கள். அதுவும் மனதை உறுத்தும் சொந்த விஷயங்களில் அவர்கள் மிகுந்த நுணுக்கத்தோடு நடந்து கொள்ளுவார்கள்.

சிறிதும் வினயமில்லாத கலியமூர்த்தி இதைப் புரிந்து கொள்ளாமல் தலையைக் கவிழ்ந்து கொண்டே உட்கார்ந்திருந்தான்.

"உள்ளே வாங்க!"

கோகிலா அன்போடு கூப்பிட்டாள்.

கலியமூர்த்தி வேலை தேடி வந்த அடிமையைப் போல் ஒடுங்கிய உள்ளத்தோடு உள்ளே நுழைந்தான். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இரண்டு பேருடைய உருவங்களும் அழிந்திருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். துக்கம் விசாரிக்கக் கூட இருவருக்கும் தைரியமில்லை.

"என்னப்பா, இப்படி ஆகிவிட்டாய்? எனக்கு ஒரே அதிர்ச்சியாக இருக்கிறது" — தியாகராஜபிள்ளையே ஆரம்பித்து வைத்தார்.

"நான் திடீரென்று இப்படி ஆகிவிடவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நான் உருகுலைந்தேன். என்னுடைய அழிவிற்கு வேறு யாரும் காரணமில்லை. என் தந்தையின் வீம்பும் வைராக்கியமும் தான் காரணம். புகழ்பெற்ற பாடகி முத்து லெட்சுமியை நான் துணைவியாக ஏற்றுக்கொண்டேன். பெயரளவிற்குத்தான் அது. குடும்பம், குழந்தைகள், வீடு என்ற பாசத்திற்கே அவளிடத்தில் இடமில்லை. புகழ், பணம் — இந்த இரண்டுந்தான் அவளுக்குப் புருஷனும் பிள்ளைகளும். புகழை விரும்புகிறவர்கள் முகஸ்துதிக்கு அடிமையாகி விடுகிறார்களே முகஸ்துதியைக் கேட்டால் பிசாசு கூட தேவதையாகிவிடுகிறது என்பது அவளைப் பொறுத்தவரையில் உண்மைதான். எனக்குச் சனியனாக வந்தவன் சங்கீதம் சரவணபவா" — என்று முடித்தான்.

"இங்கேதான் அவன் சனியனாக வந்தான்; அங்கேயும் வந்து நுழைந்து விட்டானா?" என்று குறுக்கிட்டார். தியாகராஜ பிள்ளை.

"ஆமாம் அவன் தான் இப்போது முத்துலெட்சுமியோடு சுற்றிக் கொண்டிருக்கிறான்."

கோகிலத்திற்கு துக்கம் தாங்கவில்லை. அவளுக்கு இருமல் ஆரம்பித்து விட்டது சங்கிலித் தொடர்போல் இருமிக் கொண்டேயிருந்தாள். அவளுக்கு மூச்சுத்திணறியது. சிறிது நேரத்தில் மயங்கி விழுந்துவிட்டாள்.

தியாகராஜபிள்ளையும் கலியமூர்த்தியும் அவளைப் படுக்கையில் தூக்கிப் போட்டார்கள்.

"வைத்தியர் இருந்தால் பரவாயில்லை. அழைத்து வரட்டுமா?" என்று கலியமூர்த்தி பதட்டமாகச் சொன்னான்.

"வைத்தியர் இருக்கிறார். ஆனால் வரமாட்டார் தம்பி"

"வரமாட்டாரா? ஏதாவது சண்டையா?"

"இல்லை ஒரு முறையாவது அவருக்குப் பணம் கொடுத்தால் தானே. கொஞ்ச நாட்களாக நாங்கள் வைத்தியரையே கூப்பிடுவதில்லை. மருந்து வாங்கவே படாத பாடெல்லாம் பட்டுக் கொண்டிருக்கிறோம். பிறகு எப்படி வைத்தியருக்குப் பணம் கொடுக்க முடியும்?" — தியாகராஜபிள்ளை சிறு பிள்ளையைப் போல் தேம்பித் தேம்பி அழுதார்.

"இனிமேல் விற்பதற்கு ஒன்றுமேயில்லை. இந்த வீட்டைக் கூட ஒத்தி வைத்துவிட்டோம்" — என்று தியாகராஜபிள்ளை கதறிக் கொண்டே பேசினார்.

கோகிலத்தால் பேசமுடியவில்லை. தன் தந்தையை அருகில் அழைத்து ஏதோ சொல்வதற்காக விரும்பிய அவள் தரையை தட்டி அவரை அழைத்தாள்.

தியாகராஜபிள்ளை தலையைக் குனிந்து அவள் சொல்வதைக் கேட்க முயன்றார். அப்போதும் கோகிலத்தால் பேச முடியவில்லை. கைஜாடையால் எதிரே உள்ள அறையைக் காண்பித்தாள். தியாகராஜபிள்ளைக்கு விளங்கவில்லை. சுவரில் தியாகையரின் படம் மாட்டப்பட்டிருந்தது. அவர் கையிலே இருந்த தம்பூராவைக் காண்பித்தாள். தியாகராஜ பிள்ளைக்கு தலையில்

இடி விழுந்தது போலிருந்தது. தம்பூரா ஒன்றுதான் மீதம் இருக்கிறது என்று ஜாடை காண்பிக்கிருள் என்பது அப்போது தான் அவருக்குப்புரிந்தது.

"தம்பூரா எப்போதாவது வாங்கிக் கொள்ளலாம். கோகிலம் போய்விட்டால் மீட்க முடியுமா" — என்று கூறிக்கொண்டு தம்பூராவைத் தோளில் போட்ட வண்ணம் கலியமூர்த்தி வெளியேறிஞன்.

"எங்கேயப்பா புறப்பட்டாய்? இதை யார் வாங்கப்போகிருர்கள்? இதனுடைய மகிமை யாருக்குத் தெரியப்போகிறது"— தியாகராஜ பிள்ளை மிகுந்த சோர்வோடு பேசினுர்.

"நீங்க நினைப்பது தவறு. இது கோகிலா பயன்படுத்தியது என்ருலே விலை அதிகமாகப் போகும். அதுவும் முத்துலெட்சுமியே இதை விலைகொடுத்து வாங்குவாள். நான் இப்போதே மதுரைக்குப் போய் இதைக் காசாக்கி விட்டு வருகிறேன்".

ஒரு வாரமாகியும் கலியமூர்த்தி திரும்பவில்லை. கோகிலா தினசரி இறந்து கொண்டேயிருந்தாள். நோயின் உபாதை அவளைப் புரட்டியெடுத்தது. கொஞ்சம் பணம் இருந்தாலும் அவளைக் காப்பாற்றிவிட லாமே என்று தியாகராஜபிள்ளை புழுவாகத் துடித்தார். ஆனுல் ஒரு நாள் காலை ஐந்து மணிக்கு — சூரியோதயத்திற்கு முன்னுல் — கோகிலா போய்விட்டாள். அவளுடைய குரல் ஒடுங்கிவிட்டது. அவளுடைய தலைமாட்டிலிருந்து தியாகராஜபிள்ளை லேசாக மிருதங்கத்தை வாசித்துக் கொண்டிருந்தார்.

ஈமச்சடங்குகளுக்காவது கலியமூர்த்தி பணம் கொண்டு வருவானென்று தியாகராஜ பிள்ளையின் மனம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனுல் கலியமூர்த்தி கொண்டுபோன தம்பூராவை அப்படியே திருப்பிக்கொண்டு வந்தான்.

"கலியமூர்த்தி! என்ன இது?"

"ஆம். இது ராசியில்லாத தம்பூராவாம்! முத்துலெட்சுமியே கூறுகிருள், எந்தத் தம்பூரா ஒரு காலத்தில் இசையுலகைத் தன் வழியிலே சுருள வைத்ததோ அந்தத் தம்பூரா

இன்று ராசியில்லாத தம்பூராவாம்!'' — கலியமூர்த்தியின் கண்களிலிருந்து மொட்டுமொட்டாகக் கண்ணீர் சிந்தியது. கோகிலத்தின் சடலத்திற்கு அருகே தம்பூராவையும் படுக்கவைத்தார்கள்.

மார்கழி மாதத்திய திருப்பாவை, திருவெம்பாவை இசையொலி பெருமாள்கோயில் கோபுரத்திலிருந்து ஒலி பெருக்கி மூலம் காற்றிலே மிதந்துகொண்டு வந்தது. அந்த இசையே கோகிலத்தின் வாழ்க்கைக்கு மங்கலமாக இருந்துவிட்டது.

இன்று அந்த வீடு வழிப்போக்கர்கள் தங்கும் மடமாகப் போய்விட்டது. புறாக்களின் குறுகுறுப்பு இன்னும் ஓயவில்லை. வீட்டுக்கொல்லையில் உயர்ந்திருந்த இலவ மரங்கள் புதிய காய்களைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தன.

கோகிலத்தினுடைய வாழ்க்கை சிறிதும் எதிர்பாராமல் பாதியில் நின்ற பாட்டாக ஆகிவிட்டது.

★ ★ ★

# ஆனந்த பைரவி

## 1

## ராஜகோபுரம்

ஊருக்கு அப்பாலே பெரிய பங்களா. உயர்ந்த தென்னை மரங்களும், கிளைகள் அடர்ந்த மரங்களும், அரக்கர்களைப் போன்ற கூந்தல் பனைமரங்களும் அந்தப் பங்களாவின் சுற்றுப் புறத்தை இறுக்கமாக்கி வைத்திருந்தன.

பங்களா பழமையானது என்றாலும், பார்ப்பதற்கு எடுப் பானது. பங்களாவிற்குப் பின்னால் நெடுந்தூரம் வரைக்கும் பசுமையான வயல்களும் இடையிடையே சவுக்கு மரக் கூட்டங் களும் அடர்ந்திருந்தன.

பங்களாவின் கொல்லைப் புறத்தில் புராதனமான ரப்பர் சக்கரங்கள் கொண்ட ஃகாச்சு வண்டிகள் சேதமாகிக் கிடந்தன. அவை இனிப் பயன்படாது என்று தள்ளி வைக்கப் பட்டவை போன்று தோன்றின. உபயோகத்திற்காக புதிதாகச் செய்யப்பட்டிருந்த வில்வண்டிகள் நீலத்திரை போட்டு மூடிக் கிடந்தன. மின்னும் பந்தயக் குதிரை போன்ற உயர்ந்த பூரணி மாடுகள் கழுத்தில் மணிச்சரங்களுடன் அசை போட்ட வண்ணம் மாட்டுத் தொழுவத்தில் களைப்பாறிக் கொண்டி ருந்தன. புதிய மோஸ்தரில் சிறிய கார் ஒன்று 'ஷெட்டுக்'குள் நின்றது. சிப்பந்திகள் சிலர் அங்கும் இங்கும் போய்க் கொண்டி ருந்தார்கள். அவர்களில் இரண்டொருவர் பரபரப்பாகத் திரிந் தனர். சமையல்காரன் கரண்டியும் கையுமாக அலைமோதினான், சிற்றாள் வேலை பார்க்கும் நடுத்தர வயதுள்ள ஒரு பெண்,

வாய்க்கு வந்தபடி ஏதோ பிணுத்திக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள்.

வேலைக்காரர்கள் ஒருவருக்கொருவர் கிசு கிசுத்துக் கொண்டார்கள் அந்தக் கிசு கிசுப்பில் ஏதோ ஒரு ரகசியம் இருப்பது போல் தெரிந்தது.

காரைக்குடியிலிருந்து புதுவயல் மார்க்கமாக அறந்தாங்கி செல்லும் வழியில் பாழடைந்த கோட்டை கொத்தளங்களோடு இருக்கும் ஊருக்குப் பெயர் கீழா நிலைக்கோட்டை. அங்கு பெரும் கீர்த்தியோடு வாழ்ந்த திருத்தணி மணியக்காரரின் மகன் மயில்வாகனன் மாளிகைதான் அவ்வளவு பரபரப்போடு இருந்தது.

படுத்த படுக்கையாகக் கிடக்கும் மனைவி நாச்சியாருக்கு அருகில் உட்கார்ந்தபடி, பழைய நினைவுகளில் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தார் அவர். பாசத்திற்குரிய அவர்களது சடைநாய் இருவருக்கும் மத்தியில் குளிர்ந்த தரையில் படுத்துக் கிடந்தது. ஊதுபத்திகள் கொத்துக் கொத்தாக எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தன. மயில் வாகனனின் கண்கள் ஓட்டை விழுந்த பாத்திரத்தைப் போல் கசிந்து கொண்டிருந்தன.

“எத்தனையோ முறை தமிழ் புத்தாண்டு விழாவிற்கு புதுக் கோட்டைக்குப் போயிருக்கிறேன். எனது தந்தை இருந்த காலத்திலும் போயிருக்கிறேன். அவருக்குப் பிறகும் நானே போயிருக்கிறேன். நள்ளிரவில் நானே பல தடவை காரை ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறேன். நான் சிறு பிள்ளையாக இருந்தபோது என் தகப்பனுரோடு மாட்டு வண்டியிலே கூட ‘புதுக்கோட்டை வருஷப்பிறப்பு’ பார்க்கப் போனதுண்டு. அப்போதெல்லாம் ஏற்படாத விபத்து நாங்கள் மகிழ்ச்சியோடு இருக்கவேண்டிய இந்த வசந்த காலத்திலா ஏற்பட வேண்டும்! விபத்துக்கள் நேரட்டும்; ஆனுல் எங்களுக்கா இப்படி விபத்து ஏற்பட வேண்டும்! விபத்தினுல் நாச்சியார் படும் தேதனையை விட, ஊர்ப் பேச்சால் நான் படும் வேதனைதான் மிகுதியாகி விட்டது. விபத்திலே கால் முறிந்தால், பரிதாபப்படுவார்கள்; வேறு ஏதாவது காயங்கள் ஏற்பட்டாலும், உற்ருரும் சுற்ருரும்

சுண் கலங்குவார்கள். எனக்கு ஏற்பட்ட விபத்து அது போன்ற விபத்தல்லவே! மழையைக் கிழித்துக் கொண்டு வந்த பேரிடி, என் கார் மீது அல்லவா தாக்கி விட்டது. என் மூதாதைகள் செய்த தர்மங்களும், என் தந்தையார் செய்த தானங்களும் இந்த ஒரு இடியிலேயே கருகிச் சாம்பலாகி விட்டனவே! ஒரு வீட்டிலோ அல்லது ஒருவன் தலையிலோ இடி வீழ்ந்து விட்டதென்றால், உலகிற்குத் தெரியாமல் அவன் வீட்டில் உட்கார்ந்து கொண்டே அக்ரமம் செய்து வந்திருப்பதாக முடிவு கட்டி விடும் நாடு, இந்தத் தமிழ் நாடு. நான் யாருக்குத் தீங்கிழைத்தேன்? யாருடைய சோற்றில் மண்ணை இறைத்தேன்''- மயில்வாகனனின் ஆன்மா இப்படித் துன்பத்திலேயே நீந்திக் கொண்டிருந்தது.

ஒருக்கணித்துப் படுத்திருந்த நாச்சியார் இப்போது திரும்பிப் படுத்தாள். இன்னும் அவள் மயக்கம் தெளியவில்லை. விபத்திற்குப் பிறகு மூடிய இமைகள் திறக்கவேயில்லை. மும்தாஜின் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டு அவளையே வர்ணித்துக் கொண்டிருந்த ஷாஜஹானைப் போல, மயில் வாகனன், நாச்சியாரின் வசீகரத்திலேயே லயித்துக் கிடந்தான்.

''எல்லாம் விதிப்பயன் என்று எனக்கு எல்லோரும் ஆறுதல் சொல்லுகிறார்கள். என் பெயர் 'விதி' என்று சொல்லிக் கொண்டு யாராவது என் முன்னால் இப்போது வருவானானால், அவனைச் சுட்டுப் பொசுக்கி அவனது கருமாதிக்கே எலும்பில்லாமல் செய்துவிடுவேன். நியாய விரோதமாகச் செயல்படும் விதிக்கு உருவமில்லாமல் வைத்திருப்பது இயற்கையின் நீசத்தனத்திற்கு அழிக்க முடியாத சான்றில்லையா? திருடர்களைச் சட்டம் தண்டிப்பதைப் போல, தீய சக்திகளுக்கு தண்டனை கொடுக்க யார் இருக்கிறார்கள்? மிராசுதார் வீட்டு அடியாட்களைப் போல விதியும், தலையெழுத்தும் ஊரையே அதம் செய்வது ஏன் கடவுளுக்குத் தெரிவதில்லை?''- தத்துவங்களில் மூழ்கிப்போயிருந்த மயில் வாகனன் திடீரென்று நிமிர்ந்து பார்த்தான். அவன் எதிரே டாக்டர் நின்றுகொண்டிருந்தார்.

"டாக்டர் சார், நான் எதற்கும் பயப்படாதவன்; உங்களுக்கே அது தெரியும். ஆனால் இப்போது நான் கலக்க மடைந்திருக்கிறேன். என் மனமே சிதறிப் போயிருக்கிறது. என் உடல் நொறுங்கிய முறுக்கு மாதிரி கல கலத்துப் போயி ருக்கிறது. என் காரில் இடி விழுந்தது பற்றிக் கூட நான் கவலைப்படவில்லை. ஆனால் அதைப்பற்றி ஊரில் என்ன பேசிக் கொள்வார்களோ என்று தான் நான் வேதனைப்படுகிறேன்" என்றான் மயில்வாகனன்.

"இந்த விபத்து உங்களை 'செண்டிமெண்ட்டா' பாதித் திருக்கும் என்று எனக்கு நன்றாகத்தெரியும், மயில்வாகனன்" என்றார் டாக்டர்.

"எத்தனை கொலை வழக்குகள் என் தந்தையார் மீது ஆனால் எதிலும் என் தந்தை தோற்றதில்லை. ஐகோர்ட் வரை போய் நாங்கள் ஜெயித்து விடுவோம். ஆனால் இந்த விபத்தில் நான் தோற்றுப் போனேன், டாக்டர்."

"குற்றவாளி விடுதலையாவதும், நிரபராதி தண்டிக்கப் படுவதும் தான் விதி என்று சொல்லுகிறார்கள். அந்த விதியை யும், தலையெழுத்தையும் அவர்களால் பார்க்க முடியாது மிஸ்டர் மயில்! ஒருவனுக்கு அவன் வாழ்க்கையில் ஏற்படும் விபத்தோ, விழாவோ அன்றோடு நின்று விடுவதில்லை. அன்று தான் அவன் அனுபவிக்க வேண்டிய பலா பலன்களுக்கு முகூர்த்தக்கால் ஊன்றப்படுகிறது" என்று சொல்லிக் கொண்டே டாக்டர், நாச்சியாரை பரிசோதித்தார்.

நாச்சியாரை டாக்டர் புரட்டிப் புரட்டிப் பார்த்துப் பரிசோதித்தார்.

டாக்டரின் முகத்தில் வியர்வைத் துளிகள் பூத்தன. கடும் வெயிலில் கலப்பை பிடித்து உழுதவனைப் போல, டாக்டர் களைத்து விட்டார்.

"என்ன டாக்டர்"

"மிஸ்டர் மயில்வாகனன்! காயங்களுக்குத் தான் என்னால் வைத்தியம் செய்ய முடியும். நாச்சியாரை நான் குணப்

படுத்த முடியாது! உங்கள் மனைவிக்கு மூளை கலங்கியிருக்கிறது!''

''டாக்டர்! டாக்டர்!''

மயில்வாகனனுக்குத் தலை சுற்றியது.

நாச்சியாருக்கு வெறும் ஊமைக் காயங்கள் தான் இருக்கும் என்று அவன் நினைத்திருந்தான். டாக்டர் சொன்னது, அவன் தலையில் மறுமுறையும் ஒரு இடி விழுவது போலிருந்தது. அவன் கலங்கிய உள்ளத்தோடு நாச்சியாரின் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டு அவளது கூந்தலைக் கோதிக் கொண்டிருந்தான். தங்க மாங்கனி போன்ற கவர்ச்சியான தோற்றமுடைய நாச்சியாரின் விழிகள் பளிங்கினால் செய்து வைத்ததுபோல் அசையாமல் இருந்தன.

இதற்குள்ளாக, செய்தியறிந்த அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் திரண்டு வந்துவிட்டார்கள். கூட்டம் கூடுவதை மயில்வாகனன் விரும்பவில்லையென்றாலும், அவர்களை அவனால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒவ்வொருவரும் தன்னுடைய காரில் வீழ்ந்த இடியைப் பற்றித் தானே விமர்சனம் செய்வார்கள் என்று அவன் கலங்கினான். சாஸ்திரத்திலும், வைதீகத்திலும் ஊறிப்போன கிராம மக்கள் ஊழ்வினைப் பயனால்தான் இடி வீழ்ந்தது என்று மனதுக்குள்ளேயாவது சொல்லிக் கொள்வார்களேயென்று அவன் வெட்கப்பட்டான்.

டாக்டரின் ஆலோசனைப்படி நாச்கியாரைத் திருச்சிக்கு கொண்டுபோய் அங்கே வைத்து சிகிச்சை செய்வது என்று அவன் தீர்மானித்தான். வாழ்க்கையின் முதல் கட்டத்திலேயே தனக்குப் பயங்கரமான தோல்வி ஏற்பட்டதைப் போன்ற உணர்ச்சி மயில்வாகனனை ஒவ்வொரு நிமிஷமும் ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது. மனைவி என்பவள் 'விக்ரகம்' என்றும் அதை பாதுகாக்கும் 'கர்ப்பக்கிருகமாகத்' தான் கணவன் இருக்க வேண்டும் என்றும் அவன் பல புத்தகங்களில் படித்திருக்கிறான். அதில் அவனுக்கும் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. ஆனால் கர்ப்பக்கிருகத்தின் மேலேயே இடிவீழ்ந்ததற்கு அவன் என்ன செய்வான்?

மயில்வாகனன் நன்ருகப் படித்தவன். கல்லூரி வாழ்க்கையில் அவன் கலந்து கொள்ளாத தர்க்கங்கள் இல்லை. அவன் எப்போதும் பெண்ணுரிமைக்கு வாதாடும் பக்கமே நின்று பேசுவான். ஒரு ஆண் தன்னுடைய அன்பை மனைவிக்கு மட்டும் கொடுக்கிருன். ஆனுல் பெண்ணே தன் அன்பை தனது கணவன், பிள்ளைகள், தனது தாய் மூன்று பேருக்கும் பகிர்ந்து கொடுக்கிருள். இதனுல் தான் அந்தப் பெண் துயரப்படும்போது, மூன்று பக்கங்களிலிருந்தும் அன்பு திரும்பி வருகிறது என்று கருத்தரங்குகளில் பேசி, கைவொலி பெற்றவன் மயில்வாகனன். ஆனுல் நாச்சியாரின் சொந்த வாழ்க்கையில் அவள் கொடுத்த அன்பை அவளால் திரும்பப் பெறுவதற்கு வாப்பில்லை. பாவம், நாச்சியாருக்கு தாய் இல்லை; திருமணமாகி இரண்டு ஆண்டுகளாகியும், குழந்தைகள் இல்லை. அவள் புருஷனிடம் காட்டிய அன்பும் பரிவும் தான் அவளுக்கு குளிர்ந்த காற்ருக திரும்பி வீசிக் கொண்டிருந்தது. ஆணுக இருந்தால் எல்லா இடங்களிலும் எதையும் வாய்விட்டுப்பேசி அழலாம், பெண்ணுல் முடியுமா? பாம்புக்குத் தன் மூச்சே எமனுக இருப்பதைப்போல, பெண்ணுக்குச் சில நேரங்களில் அவளது அடக்கமின்மையே எமனுக வந்து விடுவதில்லையா?

மயில்வாகனன் குடும்பத்தோடு திருச்சிக்குப் புறப்பட்டான். மாடு கன்றுகள் நீங்கலாக எல்லாமே அவனேடு திருச்சிக்குப் போய் விட்டன. பள்ளி விடுமுறை காலத்து ஹாஸ்டலைப்போல, புராதனமான அவனது மாளிகை பூட்டப்பட்டது. மாளிகை வாசலிலே அலெக்சாண்டரைப் போல் நின்று கொண்டிருந்த வேப்பமரங்கள் உதிர்க்கும் இலைகளைக் கூட்டிச் சுத்தம் செய்வதற்குக் கூட அங்கு ஆளில்லை. காரோட்டி, கணக்கப்பிள்ளை, பணியாட்கள் எல்லோருடைய கவனமும் நாச்சியார் பக்கமே திரும்பியிருந்தன. நாச்சியார் அந்த மாளிகைக்கு ராணியாக வந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே எல்லோருக்கும் தெய்வமாக விளங்கிஞள். அந்த வீட்டுக்குள் நடமாடும் பணியாட்களைத் தவிர, வேறுயாரும் வெளி ஆட்கள் அவளைப் பார்த்திருக்க முடியாது. குரலை

உயர்த்திக் கூடப் பேசி அறியாதவள். தனக்காக அவள் வாழ்ந்த காலம் போய் தன்னை மறந்து, தன் கணவனுக்காக வாழும் அடக்கமான பணிப் பெண்ணாகவே அவள் தன்னை மதித்துக்கொண்டாள். யாருக்கும் தீங்கு நினைக்காத நாச்சி யாருக்கு இப்படி ஒரு சோதனை ஏற்பட்டது, அந்த மாளிகை யில் அனைவருக்குமே ஒரு பெரிய மனக்கலக்கத்தை உண்டாக்கி விட்டது.

தர்மத்திற்கு ஒரு மோசமான குணம் உண்டு. யாரையும் புடம் போட்டு பார்த்த பின்னர் தான், அவனுடைய கருணையை அவர்களுக்குக்கொடுக்கும். ஆனால் அந்த சோதனை நல்லவர்களுக்கே ஏற்படுகிறது. அதர்மம் அப்படியல்ல. அது கெட்டவர்களை ஊக்குவிக்கும்; வலியோர்கள் பக்கமே வாதாடும்; இறுதி வெற்றியைப் பற்றி அதற்கு கவலையில்லை. உற்சவமூர்த்திகளுக்குத் தீவட்டிகளாக இருப்பது தான் அதர்மத்தின் கொள்கை—நாச்சியாருக்கு ஏற்பட்ட இந்தச் சோதனைக்கும் தர்மத்தின் திருவிளையாடல்கள்தான் காரணம்.

''நாச்சியார் எனக்கு மனைவியாக வாய்ப்பாள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எனது இடது கரம் ஊன மான பின்னும் அவள் என்னைக் கணவனாக ஏற்றுக் கொள் வாள் என்று என்னால் கற்பனைக் கூடச் செய்து பார்க்க முடிய வில்லை. பெண்களை புதிர் என்கிறார்கள், இருக்கலாம். ஆனால் எனக்குக் கிடைத்த நாச்சியார் புரியாத புதிருமல்ல. விளங் காத மந்திரமுமல்ல. குழந்தையில்லாத எனக்கு குழந்தை யாகவும், கொஞ்சுகின்ற மனைவியாகவும், பணிவிடை செய் வதில் எனக்குத் தாயாகவும் இருந்து வருகிறாள். அவளுக்கு விபத்து என்றவுடன், தாய், தாரம், குழந்தைகள் அனைவரை யும் இழந்தவனாக நான் தவிக்கிறேன். எனக்குச் சில நேரங் களில் ஒரு சந்தேகம் எழுவதுண்டு. நாச்சியார் குழம்பியிருப் பதற்கு இடி வீழ்ந்தது தான் உண்மையிலேயே காரணமா? அல்லது ஏற்கெனவே அவளுடைய மனம் குழம்பியிருந்ததா? இந்தச் சந்தேகம் மேகத்திரளைப் போல என் உள்ளத்தில் தோன்றித் தோன்றி மறைந்தது. உண்மைதான். எனக்கு

இப்படி ஒரு சந்தேகம் ஏற்படுவதற்கு பலமான காரணம் உண்டு. அதெல்லாம் இப்போது திரும்ப நினைத்து பார்ப்பது நாச்சியாருக்கு நான் செய்யும் மாபெரும் துரோகமாகும். அவளே இவைகளை எண்ணிப் பார்க்காதபோது, நான் மட்டும் எண்ணிப்பார்ப்பது எப்படிச் சரியாகும்''- ஒவ்வொரு நாளும் மயில்வாகனன் இப்படி எண்ணுவதும் அதை அழிப்பதுமாகவும் இருந்து வந்தான்.

பிரபல மனோதத்துவ டாக்டர், நாச்சியாருக்கு சிகிச்சை செய்தார், அவர் நாச்சியார் மாதிரி எத்தனையோ நோயாளிகளைக் காப்பாற்றியிருக்கிறார். மருந்துகள் கொடுப்பதைவிட நோயாளிகளின் மனதைக் குளிர வைக்கும் சிகிச்சை முறைகளையே அவர் கையாண்டு வந்தார்.

''ஏன், மிஸ்டர் மயில்வாகனன்! உங்கள் மனைவிக்கு எதில் அதிகமான நாட்டம் உண்டு?''

''என்னோடுஉரையாடுவது, எனக்கு உணவுபரிமாறுவது -என்னை மகிழ்விப்பது-இதில் எதிலும் அவள் குறைந்தவள் அல்ல. என்னுடைய மகிழ்ச்சிதான் அவளுடைய மகிழ்ச்சி. என்னுடைய கோபத்தை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியாது. அதனால் தான் அவளது துயரத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.''

''நான் அதைக் கேட்கவில்லையே! உங்களுடைய மனைவி எதைப் பொழுது போக்காகக் கருதுவாள் என்று கேட்கிறேன்''- டாக்டர் திரும்பக் கேட்டார்.

''எனக்காக மட்டும் அவள் பாடுவாள். நான் இல்லாத நேரத்தில் வானொலிப் பெட்டியைத் திருகி வைத்துக் கொண்டு பாட்டைக் கேட்பாள். பியானோ வாத்தியம் அவளுக்கு மிகவும் பிடிக்கும். எங்காவது நாட்டியக் கச்சேரி நடந்தால் நாங்கள் போவோம். 'எனக்கு நாட்டியம் கற்றுக் கொள்ளத்தான் ஆசை. சங்கீதப் பிரியமே இல்லாத ஒரு இராணுவ அதிகாரி எனக்குத் தந்தையாக அமைந்துவிட்டதால், என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றி வைக்கவில்லை'- என்று நாச்சியார் பலமுறை சொல்லியிருக்கிறாள்.

புதுக்கோட்டை அரண்மனையில் அடிக்கடி சங்கீத கச்சேரிகள் நடப்பதுண்டு. ஒன்றையும் நாங்கள் விட்டு வைப்பதில்லை. புதுக்கோட்டை அரச குடும்பம் எனக்கு மிகவும் வேண்டிய குடும்பம். நான் குடும்பத்தோடு வருவதைப் பார்த்தால் எனக்கு சளைக்காமல் உபசரணை செய்வார்கள். நான் அடிக்கடி விழாக்களுக்குப் போய் வந்ததால் மகாராணிக்கும் என் மனைவிக்கும் நட்புறவு ஏற்பட்டுவிட்டது." என்று மயில் வாகனன் டாக்டரிடத்தில் விரிவாகச் சொன்னான்.

"அப்படியானால் உங்களுடைய திருமணத்திற்குப் பிறகு உங்களுடைய மனைவிக்கு எந்தவிதமான மனச்சஞ்சலமும் ஏற்பட்டதில்லையல்லவா?"

"என்னால் உறுதியாகச்சொல்ல முடியும். அவளுக்கு எந்த மனக்குறையையும் நான் வைத்ததில்லை. அவள் முகம் என்றும் நிலவுபோலவே இருக்கும். மனங்கமழும் ஊதுவத்தி யின் வாசனையும், இனிய வாத்திய இசையுமே அவளுடைய அறையில் நீக்கமற நிறைந்திருந்தன" என்றான் மயில் வாகனன்.

மயில்வாகனன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் ஏதோ யோசித்துவிட்டு, "நாச்சியாருக்குச் சிகிச்சை செய்வதற்கு திருச்சி உகந்த இடமில்லை. திருச்சி கந்தக பூமி. குளிர்ந்த வாசஸ்தலமே அவளுடைய மனக் கலக்கத்திற்கு மூலிகையாக அமைய வேண்டும். அதுதான் அவளுக்கு முதல் கட்டச் சிகிச்சை. அடுத்தபடியாகச் செய்ய வேண்டியதை நான் பிறகு சொல்லுகிறேன்" என்றார் டாக்டர்.

மயில்வாகனனுக்கு இதைக் கேட்டு மேலும் மனச் சோர்வு ஏற்பட்டது, நாச்சியார் சுயநினைவு திரும்பப் பெறாமலே போய் விடுவாளோ என்று கூட அவன் நினைத்த துண்டு.

மயில்வாகனன் ஊழ்வினையில் நம்பிக்கையில்லாதவன். முன் ஜென்மத்தில் செய்த பாவ புண்ணியங்களுக்கு இந்த ஜென்மத்தில் தான் தீர்ப்புக் கிடைக்கிறது என்பதெல்லாம்

பைத்தியக்காரத் தனமான மூட நம்பிக்கைகள் என்பது அவனுடைய வாதம். செய்தவரின் வினை செய்தவரோடே முடிந்துவிட வேண்டும்; அதுவே கட்டாயமான நீதியின் தீர்ப்பாக இருக்க வேண்டும் என்பதே அவனுடைய விருப்பம். இந்த கொள்கை அவனையே இப்பொழுது இடித்துக் காட்டிக் கொண்டிருந்தது. மயில்வாகனன் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பது முன் ஜென்மத்தில் செய்த பாவங்களுக்காகத்தான் என்றால் அவன் நம்பமாட்டான். செய்தார் வினை செய்தவரோடு என்ற கொள்கைப்படி என்றாலும் அவன் யாருக்கோ தீவினை செய்திருக்கிறான் என்றாகிறதல்லவா!

சிந்திக்கத் தெரிந்த மனிதனுக்கு மனம் குழம்பிக் கொண்டேயிருக்கிறது. சிந்திக்கத் தெரியாதவர்கள் சரியோ தவறோ முரட்டுத்தனமாகச் சில காரியங்களில் ஈடுபட்டு விடுகிறார்கள். சில நேரங்களில் வெற்றியும் பெற்று விடுகிறார்கள். அவர்கள் அதிர்ஷ்டசாலி என்று அழைக்கப்படுகிறார்கள். தோற்றுப்போய் விட்டால், அவர்களுக்கு முட்டாள் பட்டம் கிடைக்கிறது. இந்தவகையில் மயில்வாகனன் சிந்திக்கப் பழகியது, ஒரு குற்றமாகவே ஆகிவிட்டது. இல்லாவிட்டால் அவன் மனைவிக்கு ஏற்பட்ட துன்பத்தை நினைத்து நினைத்து அடிக்கடி மனம் குழம்பிக் கொண்டிருப்பானா?

டாக்டரின் உத்தரவுப்படி மயில்வாகனன், நாச்சியாரை கொடைக்கானலுக்கு அழைத்துச் சென்றான். அரண்மனை போன்ற ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு அமர்த்தி நாச்சியாரை அங்கு வைத்து சிகிச்சை செய்யத் தொடங்கினான். இதமான இடமே அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை குணப்படுத்த முடியும் என்று டாக்டர் கூறியதால், மலைச் சரிவில் உள்ள மல்லிகையும், முல்லையும், மலர்ந்த ரோஜாவும் மணம் வீசும் அந்த மாளிகையில், நாச்சியார் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி படுத்துக்கொண்டே நேரத்தைப் போக்கினாள்.

நாச்சியாருக்கு சி கி ச் சை செய்ய ஏற்பாடு செய்திருந்த டாக்டர் இராஜ சேகரன் ஒரு பெரிய மனோதத்துவ நிபுணர். புத்தகப்படிப்பினால் மட்டும் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் அல்ல. தானே சிந்தித்து கற்பனையான மருத்துவ முறைகளைக் கண்டுபிடித்து முன்னேறியவர். காஷ்மீரில் ஒரு பெரிய ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளவரசனுக்கு இதுபோன்ற மூளை அதிர்ச்சி ஏற்பட்டு இருந்தது. அந்தக் குடும்பத்தினர் அவனைக் காப்பாற்ற எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தனர். பொன்னையும், பொருளையும் வாரி இறைத்து அயல்நாடுகளில் இருந்தெல்லாம் மருத்துவரை அழைத்துவந்து பார்த்தனர். அவர்களுக்கு பயன் எதுவும் கிடைக்கவில்லை. இறுதியாக அவர்கள் தமிழ்நாட்டு மருத்துவ முறையில் தான், தங்களுடைய பிள்ளையை இ ள வ ர ச னு க மீண்டும் பார்த்தார்கள். அதே மருத்துவ முறையை நாச்சியாருக்குப் பின்பற்ற டாக்டர் தீர்மானித்தார்.

“மனிதனுக்குப் பசி ஒரு உணர்ச்சி, பூக்களின் நறுமணம் ஒரு உணர்ச்சி, ரஞ்சிதமான இசை ஒரு உணர்ச்சி, இவைகளில் எந்த உணர்ச்சியைத் தூண்டினால், ஸ்தம்பித்துப் போய் நிற்கும் நாச்சியாரின் மூளையை கலைக்கலாம்” என்பதிலேயே டாக்டரின் சிந்தனை தீவிரமாகச் சுழன்று கொண்டிருந்தது. “டாக்டர் சார், நாச்சியாரின் உடல் நிலையில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா”— மயில்வாகனன் கேட்டான். “எல்லா டாகடர்களுக்கும் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே நான் முயற்சி செய்கிறேன். என்னால் முடியும் என்றே நம்புகிறேன். உங்கள் நிலை என் மனதைப் பெரிதும் வாட்டியிருக்கிறது. உங்களைப் போன்ற புருஷனைப் பெற்றதில் நாச்சியார் பாக்கிய சாலிதான். இதுமாதிரி பணிகளை தொழில்முறையில் செய்வதை விட ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் நிம்மதிக்கு செய்கின்ற பேருதவியாகத்தான் நான் கருதுகிறேன்.”

“டாக்டர் நாச்சியாரை ஒரே ஒரு ஜீ வ ன் த ா ன் என்று நீங்கள் கருதிவிட வேண்டாம். அவளுக்காக நான் இருக்கிறேன் என்னைச் சுற்றி ஒரு சிறிய சமஸ்தானமே இருக்கிறது. அவளுக்கு

ஏதாவது ஒன்று வந்து விட்டால் என்னுடைய சமஸ்தானமே அஸ்தமித்து விடும். அதனுல் தான் அவளை ஒரே ஒரு ஜீவன் என்று எண்ணிவிடக்கூடாது என்றேன்''-மயில்வாகனன் குரலில் நீர்ப்பின்னி இருந்தது டாக்டர் ஊருக்குப் போய்விட்டுத் திங்கட்கிழமைக்குள் முடிவு சொல்லி விடுவதாகச் சொல்லிச் சென்ருர்.

மயில்வாகனனுக்குக் குழப்பம் நீங்கவில்லை. மன அழுத்தம் கை அழுத்தம் இல்லாத செல்லப் பிள்ளையாக வளர்ந்தவன் மயில்வாகனன். இலேசான காற்று வீசினுலும் உதிரும் பன்னீர் பூக்களைப் போல, சிறிய துன்பங்களைக் கூடத்தாங்க முடியாமல் கண்கலங்கி விடும் சுபாவம் உடையவன். விருப்பமான மனைவி எதிர்பாராமல் கிடைத்தும், அவளோடு வாழ முடியவில்லையே என்ற ஏக்கம் அவனை ஒவ்வொரு நாளும் குடைந்து கொண்டேயிருந்தது. அவனுக்குப் பசி எடுக்கவில்லை. ஆனுல் நாச்சியாரை காப்பாற்றுவதற்காகவாவது வாழ வேண்டுமே என்பதற்காகச் சாப்பிட்டான். மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து வர்ணம் தேய்ந்த ஓவியத்தைப்போல் அவனுடைய தோற்றம் பொலி விழந்து கொண்டு வந்தது, தினசரி முகச்சவரம் செய்யும் பழக்கத்தில் இருந்த அவன், இப்பொழுது வாரத்திற்கு ஒரு முறை அல்லது பத்து நாட்களுக்கு ஒருமுறை, முகச்சவரம் செய்து கொண்டான். அவன் குளியலறைக்குப் போனுல் ஒருமணி நேரம் குளிப்பான். தலைமுடிக்கு ஷாம்பூ போடுவதிலிருந்து, குதிக்காலை தேய்த்து கழுவுதுவரை அவசரமில்லாமல் குளிப்பான். மல்லிகைப் பூவின்மீது அவனுக்கு அளவுகடந்த பிரியம். மனைவிக்கு மல்லிகைப்பூவும் தனக்கு மல்லிகைப்பூச் சோப்பும் வாங்கிக் கொள்வான். வர்ணஜாலங்கள் நிறைந்த பூக்களில் வாசனை இருப்பதுகூட ஆச்சரியமில்லை. பால் போன்ற வெண்மையான மல்லிகைப்பூவிற்கு எங்கிருந்தோ மணம்வருகின்றதே என்று நாச்சியாரிடத்தில் பலமுறை மலர்களைப்பற்றி விமர்சித்திருக்கிருன். அதனுல் தான் மல்லிகைப்பூ சோப்பு என்ருல் அவனுக்கு அலாதியானபற்று. பாவம் இப்பொழுது மயில்வாகனன் அந்தச் சோப்புப்போடும் பழக்கத்தையே மறந்துவிட்டான். முன்னைப்போல ஒருமணி நேரம் குளியலறையில் இருந்தால்

நாச்சியாரைக் கவனித்துக் கொள்ளமுடியுமா என்று அவன் பெருமூச்சுவிட்டான்.

கால் சட்டைக்குத் தகுந்த பூட்ஸ் அணிவது அவனுடைய பழக்கம். இப்போது பூட்ஸ் போடும் பழக்கத்தையே கை விட்டு விட்டான். நாச்சியார் படுக்க ஆரம்பித்ததிலிருந்து நாலு முழ வேஷ்டியும், ஒரு சாதாரண மிதியடியும் அணிந்துகொண்டான். யாராவது அவனுடைய உறவினர்கள் அவனிடம் வந்து ஏன் இப்படி உடம்பை அலட்டிக் கொள்ளுகிருய், நீ உன்னைக் கவனித்துக் கொண்டால்தானே உன்னுல் நாச்சியாரைக்கவனித்து கொள்ளமுடியும், என்று அவனைக் கேட்பார்கள். அதற்கு உடனே அவன் "நீ, நாச்சியார் என்று எங்களைப் பிரித்துப் பேசுகிறீர்கள். நான்வேறு, அவள்வேறு இல்லை. அதனுல்தான் அவளை பிடித்த துன்பம் என்னையும் சாடியிருக்கிறது. கையிலோ, காலிலோ மனிதனுக்குப் புண் வந்தால் இடுப்பிலும், 'கக்கத்திலும் நெறி கட்டுகிறது அல்லவா, அது மாதிரிதான் நானும் அவளும் ஒரே உடம்பு அவளுக்குப் புண் வந்திருக்கிறது, எனக்கு நெறி கட்டியிருக்கிறது" என்பான்.

விடிந்தால் திங்கட்கிழமை. காலையில் டாக்டர் வந்து விடுவார் என்று ஆவலோடு அவன் இருந்தான். நல்ல சேதியோடு தான் டாக்டர் வருவார் என்று அவன் நம்பியிருந்தான். ஆனுல் நடந்தது வேருகிவிட்டது, டாக்டருக்குப் பதிலாக அவர், அவருடைய உதவியாளரை அனுப்பியிருந்தார். அந்த உதவியாளர் டாக்டரின் கடிதத்தை மயில்வாகனனிடம் கொடுத்தார். அதில்,

அன்புள்ள மயில்வாகனன்,

"நான் நாளைக்குத்தான் வருவதாகத் தங்களிடம் சொன்னேன். ஆனுல் நாளை வரை தாமதிக்க மனம் இல்லாததால் இன்றைக்கே கடிதத்தை அனுப்பியிருக்கிறேன். நீங்கள் எதற்கும் அதைரியப்படக் கூடாது. தீயவை செய்யத்தான் அஞ்ச வேண்டும். நல்லது செய்யத் துணிவு தான் வேண்டும். துணிவு ஒரு வகையான மருந்து. அந்த மருந்து மாத்திரைகளிலோ, காவியத்திலோ இல்லை. அது மனத்திலேதான் இருக்கிறது.

"நாச்சியாருக்குச் சிகிச்சை செய்ய நான் பயப்படுகிறேன். என்னால் எல்லாம் முடியுமென்று பிதற்றுவதைவிட, என்னால் முடியாததை வெளிப்படையாகச் சொல்லிவிடுவதும் ஒரு வகையான திறமை என்று நான் நினைக்கின்றேன். இந்த வியாதி உங்களுக்கு வந்திருந்தால் நான் துணிச்சலாக சிகிச்சையளிக்க முடியும். நாச்சியார் பெண்ணாகயிருப்பதால் நான் கொஞ்சம் கூச்சப்படுகிறேன். என்னைப் போல என்னுடைய சிகிச்சை முறையில் வெற்றி கண்ட ஒரு லேடி டாக்டரை அழைத்து வந்து சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்வதே பொருத்தம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உயிர் ஒன்றாக இருந்தாலும், உடல் உறுப்புகளின் குணாதிசயங்கள் மாறுபடுகின்றன. ஒரு உடலுக்குள் புகுந்து விளையாடும் வியாதி அந்த உடலின் குணத்தைப் பொறுத்தே அடங்குகிறது. ஆகையால் பெண்மையின் குணத்தை அறிந்த இன்னொரு பெண்ணை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வது மிகவும் முக்கியம். நான் எங்கே போய் இதற்கு தகுந்த லேடி டாக்டரைக் கண்டுபிடிக்க முடியுமென்று நீங்கள் விசனப்பட வேண்டாம். இந்த வியாதியைத் தீர்ப்பதில் மகத்தான வெற்றி பெற்றவள், டாக்டர் கோகிலா என்ற தமிழ் பெண்மணிதான். அவள் இப்பொழுது பெங்களூரில், மல்லீஸ்வரம் பகுதியில் சொந்தத்தில் மருத்துவமனை வைத்துக் கொண்டு இருக்கிறாள். அவளைத் தவிர, இந்த வியாதியைக் குணப்படுத்துவதற்கு பிறிதொருவர் கிடைப்பது அரிது. அதற்குரிய ஏற்பாட்டை செய்து கொள்வீர்கள், என்று நம்புகிறேன். இதுவே தக்க தருணம்".

இப்படிக்கு,
**ராஜசேகர்**

இந்தக் கடிதத்தைப் படிக்கும் பொழுதே மயில்வாகனன் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்தது.

மறுநாளே அவன் பெங்களூருக்கு புறப்படத்தயாரானான்.

# 1

## உட்பிரகாரம்

**நாச்சியார் பேசுகிறுள்.**

என்னைப்பற்றி மற்றவர்கள் கூறுவதைவிட, நானே கூறுவது தான் நல்லது.

பெண்களைத் தெய்வம் என்கிறுர்கள். இன்னும் சிலர் தெய்வத்தின் தெய்வம் என்று கூட வர்ணிக்கிறுர்கள். இதெல்லாம் ஆடவர்கள் புரியும் திருவிளையாடல்களை மனைவிமார்கள் தட்டி கேட்கக் கூடாது என்பதற்காகப் பேசப்படும் முகஸ்துதிகள். பொறுமைசாலிகளும், வாயில்லாப் பூச்சிகளும் தெய்வங்கள் என்ருல், எங்களை விட, எருமை மாடுகள் அடியையும், மிதியையும் வாங்கிக் கொண்டு எவ்வளவோ பொறுமையாக இருக்கின்றன; அவைகளை என்னவென்று வர்ணிப்பது? மங்கையர்க்கரசி, மகாலக்ஷ்மி என்று அழைத்துவிடுவதா?

மேஜர் காசிநாத் இரண்டாவது உலகப் போரில் கடும் போர் புரிந்து, பல பதக்கங்களைத் தட்டிக் கொண்டவர். கம்பீரமான உருவம்! எடுப்பான தோற்றம். ஆனுல் அவரது உள்ளத்தில் இங்கிதமோ, கலை உணர்ச்சியோ சிறிதும் இல்லை. எடுத்த எடுப்பிலேயே எதற்கும் கோபப் பட்டுவிடுவார். அவர் கோபமாக இருக்கும்போது, அவர் எதிரில் என்ன இருந்தாலும் அதைத் தூக்கி முகத்தில் அடித்துவிடுவார். முன்கோபிகளுக்கு முகத்தில் களை இருக்காது என்பதற்கு மேஜர் காசிநாத் ஒருவர் போதும் உதாரணத்திற்கு! மேஜரைப்பற்றி உனக்கு இவ்வளவு தெரியக் காரணம் என்ன என்று கேட்கிறீர்களா? ஒரு மகளுக்கு

அவளுடைய தந்தையைப் பற்றி தெரியாமல் இருக்குமா? ஆம்! மேஜர் காசிநாத் தான் என் தந்தை.

மேஜருக்கு நான் ஒரே மகள். எனக்கு முன்னுலும் பிள்ளை இல்லை. பின்னுலும் பிள்ளை இல்லை. மேஜர், அவர் வாழ்நாளில் முக்கால் பகுதியை அயல் நாட்டிலேயே கழித்துவிட்டார். அவருக்கு கலியாணம் ஆன புதிதில் என் தாயார் கருவுற்றிருக்கிருள். அதற்குப் பிறகு முறையான இல்லற வாழ்க்கை அவளுக்கு இல்லாமல் போய்விட்டது. படையெடுப்பு, குண்டு வீச்சு, முற்றுகை, வெற்றிகர வாபஸ் இவைகளே என் தந்தையின் கனவுகளாகவும் நினைவுகளாகவும் ஆகிவிட்டன ஒரு மனிதனின் மனதை, அவனது மனைவியும் குழந்தைகளுமே பக்குவப்படுத்த முடியுமே தவிர, துப்பாக்கிகளாலும், வெடிமருந்துகளாலும் ஆகக்கூடியதா?

என் தந்தையை மற்ற வீட்டுப் பிள்ளைகளைப் போல் நான் ஆண்டுதோறும் பார்த்ததில்லை. எனது ஐந்தாவது வயதில் ஒரு முறையும், பனிரெண்டாவது வயதில் ஒரு முறையும் பார்த்திருக்கிறேன் அதற்குப் பிறகு அவர் ரிட்டையர் ஆன பிறகுதான் பார்த்தேன்.

ஒரு பெண்ணுக்கு என்ன தான் செல்வம் இருந்தாலும் புருஷனின் பரிச்சயமும் பிணைப்பும் இல்லாவிட்டால், அவள் வெறும் கூடாகிவிடுகிருள். சுட்ட கத்தரிக்காயை போல் அவள் இதயம் சூம்பிப் போய் விடுகிறது என் அன்னையாருக்கும் இதே கதிதான். அவள் கழுத்து நிறைய நகைகள் இருந்தன. பெட்டி நிறையப் பட்டுப் புடவைகள் இருந்தன. ஆனுல் அவள் மனம் மட்டும், நடந்து முடிந்த நாடகக் கொட்டகையைப் போல வெறிச்சோடிக் கிடந்தது. பாவம் எவ்வளவு நாளைக்குத்தான் அவள் மனம் தாங்கும்! ஆளையேக் கொல்லும் துப்பாக்கிக்கூட கவனிப்பாரற்றுப் போனுல், துருப்பிடித்து பலமிழந்து போய் விடுகிறதே! விரக்தியும், சலிப்பும், தனது அழகைப் பருக ஆளில்லாததால் ஏற்பட்ட ஏமாற்றமும், என் அன்னையைக் க்ஷய நோய்க்கு ஆளாக்கிவிட்டது. கொஞ்ச நாளில் அது

அவள் உயிரையே விழுங்கிவிட்டது. நான் மலர்ந்து இன்னொரு வீட்டுக்கு விளக்காகும் பருவம் பெற்ற காலத்தில் எங்கள் வீட்டுக் காந்தவிளக்கு அணைந்துவிட்டது. புருஷன் வீட்டுக்குப் போன பிறகு வரவேண்டிய பொறுப்புக்களெல்லாம் எனக்கு தாய் வீட்டிலேயே வந்துவிட்டன.

என் தந்தை ராணுவத்தளபதியாகையால், அரசாங்கத்தின் எல்லாச் சலுகைகளும் எனக்குக் கிடைத்தன. உடை வசதிகள், உபகாரச் சம்பளம் எது கேட்டாலும் அரசாங்கம் தரத் தயாராக இருந்தது. தனிமையில் இருப்பது முறையல்ல என்று தீர்மானித்து நான் ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கத் தொடங்கினேன். எங்கள் வீடு பூட்டியே கிடந்தது. என் தந்தை உயிரோடு இருக்கிறார் என்பதற்கு அடையாளமாக, எப்போதாவது மூன்று மாதத்திற்கு ஒருமுறை பர்மாவிலிருந்தும், சிங்கப்பூரிலிருந்தும் ஈரான் ஈராக்கிலிருந்தும் கடிதங்கள் வரும். அந்தக கடிதங்களில் கூட பாசம் அன்பு எதுவும் காணப்படாது. குண்டு வீச்சைப் பற்றியும், பற்றி எரிந்த தலைநகரங்களைப்பற்றியும், அதில் சாம்பலான குடும்பங்களைப் பற்றியும்தான் எழுதியிருப்பார், என் தந்தையின் கடிதத்தைப் படிக்கும்போது, ஏதோ ஒரு கிராமத்தில் உட்கார்ந்து சண்டைப்படம் பார்ப்பதைப் போலவே இருக்கும்.

நான் பி. ஏ. வகுப்பிற்கு வந்துவிட்டேன். என் கவனமெல்லாம் படிப்பிலேயே லயித்து விட்டன. ஒவ்வொரு பரிட்சையிலும் நான்தான் முதல் மார்க் வாங்குவேன். என்னை ஒட்டியும் சில நேரங்களில், என்னை மிஞ்சியும் கருணையானந்தம் மார்க்கு வாங்கிக்கொண்டு வந்தார். கருணையானந்தம் தமிழாசிரியரின் மகன். அவர் சிறந்த சொற்பொழிவாளர்; ஆங்கிலப் பேச்சும். தமிழ் பேச்சும் அவருக்குக் கைவந்த கலைகள். எளிமையான தோற்றமுடையவர். தும்பைப் பூவைப் போன்ற வெண்மையான கதராடையைத்தான் அவர் உடுத்துவார். சூட்டும்கோட்டும் போட்டு வந்தால் அவையும் கதராகத்தான் இருக்கும்.

கருணையானந்தம் அவரது தந்தையைப் போலவே தமிழ்த் துறையில் வல்லுநராக வளர்ந்து வந்தார். எங்கள் கல்லூரியில்

நடைபெற்ற இலக்கிய திறனாய்வுகளில் அவரை மிஞ்சி யாரும் வெற்றி கொண்டதில்லை.

ஒவ்வொரு ஆண்டும் பரிசு பெற்றோரின் பட்டியலைப் படிக்கும் போதெல்லாம், நாச்சியார், கருணையானந்தம் என்ற இரண்டு பெயர்களும் முன்னும் பின்னுமாக இணைந்தும், பிணைந்துவந்து கொண்டேயிருக்கும். அப்படிப்பட்ட கட்டங்களில் கல்லூரிப் பேரவையில் கையொலியும், ஆரவாரமும் கேலிச்சிரிப்பும், நையாண்டிப் பேச்சும் கதம்பக் கச்சேரியாக எழுந்து அடங்கும். நாலாண்டுகள் தொடர்ச்சியாக ஏற்பட்ட இந்த அனுபவங்கள் எங்களுக்குள்ளே ஒரு அனுமானத்தை விதைத்து விட்டது. அனுமானங்களும், உணர்வுகளும் நிகழ்ச்சிகளால் வடிவம் பெறுகின்றதே தவிர கற்பனைகளால் அல்ல. அதற்கு நாங்களே சாட்சிகளாக இருக்கிறோம்.

எனக்கும் அவருக்கும் இடையில் கண்களுக்குப் புலப்படாத நீரோட்டம் போன்ற ஒரு தொடர்பு உருவாகுமென நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அவர் யாரோ, நான் யாரோ என்றிருந்த என் உள்ளத்தில் அவர் அடிக்கடி முகங்காட்டி புன்னகை செய்யத் தொடங்கினர். எதையும் எளிதில் வெளிக் காட்டாமல், புதையலைப் போல மனதை அடக்கிக் கொண்டிருக்கும் எனக்கே, அந்தப்பாடு என்றால் இலக்கியத்திலும் அவற்றில் வரும் இன்பக் கூத்துகளிலும் மனதை அடிக்கடி வேட்டையாட விடும் அவருக்கு எப்படியிருக்கும்! எப்படியோ ஒருவர் நெஞ்சில் ஒருவர் புகுந்து கற்பூரமாக மணம் வீசத் தொடங்கிவிட்டோம்.

கள்ளத்தனமான சந்திப்புக்கள் ஏற்பட்டன. கலித்தொகை காட்சிகளுக்கு ஒத்திகைகள் நடந்தேறின. இந்த ரகசியம் எத்தனை நாளைக்கு நிலைக்கும்! இரண்டு காதல் மனங்களின் மாயத் தொடர்பையே துப்புத் துலக்கி விடுகின்ற கூர்மையுள்ள மனித உள்ளத்திற்கு சந்தன மரங்கள் போன்ற உருவங்கள் சந்தித்துப் பேசுவதைக்கண்டு பிடிப்பது கடினமான காரியமாகி விடுமா? அவ்வளவுதான். கல்லூரிச் சுவர்கள் எங்கள் காதல்

கதைகள் கூறும் சுவடிகளாகிவிட்டன. பொருமைப் பேச்சுக்கள் வெடித்துக் கிளம்பின. 'பருவக்காற்றின் மோதலால் உருவாகும் மேகத்திரள்தான் காதல் என்பது' என்று பேசித் திரிந்த கருணையானந்தம் கூட மையலில் சிக்கிக் கொண்டானே! நாச்சியாரின் தகப்பனுரோ ஒரு ராணுவ தளபதி. அவரோ கடுங்கோபி. அவருக்குத் தெரிந்தால் இவன் கதி என்னவாகும்? ஒரே தோட்டாவில் கருணையானந்தத்தைக் காலி செய்து விட்டுப் போய்விடுவாரே, என்று அவருக்காக பச்சாதாபப் படாத பேராசிரியர்களே இல்லை. என் தந்தையைப் பற்றி அவருக்கு அச்சுறுத்தியது ஒன்றும் தவறில்லை. நூற்றுக்கு நூறு உண்மைதான். அதற்காக நாங்கள் சந்திப்பையோ, உறவு களையோ துண்டித்துக் கொண்டு விட முடியுமா? எங்கள் காதல் வெறும் புறத்தோற்றத்திஞல் மட்டும் உருவானதாக இருந் திருந்தால், எங்களில் யாராவது ஒருவர் சிணுங்கிக் கொண்டு ஒதுங்கியிருப்போம். எங்கள் நேசம் அறிவுப் போட்டியால் ஏற் பட்டதால், ஒவ்வொரு நாளும் எங்கள் நெருக்கம் இறுகிக் கொண்டே வந்தது.

என் தந்தை ரிட்டையர் ஆகிவிட்டார். அவர் சென்னைக்கு வந்து அங்கு பூட்டிக் கிடந்த எங்கள் வீட்டிலேயே வாசம் செய்யத் தொடங்கினுர். ஆனுல் அவர் பெண்ணில்லாத வீட்டில் குடியிருந்தது எனக்கு வியப்பளிக்கவில்லை. ஏனென்ருல் அவர் வாழ்நாள் முழுவதையுமே அப்படித் தானே கழித்திருக் கிருர்? எடுப்புச் சாப்பாடும் ஏகாந்த வாழ்க்கையும் வீடு வாசல் இல்லாத தனி மனிதனுக்கு இதமாக இருக்கலாம். ஆனுல் பளிங்குச் சிலைபோன்ற ஒரு பெண்ணையும், மாளிகை போன்ற ஒரு வீட்டையும், வைத்துக் கொண்டு ஒண்டியாக இருப்பதைப் போன்ற கொடிய தண்டனை வேறு எதுவும் இருக்க முடியாது தான், என்ன செய்வது? என் தந்தையோ முன்னேயும் பின்னே யும் சிந்திக்க விரும்பாத முரட்டு சுபாவம் கொண்டவராயிற்றே ஒரு வயோதிக உள்ளத்தை இலக்கிய ரசனை பக்குவப்படுத்த லாம். அல்லது பேரப் பிள்ளைகள் பக்குவப்படுத்தலாம். என் தந்தைக்கு இந்த இரண்டுமே இல்லை! இந்த இரண்டும் இல்லாத

வர்களுக்கு பூக்களின் மீது வெறுப்பு ஏற்பட்டால் கூட ஆச்சரிய மில்லைதான்.

இவ்வளவு கடினமான சித்தம் கொண்டவருக்கும் கோபம் வந்து விட்டால் எப்படி இருக்குமென்று வர்ணிக்க முடியுமா? அது வந்துவிட்டது ஒருநாள்.

## 2

எனக்கும் கருணையானந்தத்திற்கும் இருந்த உறவு என் தந்தைக்கு எப்படியோ தெரிந்து விட்டது. ஒருநாள் அவர் என்னை ஹாஸ்டலிலிருந்து வீட்டிற்கு வரவழைத்தார். அவரது நெற்றி நரம்புகள் புடைத்திருந்தன. நான் உள்ளே நுழைந்ததும் குற்றவாளியைப் பார்க்கும் போலீஸ் அதிகாரியைப் போல் வெறித்துப் பார்த்தார்.

''எனக்கு ஆண் குழந்தையில்லை என்று கவலைப்படுவதை விட, எனக்கு குழந்தையே பிறக்கவில்லை என்று நான் தீர்மானித்துக் கொள்வது மேலானது. உன்னைவிட நான் என் ஆயுதங்களை நேசிக்கிறவன். உன்னை நான் ஒருபோதும் தோளில் சுமந்ததில்லை. என்னுடைய ஆயுதங்களைத்தான் தினந்தோறும் தோளில் சுமந்திருக்கிறேன். அதுதான் எனக்கு மூத்தப்பிள்ளை. அதற்குப் பிறகுதான் எனக்கு மற்றவர்கள். நான் 15 ஆண்டு காலமாக கர்னலாக வேலை பார்த்தேன். என்னை யாரும் நிமிர்ந்து பார்த்ததில்லை. அதிகார வர்க்கத்தில் எவனொருவன் அவனது சகபாடிகளின் அலட்சிய பார்வைக்கு ஆளாகி விட்டானோ, அன்றோடு அந்த அதிகாரிக்கு தெம்பும் உணர்ச்சியும் அழிந்து போய்விடும். உத்தியோகத் துறையில் நான் இதைக் கற்றுத் தெரிந்தவன். ஆனால் வீரம் மிகுந்த ஒரு பட்டாளத்திலிருந்தே உயிர் பிழைத்த என்னை நீ அவமானப்படுத்திவிட்டாய்'' என்று அவர் அனலைப் பொழிந்து கொண்டிருந்தார்.

நான் பதில் ஒன்றும் சொல்லவில்லை. மனிதனின் கோபம் இருபுறமும் பதமுள்ள கத்தியைப் போன்றது. கோபக்காரர் களில் சிலர், எதிர்த்துப்பேசினல் எகிறிக் குதிப்பார்கள். தாழ்ந்து பேசினல் தரையில் போட்டு மிதிப்பார்கள். இதில் என் அப்பா எந்த வகையைச் சேர்ந்தவர் என்று எனக்கு தெரியவில்லை. அவரும் நானும் நெருங்கிப் பழகியிருந்தால் அல்லவா, அவரு டைய குணம் எனக்கு தெரிந்திருக்கும்.

"நீ ஒரு கர்னலின் மகளல்ல நீ அப்படி நடந்து கொள்ள வில்லை. பூச்சிக் கத்தரிக்காய் வியாபாரம் செய்யும் ஒரு பட்டிக் காட்டுப் பெண்ணைப் போலவே நடந்து கொண்டு விட்டாய். நான் ஒரு வேலையில்லாத சீர்திருத்தவாதியாக இருந்தால் நீ நினைக்கின்றவனை உனக்குப் புருஷனுக ஆக்கி வைக்கலாம். நான் ஒரு அதிகாரி இளமையிலிருந்தே அதிகார போதையில் மிதந்து ஊறிப் போனவன். எனக்குச் சமத்துவம், சகோதரத்துவம் என்பவையெல்லாம் பிடிக்காதவை. சாஸ்திரங்கள் எப்படி உத வாதவையோ, அப்படித்தான் சீர்திருத்தங்களும் உதவாதவை யென்று கருதுபவன் நான். காளான் எப்படி வேகமாக முளைத்து கருகிவிடுகிறதோ அதுபோலத்தான் காதலும் வேகமாகத் தோன்றி அழிந்து விடக்கூடியது. ஆனல் பெற்றோர்கள் பார்த்து வைக்கும் திருமணம் அப்படிப்பட்டதல்ல. ஒரு விவசாயி விளைச் சலுக்கு முன்னல் நிலத்தை எப்படி பக்குவப் படுத்துகிருனே, அதுபோலத்தான் பெற்றோர்களும் மகளுக்கு மாப்பிள்ளைப் பார்க்கிருர்கள்." கர்னல் இப்படிக் கர்ஜித்தார்.

என் தந்தை இந்த யுகத்திற்குப் பிடிக்காத பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருக்கிருர். என்னிடமிருந்து எவையாவது அவர் எதிர்ப்பார்த்திருக்கக் கூடும். எதை நினைத்து அவர் இப்படிப் பேசுகிருர் என்பதை அறிந்து கொள்ளுமுன், நான் குறுக்கிடுவது புத்திசாலித்தனமாகாது என்று நான் தீர்மானித்துக் கொண் டேன்.

"நீ விவரம் தெரியாத பெண். வருங்காலமே இல்லாத ஒரு வரட்டுத் தமிழ் வாத்தியாரின் மகனிடத்தில் மனதைப் பறி

கொடுத்துவிட்டு அலேகிருய்! வேட்டியும், சட்டையும் போட்டுக் கொண்டு வெளியே வர வெட்கப்படும் காலம். புழுக்களே வைத்து வெள்ளி மீன்களேப் பிடிக்கும் தூண்டிற்காரனேப்போல அவன் உன்னே மயக்கி விட்டான். நீண்ட நாட்களாக என் துப்பாக்கி உறங்கிக் கொண்டிருக்கிறது அதற்கு வேலே கொடுக் கும்படி நீ என்னேத் தூண்டாதே. ஒரு கர்னலின் மகள், ஒரு கர்னலின் மகனுக்குத்தான் மனேவியாக வேண்டும். இது என்னு டைய அசைக்க முடியாத தீர்மானம். இதை நிறைவேற்றியே தீருவேன். இதில் என் குறி தவறினல் என் துப்பாக்கி உன்னே விட்டுவைக்காது'' என்று பேசிவிட்டு ஜீப்பை எடுத்துக்கொண்டு வெளியில் போய்விட்டார்.

நான் அவரிடத்தில் பிரியமுடன் பேசி அறியாதவள். என்னுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே அவரை என் கார்டி யனுக மதித்தேனே தவிர, தந்தையாக மதிக்கமுடியவில்லே. சில இயந்திரங்கள் உற்பத்தி ஸ்தானத்திலேயே கோளாராக அமைந்து விடுவதுபோல், என் தந்தையின் மனமும் தொடக் கத்திலேயிருந்தே இரும்பாக அமைந்து விட்டது. என்ஞல் ஆனமட்டும் அவர் மீது மதிப்பும் பாசமும் வைத்துகூட எனக் குப் பயன் தரவில்லே. ஒரு நாணயம் செல்லுபடியாகக் கூடிய தாக இருக்க வேண்டுமானல் அது இரண்டு பக்கமும் தேயாமல் இருக்க வேண்டுமென்ற தத்துவத்தைப் பாசத்திற்குக் கூட ஒப்பிடலாம். நான் மட்டும் அவரை என் தந்தை என்று கருதி என்ன பயன் அடைந்துவிட்டேன். விரக்தியடைந்த உள்ளம், பசியெடுத்த வயிறு மாதிரி எங்காவது தனக்கு அன்பு கிடைக் காதா என்று அலேகிறது. நான் மட்டும் அதில் எப்படி தப்ப முடியும்?

வெளியில் தெரிகிறவரை தான், காதல் ரகசியமாக இருக் கும். ரகசியம் உடைந்துவிட்டாலோ அது துர்நாற்றம் மாதிரி எங்கும் வேகமாகப் பரவிவிடும். முறையாக நடந்த கல் யாணத்தைப்பற்றி உறவினர் மட்டும்தான் விமர்சனம் செய் வார்கள். ஆனல் காதலேப்பற்றியோ ஊரெங்கும் பேச்சுக் கச்சேரி நடந்தே தீரும். காதலர்கள் அதைச் சந்தித்தே ஆக

வேண்டும். காதல் என்பது ஒரு யுத்தம். அதில் ஈடுபடுபவர்கள் வெற்றி தோல்விக்காக ஆருடம் பார்த்து இறங்குவதில்லே. காதலேப்பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக்கூறலாம். அது அவரவர்களுடைய அனுபவத்தைப் பொறுத்தது. சிலர் அதைக் காகிதவெடி என்கிருர்கள். வேறுசிலர் அதைப் பனித் துளி என்கிருர்கள். இன்னும் சிலர் காற்றில் ஆடும் விளக்கு என்கிருர்கள். இந்த உதாரணங்களெல்லாம் காதலின் முடிவுக்குப் பிறகு தோன்றியவை. இப்படிப்பட்ட அபாய அறிவிப்புகளுக்குப் பிறகும் கூட காதல் என்ற ஒரு தத்துவம். இலக்கியத்திலும், வாழ்க்கையிலும் இன்னும் அழியாமலிருக்கிறதென்ருல் உண்மையான காதல் வாழ்க்கை என்ற புண்ணிய வாழ்க்கை உலகத்தில் எங்கோ இருக்கிறதென்று தானே பொருள் என்னேப் பொருத்த வரையில் நான் அந்த வாழ்க்கையைத் தேடித்தான் போய்க் கொண்டிருக்கிறேன், வெற்றி தோல்வி பற்றி நான் அக்கறைப் படவில்லே. என்னேப் போலவே அவரும் நினேக்க வேண்டுமென்று தான் பிரார்த்திக்கிறேன்.

இன்றுவரை எங்களுக்குள் கருத்துவேறுபாடுகள் எழவில்லே. எங்களுடைய நிறங்களே விட, எங்களுடைய உயரங்களே விட, எங்களுடைய கொள்கையும், மனமும் மிகவும் பொருத்தமாக அமைந்தவை இந்தப் பொருத்தத்தை மாற்றுவதற்கு பெரிதும் பாடுபட்டுக் கொண்டிருப்பவர் மயில்வாகனன். அவரது குறுக்கீட்டையும், நையாண்டியையும் நான் பொருட்படுத்தவில்லே. காதலின் சுவைக்கு ஒரு வில்லன் தேவையல்லவா?

மயில்வாகனன் சிறந்த விளேயாட்டு வீரர். தங்கப்பதக்கங்களேப் பெற்று எங்கள் கல்லூரிக்குப் பெயர் எடுத்துக் கொடுப்பவர். கவர்ச்சியான தோற்றமுடையவர். வெளிப்படையாகச் சொன்னுல் கருணேயானந்தத்தை விட அழகானவர். காதல் மட்டும் அழகிலே பிறப்பதென்ருல், நான் அவரைத்தான் காதலித்திருப்பேன். மயில்வாகனரின் பார்வையும், சிலேடையான பேச்சும் அவர் என்னே விரும்புகிருர் என்பதை எனக்கு நன்ருகச் சுட்டிக்காட்டின. ஒரு நாள் அவர் என்னே நெருங்கிவந்தார்.

# 3

'நாச்சியார்' என்று கூப்பிடும் குரல் கேட்டது திரும்பிப் பார்த்தேன். மயில்வாகனன் தான் என் பின்னால் வந்து கொண்டிருந்தார்.

'என்ன வேண்டும்?' என்று கேட்டேன்; 'மற்றவை என்னிடம் நிறைய இருக்கின்றன' என்றார்.

அவரது பதில் எனக்கு அருவருப்பைக் கொடுத்தது. நாடக வசனம் போல் செயற்கையாகப் பேசினார் அவர்.

''இது முறையா உங்களுக்கு! மாட்டுச் சந்தைக்குப் போய் உழவுக்கு மாடு வாங்குவது மாதிரி ஒரு பெண்ணின் உறவை வாங்கிவிட முயற்சிக்கலாமா?'' என்றேன்.

''பெண்களின் தரத்தை நீதான் குறைத்துக் கொள்கிறாய். பெண்களை மாடுகளுக்கு ஒப்பாகக் கூறலாமா? அவர்கள் தாய்க் குலமல்லவா! இன்னும் சொல்லப் போனால் அவர்கள் தெய்வங்களாயிற்றே!'' இந்தப் பதிலிலிருந்து முதல் நாள் இரவு மயில் வாகனன் ஏதோ ஒரு சினிமா பார்த்திருக்கிறார் என்று நன்றாகப் புரிந்தது.

''நான் உங்களைப் பெரிதும் மதிக்கிறவள். உங்களால் ஏதோ ஒரு வகையில் இந்தக் கல்லூரிக்குப் பெருமை சேருகிறது. அந்த மதிப்பை நீங்கள் காத்துக் கொள்வதே நல்லது'' என்று உரையாடலுக்கு முடிவு கூறினேன்.

''கால் பந்தாட்டத்தில் பெனல்ட்டிஷாட் எளிதில் கிடைக்காது. எப்போதாவதுதான் கிடைக்கும். அதில் கோல் அடிக்க முடியாவிட்டால் வெற்றி மதில்மேல் பூனைதான். நீ இன்று

தனியாகக் கிடைத்திருப்பது எனக்கு பெனல்ட்டிஷாட் கிடைத்தது மாதிரி'' மயில்வாகனன் விளையாட்டு வீரராகையால் அந்தப் பாணியிலேயே பேசினார்.

நான் பதில் பேசவில்லை. நான் பதில் சொன்னால் அவரும் எதையாவது சொல்வார், பேச்சு வார்த்தைகளுக்கு முடிவு ஏற்படாது. எட்டியிருந்து பார்ப்பவர்களுக்கு நாங்கள் இருவரும் உற்சாகமாகப் பேசிக் கொண்டு போவது போலவும் தோன்றும் என்பதால், நான் பேசாமல் நடந்து கொண்டே போனேன்.

''வருகிற சனிக்கிழமை தாவர இயல் மாணவர்களுக்கு 'பிக்னிக்' இருக்கிறது. அதற்கு நீயும் வந்துதானே ஆகவேண்டும்! பென்ல்ட்டிஷாட் கிடைக்காவிட்டாலும், கார்னர் ஷாட்டாவது கிடைக்காமலா போய்விடும்! குட்பை, நாச்சியார்!'' என்று கத்திக் கொண்டே அவர் வகுப்பறைக்குள் போய் விட்டார். நான் அவரைக் கோபமாகப் பேசியது எத்தனை பேருக்குத் தெரியப்போகிறது. நாச்சியாருக்கும் மயில்வாகன னுக்கும் ஏதோ ஒரு ஊடல் இருக்கிறதென்று யாராவது கதை பின்னி விடாமலா இருக்கப் போகிறார்கள் என்ற அதிர்ச்சி எனக்கு ஏற்படத்தான் செய்தது.

எனக்கு நிம்மதியில்லை; மயில்வாகனன் வகுப்பறையில் என்னையே கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டேயிருந்தார். இவருக்கு திடீரென்று இந்தப் பைத்தியம் எப்படிப் பிடித்தது ஒருவேளை நான் தனியாக வந்த சந்தர்ப்பத்தை அவர் பயன் படுத்தத் தொடங்கியிருப்பாரோ என்று கூட எண்ணத் தோன்றியது. எந்த நாளும் இல்லாத முறையில் அன்று அவர் அவ்வாறு நடந்து கொள்ளக் காரணமில்லாமலா இருக்கும்! திறமைசாலிகள் வெற்றி வாய்ப்பை இழந்து விடுவதற்கும், அறவே தகுதியற்றவர்கள் போட்டியின்றித தேர்ந்தெடுப்பதற் கும் சந்தர்ப்பங்களை இழப்பதும், பயன்படுத்திக் கொள்ளுவதும் தான் அடிப்படைக் காரணங்கள். இவ்வளவு காலமாக இல்லா மல், நான் தனிமையாக வந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு மயில்வாகனன் என்னைச் சீண்டிப் பார்த்தது அவருக்கு

ஒரு வகையில் வெற்றிதானே! இதை எப்படி நான் கருணையானந்தத்திடம் சொல்லுவது! சொன்னால் அவர்கள் இருவருக்குள் பெரும் பகை மூண்டு விடும்; சொல்லா விட்டால் இதை ஏன் நீ அப்போதே என்னிடம் சொல்லவில்லை என்று பின் எப்போதாவது கருணையானந்தம் கேட்பார். ஒவ்வொரு பெண்ணுடைய வாழ்க்கையிலும் இப்படி ஒரு அத்தியாயம் வராமல் இருக்காது. அந்தக் கட்டத்தில் அவள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கத்தான் செய்வாள். பெண்கள் மற்றவர்களுக்கு மட்டும் புதிராக விளங்குவதில்லை; ஒரு பெண் சில சமயங்களில் தனக்கே புதிராகி விடுவதுமுண்டு! அதுவும் மையலில் ஈடுபட்ட பெண்களைச் சொல்லவே வேண்டாம். தினசரி தெம்மாளிகளாகவும், வினய மற்ற பூச்சிகளாகவும் மாறி மாறித்தான் காலத்தைத் தள்ளுவார்கள். பெண்கள் எப்படிப் பழகினாலும், அவர்களைப் பற்றி ஏதாவது விமர்சனங்கள் எழுந்துதான் அடங்கும். சத்தம் போட்டு பேசினால், அவள் நாணமில்லாதவள்; பாலில்லாத பசுவிற்குச் சமமானவள் - என்று நையாண்டி செய்வார்கள். ஊமையாகவும் அடக்கமாகவும் இருந்தால் அவளைப் போன்ற சகுனியையோ கூனியையோ பார்க்க முடியாது என்று இடித்துப் பேசுவார்கள். வாய்ப் பெட்டிகளின் பேச்சுக்கச்சேரிகளுக்கு கருப்பொருளாகச் சிக்காமல் தப்பித்துக்கொண்டு வந்த நான் கூட கடைசி ஆண்டில் சிக்கிக் கொண்டேன். வெறும் வாயை மெல்லுகிறவர்கள், அவல் கிடைத்தாலே விடமாட்டார்கள்; நானே கிடைத்து விட்டேனே! நாச்சியார், யாருக்கு? அறிவாளிக்கா? ஆட்டக்காரனுக்கா? என்ற வெடிக்கட்டுகள் கல்லூரி வராந்தாக்களில் வெடித்துத்தெறித்தன.

மகாபலிபுரத்திற்குப் பிக்னிக் போகும் நாள் வந்தது. கருணையானந்தம் இலக்கியம் படிக்கும் மாணவர். அவர் எங்களுடன் பிக்னிக் வர முடியாது. தாவர இயல் படிப்பவர்களுக்கு மட்டுமே பிக்னிக் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாங்கள் காலையிலேயே மகாபலிபுரம் புறப்பட்டு விட்டோம். நாங்கள் மொத்தம் பதினைந்து மாணவர்கள் தான். அவர்களில் என்னைச் சேர்த்து மூவரே பெண்கள். பெண்கள்

எல்லோருமே பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள். ஒருத்தி பிரின்ஸ்பால் மகள். இன்னொருத்தி ஜட்ஜ் மகள். நானோ கர்னல் மகள் மூவரில் எனக்கு மட்டும் தான் பெற்றோர்களின் பாது காப்பு இல்லை. இது எனக்கு ஒரு மனக்குறையாகப்பட்டது. சில நேரங்களில் பெற்றோர் இல்லாத பெண்களை அங்கஹீனர்களாக கூட இந்த சமுதாயம் கருதி, அவர்களை உதாசீனப்படுத்தியிருக் கிறது. அப்படி ஒரு சூழ்நிலை எனக்கு வந்து விடக்கூடாது என்ப தற்காகவே, எனக்கு ஏற்றவர் என்று கருதி, கருணையானந்தத் தோடு வாழ நான் தீர்மானித்துக் கொண்டேன், ஆனால்?

# 4

நாங்கள் மகாபலிபுரம் போய்ச் சேர்ந்து விட்டோம். வழக்கமாக பார்க்கும் கல் யானை, கலைச்சிற்பங்களைப் பார்த்து விட்டு திரும்பும்போது எங்களைத் திடுக்கிடச் செய்யும் தகவல் ஒன்று எங்களுக்குக் கிடைத்தது. மயில் வாகனன் ஸ்கூட்டரில் வந்து கொண்டிருந்தபோது, யாரோ அவனைச் சுட்டு வீழ்த்தி விட்டதாகவும், ஆனால் அவர் உயிர் தப்பி விட்டதாகவும் நாங்கள் கேள்விப்பட்டோம். எங்கள் பேராசிரியர் அதிர்ச்சி அடைந்தார். எனக்கும் மனதுக்கு வேதனையாகத் தானிருந்தது. அவர் மீது எனக்குக் காதல் இல்லாவிட்டாலும், சராசரி மனிதாபிமானமாவது இல்லாமல் போகுமா?

அதற்குமேல் அங்கு சுற்றிக் கொண்டிருப்பது நல்லதல்ல என்று நாங்கள் உடனே சென்னைக்குத் திரும்பி விட்டோம்.

நான் வீட்டுக்குள் நுழையும்போது, என் தந்தை பரப் பரப்பாகக் காணப்பட்டார். அவர் அரண்டிருப்பது போல் எனக்குத் தெரிந்தது. எதற்கும் கலங்காமலும், கடுகடுப்பாகவும் பேசும் அவர், என்னைப் பார்த்ததும் கண்கலங்கி விட்டார்!

"என்னப்பா இதெல்லாம்!" என்று அதிர்ச்சியோடு கேட்டேன்.

"ஊழ்வினை, என் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் என்னைத் தோற்கடித்துவிட்டதம்மா!" என்றார்.

"அப்பா!"

"என்னால் ஒரு பையனின் வாழ்க்கை பாழாகிவிட்டதம்மா! பொழுது போகவில்லையே என்று துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வேட்டைக்குப் போனேன். மணற்பாங்கான ஒரு இடத்திலிருந்து ஒரு மணிப் புறாவைக் குறி வைத்துச் சுட்டேன், குறி தவறிப்போய் அந்த மார்க்கமாக மகாபலிபுரம் நோக்கிப் போய்க் கொண்டிருந்த ஒரு ஸ்கூட்டரில் அடித்துவிட்டது. அவ்வளவுதான் ஸ்கூட்டர் உருண்டது! அதை ஓட்டிச் சென்ற கல்லூரி மாணவருக்கு ஒரு கை முறிந்து விட்டது!" என்றார் காசிநாத்.

"அப்பா!" என்று கதறினாள் நாச்சியார்.

"என்னம்மா, நீ இப்படி அலறுகிறாய்! அவர் உனக்குத் தெரிந்தவரா?"

"அவர் பெயரைக் கேட்டீர்களா? அவர் சிவப்பாக இருப்பாரா? பார்ப்பதற்கு இலட்சணமாக இருப்பாரா? பெயர் என்னப்பா சொன்னார்?"

"அவனுக்கு இன்னும் சுயநினைவு வரவில்லையம்மா!"

நாச்சியார், மேலும் மேஜர் காசிநாத்தைக் கூட்டிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தாள். அங்கு அபாயக் கட்டத்தில் இருக்கும் நோயாளிகளை வைத்திருக்கும் கூடத்தில் அவன் படுத்திருந்தான். அவன் கண்கள் திறந்திருந்தன!

"மிஸ்டர் மயில்வாகனன்! எனக்காக எங்கப்பாவை மன்னித்து விடுங்கள்." இந்தப் பெரிய தவறினைச் செய்தவர்

என் தந்தை தான். அவர் ஓய்வு பெற்ற ஒரு இராணுவ அதிகாரி என்றேன். காயமடைந்தது மயில்வாகனனுகத் 'தானிருக்கும் என்ற என் யூகம் சரியாகப் போய்விட்டது.

என் சமாதானத்தைக் கேட்டதும் மயில்வாகனனின் உதடுகள் விரிந்தன. அவர் முகத்தில் லேசான புன்முறுவல் தெரிந்தது.

பத்து நாட்களுக்குப் பிறகு, என் அப்பாவின் விருப்பப் படியே மயில்வாகனனை எங்கள் வீட்டுக்கே கொண்டு வந்து சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தோம்.

நான் இரண்டு வாரங்களாக கல்லூரிக்கே செல்லவில்லை. காரணம், என் தந்தை செய்த தவறுக்கு நானே பிராயச்சித்தம் தேடிக் கொள்ளும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுவிட்டது.

"படுக்கையில் இருக்கும் மயில்வாகனனுல் எழுந்து நட மாட முடியாது. எந்தப் பொருளையும் கையில் உறுதியாகப் பிடிக்க முடியாது. அவர் எழுந்து நடமாடும் வரை, நாம் தான் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ள வேண்டும்" என்று என் தந்தை என்னிடம் சொன்னது எனக்கு ஓரளவு நியாயமாகத் தான் பட்டது தினையை வாங்க கடை இருக்கலாம்; நெல்லை வாங்க மண்டி இருக்கலாம்; வினையை வாங்கச் சந்தை ஏது?

நான் மயில்வாகனனுக்கு மனக்குறை ஏற்பட்டு விடாமல் பணிவிடைகளைச் செய்து கொடுத்தேன். தன் குழந்தையை அடுப்புக்கருகில் போகவிடாமல் தடுக்கும் ஒரு தாயாரைப் போல, என் பருவம் என்னைச் சில கட்டங்கள் வரை அவருக்குத் துணைபுரிய இடம் கொடுத்தது. அதற்கு மேலும் அவர் எதிர் பார்ப்பது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்?

ஒருநாள் காலை நான் அவருக்குக் காபி கொடுப்பதற்காக அவரைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டு எழுப்பினேன். அவர் என் கையைப் பற்றிக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்தார். நான் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. அவரால் எழுந்திருக்க

முடியாமல் தான், அவ்வாறு என் கையைப் பற்றியிருக்கிறுர் என்று எண்ணிக் கொண்டேன். ஆனால் அவர் அப்படி நினைக்க வில்லை என்பதை மறுநாள் நடந்த சம்பவம்தான் எனக்கு உறுதிப்படுத்தியது.

"நாச்சியார்!"

"என்ன வேண்டும்?"

"ஏதாவது நாவல் இருந்தால் கொடேன்; புத்தகம் படித்தே பல நாட்களாகி விட்டன".

மறுநாள் புத்தகக் கடைக்குப் போய் நல்ல நாவல்களை வாங்கி வந்து கொடுப்பதற்காகப் படுக்கை அருகே போனேன். அன்று அவர் என்னைப் பார்த்த பார்வையே எனக்கு அருவருப்பைக் கொடுத்தது. நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். புத்தகத்தை வாங்கிக் கொள்வதைப் போல பாவனை செய்து கொண்டு என் கரத்தைப் பற்றிஞர். எனக்கு பயத்தால் உடம்பு வியர்த்து விட்டது. கொக்கைப் போல ஊமையாக இருந்து இதை மூடி மறைத்து விடுவதா, அல்லது வல்லூறுவைப் போல் சினங் கொண்டு சண்டை போடுவதா என்ற மனப் போராட்டம் என்னுள் எழத்தான் செய்தது கோழிகளும், வாத்துக்களும் முடிந்த வரை ஓடித் தான்பார்க்கும்; முடியாத கட்டத்தில் தான் சிறகடித்து பறக்க பார்க்கும். பெண்களும் அப்படித் தான். முடிந்தவரை பொறுமையாக இருப்பார்கள்; துன்பத்தின் எல்லைக் கோட்டுக்குப் போன பிறகுதான் விஷயங்களை வெளிப் படுத்துவார்கள்.

மயில்வாகனன் எனது பொறுமையை நான் அவருடைய எண்ணத்திற்குச் சம்மதம் தெரிவிக்கிறேன் என்று நினைத்துவிடக் கூடாதே என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது. அதற்காக நான் ஒருவேலை செய்தேன். மறுநாள் அவருக்கு இன்னொரு நாவலைக் கொடுக்கப் போகும்போது அதற்குள் என் எண்ணத்தை சுருக்கமாக குறிப்பிட்டு ஒரு கடிதத்தை எழுதி அந்த நூலில் வைத்துக் கொடுத்தேன். கடிதம் மிகவும் சுருக்கமானது. ஒரு சிறிய

ஓட்டை ஒரு பெரிய கப்பலைக் கவிழ்த்து விடுவதைப் போல அந்தச்சிறிய கடிதம்தான் என் வாழ்க்கைப் பாதையையே திசை திருப்பி விட்டுவிடும் என்று நான் கனவு கூடக் காணவில்லை. இதுதான் கடிதம்—

அன்புடையீர்,

வணக்கம், தாங்கள் சில நாட்களாக என்னிடம் நடந்து கொள்ளும்முறை எனக்குப் பெரிதும் மனத்துயரத்தை அளித்து வருகிறது. நான் உங்களுடன் பழகுவதையும், பேசுவதையும், பணிவிடைகள் செய்வதையும் நீங்கள் தவருகப் புரிந்துகொண்டு நான் உங்களைக் காதலிப்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறீர்கள் அது தவறு.

என் தந்தை பொல்லாதவர்; மிகவும் பொல்லாதவர்; அவருக்குத் தெரிந்தால் விபரீதமாகப் போய்விடும். ஆகவே என்னை மறந்து விடுங்கள்.

இப்படிக்கு
நாச்சியார்

-இதுதான் நான் எழுதிய கடிதம். இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்த பின்னர் அவர் முகவாட்டத்தோடு காணப் பட்டார். கடுகடுவென்று பேசினர். பேச்சோடு பேச்சாக ஒரு நாள், "இப்போது தான் நீ வகையாகச் சிக்கிக் கொண்டாய். நான் உன்னை அடைய முடியாவிட்டாலும், நீ கருணையானந் தத்தை அடைய முடியாது" என்று சூடாகச் சொன்னர் இதைக் கேட்டதும் என் மனம் இருளடைந்தது போல் தோன்றியது.

மயில்வாகனன் பெரிய பணக்காரர். எதையும் துணிந்து செய்யலாம் இருந்தாலும் என் வீட்டுக்குள் இருந்து கொண்டே என்ன செய்துவிடமுடியும் என்றுதான் சாதாரணமாக நினைத்து விட்டேன்; இப்படியே விடிந்தும் விடியாததுமாக பத்து நாட்கள் ஓடின. அவரைப் பார்ப்பதற்கு மாணவர்கள் வந்து போக ஆரம்பித்தார்கள்.

"மேஜர் சார், மயில் இல்லாமல் எங்கள் கல்லூரிக்கு விளையாட்டுப் பதக்கங்கள் எதுவும் இந்த ஆண்டு வராமல் போய் விட்டது".

"மன்னிக்க வேண்டும்; எதிர்பாராமல் இப்படி நடந்து விட்டது".

என் தந்தை அவர் வாழ்நாளில் இப்படிக் குனிந்து கொடுத்ததே இல்லை.

"என்ன இருந்தாலும், மேஜர், இனி மயில்வாகனன் வாழ்க்கை சுபிட்சமாக இருக்குமென்று நினைக்கிறீர்களா? அவனுக்கு ஒரு கை ஒச்சமாகப் போய் விட்டது. அவனிடம் இலட்சக் கணக்கில் பணம் இருக்கலாம்; பெரிய வீட்டுக் காரனாக இருக்கலாம். ஆனால் இதையெல்லாம் நம்பியா ஒரு பெண் அவனுக்கு மனைவியாகப் போகிறாள். அவன் வாழ்நாள் முழுதும் அரைக்கை சட்டையே போட முடியாது. கையை மறைப்பதற்கு எப்போதும் முழுக்கை சட்டைதான் போட வேண்டும்" என்று அடுக்கிக் கொண்டே போனார் மயில் வாகனனின் நண்பர் ஒருவர். அவர் வரலாற்று மாணவராகையால், அவர் பேச்சே ஒரு விரிவுரையாக இருந்தது.

நான் புரிந்து கொண்டேன் மாணவர்கள் எந்தக் கட்டத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்று. இப்படியே மாணவர்களின் மிரட்டல் வேலைகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. எத்தனையோ மாணவர்கள் மயில்வாகனனைப் பார்க்க வருகிறார்கள். ஒரு நாள் கூட கருணையானந்தம் வரவில்லையே என்று நான் துக்கப்படாமல் இல்லை. பலமுறை என் கண்களைக் கசக்கி கொண்டிருக்கிறேன். ஒரு நாள், நான் ஆச்சரியப்படதக்க வகையில் அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. மிகுந்த ஆவலோடு, சினிமாக்களில் வரும் காதலிகளைப் போல, நான் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். ஆனால் அது கடிதமல்ல! அது சம்மட்டி அடி!

குமாரி நாச்சியாருக்கு,

உன் கடிதம் கிடைத்தது. நீ என்னை விரும்பவில்லை என்பதைப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்திருப்பது, உன்னிடமுள்ள நல்ல பண்புகளில் ஒன்று. அந்தப் பண்பை வரவேற்கிறேன். உன் தந்தை ஏற்பாடு செய்யும் மணமகனைக் கைப்பிடித்து வளமாக வாழ வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
கருணையானந்தம்

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் என் கண்கள் பஞ்சடைந்து விட்டன. ஏதோ சதி நடந்திருக்கிறது என்று மட்டும் எனக்குப் புரிந்தது. ஆனால் யார் செய்த சதி? எப்படி நடந்த சதி என்பதை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நாச்சியார்!" என்று மயில்வாகனன் கூப்பிட்டார். அருகில் போய் என்ன வேண்டும்? என்று கேட்டேன்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம்; நீ படித்தாயே, அது கடிதமா?" என்று நையாண்டியாகக் கேட்டார்.

"இது என் சொந்த விஷயம்!" என்றேன்.

"பிறரது சொந்த விஷயங்களில் தலையிட்டு ஆறுதல் சொன்னால் தான் அது ஊக்கமளிப்பதாக இருக்கும். பொது விஷயங்களில் தலையிட்டால் அது விலங்கமாகப் போய்விடும்!" மயில்வாகனனின் பேச்சில் விதர்ப்பம் தெரித்து விழுந்தது. அப்போது அவரது நண்பர், அன்று என் தந்தையிடம் அடமாகப் பேசியவர் உள்ளே நுழைந்தார்.

"மயில், அன்று நீ கொடுத்த கடிதத்தை அன்றே தபாலில் போட்டுவிட்டேன். மூன்று நாட்களுக்கு முன்பே அவனுக்குக் கிடைத்திருக்க வேண்டுமே! இன்னும் இங்கு எதிரொலிக்கவில்லையா? பரவாயில்லை! 'லேட் சக்சஸ்' தான் உறுதியாக இருக்கும்" என்று இடக்காகப் பேசிக் கொண்டே போனான். எனக்கு அந்தக் கணத்தில் நானே என் தலையில் நெருப்பை

அள்ளிக் கொட்டிக் கொண்டது போல் உணர்ந்தேன். நான் பத்து நாட்களுக்கு முன்பு மயில்வாகனனுக்கு ஒரு கடிதம் எழுதி புத்தகத்திற்குள் வைத்து மயில்வாகனிடம் கொடுத்ததை அப்படியே அவர் கருணையானந்தத்திற்கு அனுப்பியிருக்கிறார் என்ற யூகம்மட்டும், என்ன வர்ணம் என்று புரியாமல் ஆகாயத்தில் பறக்கும் பட்டம்போல் தெரிந்தது.

என் முகம் சிவந்து என் தந்தை பார்த்ததில்லை; என் முடி அவிழ்ந்து என் முதுகில் தொங்கியதையும் அவர் கண்டதில்லை. அன்று மட்டும் அவர் அந்தக் கோலத்தில் கண்டார்.

"என்னம்மா இதெல்லாம்?" என்றார்.

"அப்பா, உங்களுக்கு ஆண் குழந்தையில்லை; அந்தக் குறையை நான் உங்களுக்கு நிவர்த்திக்கப் போகிறேன்!" என்றேன்.

"நாச்சியார்!"

"உண்மை தானப்பா, எனக்கு அண்ணனோ தம்பியோ இருந்திருந்தால் உங்களுக்கு நேர்ந்திருக்கும் மனச்சங்கடத்தை போக்கியிருப்பார்கள் யாருக்கும் தலைவணங்காத உங்களிடம் பலர் பலவிதமாகப் பேசுவதற்கு இடம் கொடுத்திருக்க மாட்டார்கள். நானோ பெண்ணாகப் பிறந்து விட்டேன். என்னால் ஒரே ஒரு உதவிதான் செய்ய முடியும். அந்த உதவியைத் தான் மயில்வாகனனும் அவரது நண்பர்களும் விரும்புகிறார்கள். மகிழ்ச்சியோடு என்னை வாழ்த்துங்கள். நான் மயில்வாகனரையே திருமணம் செய்து கொள்ளத்தீர்மானித்து விட்டேன்". இப்படி நான் சொன்னபோது என் கண்களில் கண்ணீர் பனிப் பூக்களைப் போல் பூத்து ஒழுகினாலும் நான் தீர்க்கமாக முடிவு செய்துதான் இப்படிச் சொன்னேன். இதை விதி என்று சொன்னால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்; இதைத் தலையெழுத்து என்று சொன்னாலும் என் மனம் ஏற்காது. ஏனெனில் இந்த முடிவு நானே எடுத்தது இதுதான் உன் எதிர்காலம்,

உன்னல் இதை மாற்ற முடிந்தால், செய்து கொள் என்று எனக்கு முன் கூட்டியே சவால் விடுத்து அதில் நான் தோல்வி அடைந்தால்தான் அதை விதி என்று கூறலாமே தவிர ஏற்பட்டு விட்ட முடிவுகளுக்கெல்லாம் விதி என்று கூறிவிடுவது எப்படி வாழ்க்கைக் குரிய நீதியாக முடியும்? காய் பழுத்துக் கனியா வதும் இலை பழுத்துச் சருகாவதும் அதன் ‘விதிகளாகி’ விடுமா? தாவர இயல் படிக்கும் எனக்கு அந்த மாற்றத்தை, வளர்ச்சியின் முதிர்ச்சி என்றுதான் கற்பித்துக் கொடுத்திருக்கிறார்களே தவிர அவைகளை விதி என்றோ, பிராப்தம் என்றோ எந்தப் பேராசிரி யரும் எங்களுக்குக் கற்றுத்தரவில்லை.

இது தான் என் முன்கதை நான் ஒரு தமிழ்ப் பெண்ணின் நெறியிலிருந்து எந்த நிலையிலும் நழுவி விடவில்லை என்றே என் மனசாட்சி எனக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறது இனி நீங்கள் தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்!

ஃ ஃ ஃ ஃ

# 1

# நந்தி

இல்லற வாழ்க்கை என்பது ரயிலோட்டம் மாதிரி. ரயில் மட்டும் சரியாக இருந்து பயனில்லை. கைகாட்டியும் ஒழுங்காக இயங்க வேண்டும். இவை இரண்டுக்கும் மேலாக தண்டவாளங் களும் பெயராமல் இருக்கவேண்டும். நாச்சியாரும் கருணையா னந்தமும் சேர்ந்து நடத்த வேண்டிய இல்லற வாழ்க்கையை ஒரு துண்டுக்கடிதம் பிரித்துவிட்டது. இப்போது மயில்வாகன னுக்கு மனைவியாகிவிட்டாள். இரண்டாவது உலகப்போரில் வெற்றி வாய்ப்பை இழந்த நேச நாடுகள் ரஷ்யாவின் மீது படிந்திருந்த பணியினல் திடீர்த் திருப்பத்தை அடைந்து மகத் தான வெற்றியை ஈட்டியதைப் போல மயில்வாகனன் ஒரு கடிகத்தினல் எதிர்பாராத வெற்றியைப் பெற்றுவிட்டான்.

வாழ்க்கை முறையில் தமிழகம் தனிச்சிறப்புப் பெற்றது. வாழ்க்கைக்கே இலக்கணம் வைத்திருப்பது தமிழ் நாட்டில் தான். மற்ற நாடுகளில் மொழிக்குத்தான் இலக்கணமுண்டு. மொழியைப் பிழையின்றி பேசுவார்கள் எழுதுவார்கள். ஆனல் இங்கு வாழ்க்கை முறையே அப்படித்தான் நடத்த வேண்டும். திருமணமாகாத வரைதான் பெண்கள், உடுக்காத பட்டுப் புடவை மாதிரி; கழுத்தில் தாலி ஏறிவிட்டால், பிறகு அவர்கள் உடுத்திப் போட்ட பழைய புடவை மாதிரிதான். கிழிந்து கந்த லாகும் வரை அந்தப் புடவைக்கு அதுதான் வீடு. அவளுக்கும் அதுதான் புகலிடம்.

நாச்சியாரின் கனவுகள் பொடியானலும் கனவுகள் பொய்த்துப் போனலும், தமிழ்ப் பெண்ணின் மரபுகளிலிருந்து அவள் நழுவவில்லை. கடமையும் சூழ்நிலையும்தான் அவளைத் திசை திருப்பிவிட்டு விட்டன என்பதை அவள் உணர்ந்தாள்.

அவளுக்கு அந்த வீட்டில் குறையே ஏற்படவில்லை. அதற்கு மாறக கிடைக்காதவள் கிடைத்துவிட்டதாக எண்ணி, அந்த வீட்டில் அவள் ராணியாகவே மதிக்கப்பட்டாள். அவளை அரச வம்சத்துப் பெண்ணகவே நடத்தவேண்டுமென்பது மயில் வாகனனுக்குத் தனியாத ஆசை. அதனல்தான் புதுக்கோட்டை அரண்மனைக்கு அவளை அடிக்கடி அழைத்துப்போனன். அப்படிப் போய் வந்து கொண்டிருந்த போதுதான் காரில் இடியும் மின்ன லும் தாக்கி நாச்சியாரின் மூளையை கலங்க வைத்துவிட்டது. திருச்சி, கொடைக்கானல் முதலிய இடங்களிளெல்லாம் மருத் துவம் பார்த்தும் பலனளிக்காமல் டாக்டர் ராஜசேகரன் யோசனைப்படி பெங்களூரில் உள்ள லேடி டாக்டர் கோகிலாம் பாளிடம் சிகிச்சை செய்வதற்காகப் பெங்களூர் பயணமானள்.

டாக்டர் கோகிலாம்பாள் சிறந்த மனேதத்துவ நிபுணத் துவம் பெற்றவள். அவளைச் சந்திப்பதற்காக முதலில் அவளோடு தொலைபேசியில் பேசினன் மயில்வாகனன்.

அதற்கு அவள் "என்னை வீட்டில் பார்ப்பதற்கு யாரையும் அனுமதிப்பதில்லை. காலை பத்து மணிக்கு நோயாளியை

அழைத்துக் கொண்டு மல்லீஸ்வரத்திலுள்ள என் மருத்துவ மனைக்கே வந்து விடுங்கள்'' என்று கோகிலா பதில் சொல்லி விட்டாள்.

வீடு அமர்த்தும் வரை ஒரு வசதியான ஹோட்டலில் தங்கலாம் என்று தீர்மானித்து 'கிருஷ்ண பவன்' என்ற ஹோட்டலில் மயில்வாகனனும் நாச்சியாரும் தங்கினார்கள் துணைக்காகக் கணக்குப் பிள்ளையும் உடன் சென்றிருந்தார்.

டாக்டர் கோகிலா கருணையே வடிவானவள். இனிய குரல் படபடப்பு சிறிதும் இல்லை. வியாதியைப் பற்றி வினவும் அவளுடைய கேள்விகளே மென்மையாக இருந்தன முதலில் பொதுவாக விசாரித்தாள். பிறகு மயில்வாகனனை மட்டும் தனியாக விசாரித்தாள். அவனும் மனம் விட்டுப் பேசினான். ''எனக்குக் கிடைக்கக் கூடாதவள் கிடைத்திருப்பதாக நான் பூரிப்படைந்திருக்கிறேன். ஆனால் அது பூரணத்துவம் பெறாமல் போய்விடுமோ என்று துயரமடைகிறேன்'' என்று கண்கலங்கச் சொன்னான்.

''உங்கள் மனைவிக்கு எதில் அதிக நாட்டம் உண்டு?'' கோகிலா கேட்டாள்.

''அவளை ஒரு அரசியாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்; அந்தக் குணமெல்லாம் அவளுக்கு உண்டு!''

''நான் குணத்தைக் கேட்கவில்லையே!''

''நானும் குணத்தைச் சொல்லவில்லை டாக்டர், அவளுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் வசதிகளைப் பற்றித் தான் சொன்னேன். இசையில் அதிகப்பற்று உண்டு! நன்றாகப் பாடு வாள். வீட்டில் வீணை இருக்கிறது. எப்போதாவது மீட்டுவாள் பியானா வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள் சென்னைக்குப் போய்விட்டு வரும்போது வாங்கி வருகிறேன் என்று சொல்லியிருந்தேன். அதற்குள்ளாக இப்படி நேர்ந்து விட்டது, டாக்டர்'' என்று குற்றவாளியைப் போல் குன்றிப் போய்ப் பேசினான்.

“தைரியமாக இருங்கள். நிச்சயமாக உங்கள் மனைவிக்கு குணமாகிவிடும். உங்கள் மனைவிக்கு ஏற்பட்டிருக்கும் தாக்குதல் என் தொழிலுக்குக்கூட ஒரு அறைகூவலாக இருக்கலாம்” என்றாள் டாக்டர் கோகிலா.

டாக்டர் கோகிலா அழகியல்ல. அவள் ஒரு மருக்கொழுந்து தோற்றத்தை விட அவள் குணம் சிறந்திருந்தது

தெம்பிழந்திருந்த மயில் வாகனனுக்கு தைரியம் வந்தது. மூழ்க இருந்த கப்பல் காப்பாற்றப்பட்டது போலவே அவன் மனம் நினைத்தது. அவன் கண்கள் கலங்கின. ஆனந்தத்தின் தொடக்கம் கூட கண்ணீரில்தான் தொடங்குகிறது என்று அவனது பேராசிரியர் சொன்னதை அவன் நினைத்துப்பார்த்துக் கொண்டான்.

ஃ ஃ ஃ

ஹோட்டலில் ஏழாம் நம்பர் அறையில் மயில் வாகனனும் நாச்சியாரும் தங்கி இருந்தார்கள். தமிழ் நாட்டு உணவு அங்கே தயாரிக்கப்பட்டுக் கொடுத்ததால் அவர்கள் அங்கு தங்கினார்கள்.

அன்று காலை எட்டு மணிக்கு அறைக்கதவு தட்டப் பட்டது.

மயில்வாகனன் கதவைத் திறந்தான். அறைவாசலில் ஒரு இளம் பெண், பார்க்கக் கவர்ச்சியாக நின்று கொண்டிருந்தாள்.

“ஓ!” என்றாள் வந்தவள்.

“என்னைத் தெரியுமா உங்களுக்கு?” மயில்வாகனன் சிந்தனையோடு கேட்டான்.

“தெரியும், மயில்வாகனன்தானே நீங்கள்! சென்னையில் இருவரும் இண்டர்மீடியட் ஒன்றாகப் படித்தோம். நான் பாதியில் படிப்பை நிறுத்திவிட்டேன். எனக்கு நினைவிருக்கிறது. நீங்களும் மறந்திருக்க முடியாது” என்றாள் வந்தவள்.

மயில்வாகனன் கொஞ்சம் யோசித்து விட்டு, "சாரதா தானே நீங்கள்?" என்றான் பட்டென்று.

"ஆம்; இப்போது என் பெயர் சாரதாதேவி."

தெருக்களிலெல்லாம் சுவரொட்டிகளில் போடப்பட்டிருக் கிறதே அது யார்?"

"அதே சாரதா தேவிதான் நான். நான் பெங்களூர் வந்து பத்து வருஷங்களாகி விட்டன."

பியானு வாத்யவித்வான் சாரதா தேவி என்பது நீங்கள் தானு?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் மயில் வாகனன்.

"நானேதான். ஆச்சரியப்பட வேண்டாம். நான் நன்றாக வசதியாக இருக்கிறேன். வீடு கார் எல்லாம் வைத்திருக்கிறேன். இசை நிகழ்ச்சிகளின் மூலம் நன்றாகப் பணம் ஈட்டுகிறேன். ஆனால் தனிமையில் தான் வாழ்கிறேன்" என்றாள் சாரதா.

"உள்ளே வாருங்கள், புகழ் பெற்றவர்களை வாசலில் நிற்க வைத்துப் பேசுவதே குற்றம்" என்று கூறி மரியாதையுடன் அவளை உள்ளே அழைத்துச் சென்றான். நாச்சியார் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். சில நேரங்களில் நினைவிழந்தவளைப் போல் புரண்டு புரண்டு படுத்தாள்.

"டாக்டர் கோகிலாதான் என்னை உங்களிடம் அனுப்பி ஞர்கள். மற்றவற்றையும் டாக்டர் விவரமாகச் சொல்லியிருக் கிறார். என்னுடைய வாத்தியத்தில் இளகாத மனம் இல்லை; மயங்காத பெண் இல்லை; இதுவரை நான் தோற்றதும் இல்லை. உங்கள் மனைவிக்கு நினைவைத் தரவேண்டியது என் பொறுப்பு." என்று அடுக்கிக் கொண்டே போனாள் சாரதா தேவி.

"எப்படியாவது நீங்கள் இருவரும் அவளது வாழ்க்கையைத் திருப்பித் தரவேண்டும். அதற்காக எவ்வளவு தொகை வேண்டு மானாலும் செலவு செய்ய நான் தயாராக இருக்கிறேன்." என்றான் மயில்வாகனன்.

"நிச்சயமாக வெற்றி பெறுவோம், கவலைப்படவேண்டாம். நான் காலை மாலை இரண்டு முறை வருவேன். வேளைக்கு ஒரு மணி நேரம் இருப்பேன். எப்படியாவது ஒரு நல்ல வீடு வாடகைக்கு அமர்த்தி விடுவது நல்லது. அதுதான் நமக்கு வசதி."

"வாடகை வீடு எதற்கு? சொந்த வீடே வாங்கி விடுகிறேன், அதுதான் நமக்கு ரொம்பவும் சௌகரியமாக இருக்கும்."

சாரதாதேவி விடைபெற்றுக் கொண்டாள். அவளை வாசல் வரை வந்து அனுப்பி விட்டு மயில்வாகனன் அறைக்குள் நுழைந்தான். நாச்சியாரின் கடைக்கண்கள் நனைந்திருந்தன.

"நாச்சியார் கண்ணு!"

அவளிடமிருந்து பதில் இல்லை.

உடனே டாக்டருக்குப் போன் செய்து கேட்டான்.

அதற்கு டாக்டர், "கண்கள் பூக்கள் மாதிரி, பனியிலும் நனைவதுண்டு; மழையிலும் நனைவதுண்டு; இதற்கெல்லாம் குழப்பிக் கொள்ளலாமா?" என்று கூறிவிட்டார்.

## 2

சாரதாதேவி காலையிலும் மாலையிலும் வந்து மெல்லிசைகள் வாசிக்கத் தொடங்கினாள். அந்த இசையை மயில்வாகனனும் அருகிலிருந்தே தினந்தோறும் கேட்டுக் கொண்டிருந்தான். முதலில் மருந்துகளுக்குப் பணியாத நோய் வெறும் நாதத்திற்கா பணியப் போகிறது என்று கூட மயில்வாகனனுக்கு நினைக்கத் தோன்றியது. ஆனால் தினசரி ராகங்களைக் கேட்டுத் தீர வேண்டிய மயில் வாகனனையே, இசைப்பற்று இல்லாத மயில்வாகனனையே எப்போது சாரதாதேவி வருவாள் என்று ஏங்க வைத்து விட்டது என்றால் அணுவளவு கூடவா இந்த

இசை நாச்சியாரின் உள்ளத்தைத் தொட்டிருக்காது, என்று அவன் அவனுக்குத் தானே சமாதானம் செய்துகொண்டான்.

சாரதாதேவியின் எழிலைப்பற்றி ஏற்கெனவே கூறியிருக் கிறோம். பட்டுப்பூச்சியைப்போல உடம்பைப் பாதுகாத்தாள். இசைக் கவர்ச்சியும், அதனாலே ஏற்பட்ட முகக்களையும் அவளுக்கு மேலும் சிறப்பூட்டிக் கொண்டிருந்தன.

சங்கீத வைத்தியம் தொடர்ந்து நடந்து கொண்டு வந்தது. பகல் வேளையில் லேடி டாக்டர் வந்து வந்து போனாள். அவள் இந்த வியாதியை அறை கூவலாகவே எடுத்துக் கொண்டு இது மாதிரி நோய்களைத் தீர்த்து வைத்தே நிறையப் பொருளீட்டி யவள் அந்த டாக்டர்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு நாச்சியாரின் போக்கில் ஒரு சிறு மாறுதல் தெரிந்தது. மலர்ந்த மல்லிகையைப் போல் கண்களை விரித்தபடி இருந்த நாச்சியார் இடையிடையே முறுவல் பூத்தாள். அப்படி அவள் சிரித்து நாட்கள் பலவாகி விட்டன, ஏழு ஸ்வரங்களுக்குள் அடங்கியிருக்கும் எண்ணற்ற கீதங்கள் அவளுக்குச் சிரிப்பூட்டிக் காட்டியது. லேடி டாக்ட ருக்கு மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒரு நாள் அந்த மகிழ்ச்சியை மயில்வாகனனிடம் கூறி பெருமிதப்பட்டுக் கொண்டாள்.

ஆனால், லேடி டாக்டர் எதிர் பார்த்தபடி மயில்வாகனன் முகத்தில் குளிர்ச்சி ஏற்படவில்லை. லேடி டாக்டரின் பேச்சுக்கு அவன் சுவை கூட்டுவான் என்று லேடி டாக்டர் கோகிலா எதிர் பார்த்திருக்கலாம், அவள் அதில் வெற்றி பெறாதது போலவே உணர்ந்தாள்.

ஏன் மயில்வாகனன் அப்படி இருந்தார்? அவருக்கு நமது வைத்தியத்தில் நம்பிக்கை இல்லையோ! பைத்தியக்காரத்தன மாக இதையெல்லாம் வைத்திய முறையா என்று கருதிக் கொண்டாரோ? வைத்தியம் என்றால் மருந்து சாப்பிடுவது; அதற்காக பத்தியம் இருப்பது தான் என்று நினைத்துக் கொண் டாரா? மனைவி மேல் உயிரையே வைத்திருக்கும் அவர், மனைவி

புன்னகை புரிவதை அறிந்து பூரிப்படைய வேண்டாமா?'' இப்படி டாக்டர் கோகிலா நினைத்துக் கொண்டிருக்கும்போது, மயில்வாகனன் குறுக்கே பேசினன்.

''அடுத்த மாதம் முதல் தேதி நாங்கள் புது வீட்டுக்குக் குடிபோகிறேம்'' என்றன்.

''அப்படியா, ரொம்ப நல்லது, வாடகை எவ்வளவு?''

''வாடகையா? விலைக்கே வாங்கி விட்டேன் கண்டோன் மெண்ட் பகுதியில்'' என்றன் மயில்வாகனன்.

டாக்டர் கோகிலா இயந்திரத்தைப் போல் பதில் சொன்னுளே தவிர அவள் இதயம் வேறு எங்கோ சுழன்று கொண்டிருந்தது. இருந்தாலும் அதை அவள் வெளியில் காட்டிக்கொள்ள வில்லை.

''மிஸ்டர் மயில்வாகனன், என்னை நம்புங்கள். உங்கள் மனைவி நிச்சயமாக பழைய நிலைக்கு வந்துவிடத்தான் போகிறுள். நீங்கள் இல்லறம் நடத்தத்தான் போகிறீர்கள், உழவு மாடுகளைப் பற்றி விவசாயிக்குத் தெரிவதைவிட நோயைப்பற்றி டாக்டர்களுக்குத்தான் தெரியும்'' என்றுள் டாக்டர் கோகிலா.

கோகிலா விடை பெற்றுக் கொள்வதற்குச் சற்று முன்பு சாரதா அங்கு வந்து சேர்ந்தாள். நன்றுகத் தன்னை அலங் கரித்துக் கொண்டிருந்தாள். புதிய புடவை கட்டியிருந்தாள். டாக்டருக்கு அவள் வணக்கம் சொன்னுள்.

''என்ன சாரா, இன்று திருநாளா? மேக்கப் அபாரமாக இருக்கிறதே!''

''இல்லை டாக்டர், நான் எப்போதும் இப்படித்தான். வெளியில் போகும்போது பெண்கள் சீவிச் சிங்காரித்துத்தானே போகவேண்டும்'' என்றுள் சாரா சிரித்துக் கொண்டே. சாரா வின் பதில் லேடி டாக்டருக்குத் திருப்தி அளிக்கவில்லை. அந்தப்

பதிலில் பெருந்தன்மை இல்லாதது போல் உணர்ந்தாள் கோகிலா.

"நீங்கள் என்ன சினிமாவுக்கா போகிறீர்கள்! இசை படிக்கத்தானே வந்திருக்கிறீர்கள்" லேடி டாக்டர் விடவில்லை.

"நான் தினசரி இப்படித்தான் வருகிறேன் டாக்டர். தலை நிறைய மல்லிகை வைத்துக் கொள்வேன். எப்படியாவது திருவாளர் மயில்வாகனனை நாம் வெற்றிகொள்ள வேண்டாமா?"

சாராவின் இந்தப் பதில் டாக்டர் மனதில் முள்ளாகத் தைத்தது. சாரதா வினயமில்லாமல் பேசுகிறாளா, அல்லது இரண்டு அர்த்தப்படப் பேசுகிறாளா என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

லேடி டாக்டர் போனபிறகு சாரா பியானு வாசித்தாள். கர்நாடக இசை, கிறிஸ்துவமதப் பாடல்கள் எல்லாப் பாடல்களும் பாடினாள், மல்லாந்து படுத்திருந்த நாச்சியார் தலையணையை அணைத்தபடி ஒருக்கணித்துப் படுத்தாள். இசை அவளை உசுப்பிவிட்டிருந்தாலும் முகத்தில் சுழிப்பை உண்டாக்கியிருப்பதுபோல் தெரிந்தது. சாரதா அடுத்த பாட்டுக்குப் போனாள். பியானு வாத்தியத்தைக் கைவந்த கலையாக வைத்திருக்கும் சாரா, கல்யாணி ராகத்திற்கு ஜோடனைகள் தொடுத்துக் கொண்டிருந்தாள். மாலை நேரத்தில் மல்லிகையை விரும்பாத பெண்ணும், கல்யாணி ராகத்தை விரும்பாத உள்ளமும் இருக்க முடியாது.

ஆனால் நாச்சியார்?

ஒருக்கணித்துப் படுத்திருந்தவள் மீண்டும் மல்லாந்து படுத்துக்கொண்டு முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள். சாரா இசையை நிறுத்தவில்லை. தொடர்ந்து வாசித்தாள். இசையின் நாதம் நன்றாகக் களை கட்டியிருந்தது அந்தக் கட்டத்தில் எதிர்பாராதது ஒன்று நடந்தது. நாச்சியார், கை

ஜாடை மூலம் இசையை நிறுத்தச் சொல்லிவிட்டாள். சாரா திகைத்துப் போனாள். பாத்ரூமுக்குள் இருந்த மயில்வாகனன் வெளியில் கண்ணாடிப் பாத்திரம் உடைந்து நொருங்கி விட்டதைப் போல நினைத்து வேகமாக ஓடி வந்தான்.

''ஏன் பாட்டை நிறுத்தினீர்கள்?'' என்று ஆவலோடு கேட்டான்.மயில்வாகனன்.

''நான் வெற்றி பெற்றுவிட்டேன். என் இசை நாச்சியாருக்கு நினைவை ஊட்டிவிட்டது'' என்றாள் சாரா.

''புரியும்படி சொல்லுங்கள். உச்சக் கட்டத்தில் யாராவது பாட்டை நிறுத்துவார்களா? குழந்தை தாய்ப்பால் குடித்துக கொண்டிருக்கும் போது, அந்தக் குழந்தைக்கு உரிமைப் பட்ட தகப்பன் கூட குழந்தையை வெடுக்கென்று பிரிக்க மாட்டான். நீங்கள் இப்படி நிறுத்தி விட்டீர்களே'' என்றான் மயில்வாகனன்.

''மயில்வாகனன் சார், என்னிடத்தில் எந்தக் குற்றமும் இல்லை. எல்லாம் உங்கள் மனைவிதான் காரணம்'' வம்புக்கு விதை தூவினாள் சாரதா.

''பாட்டை நிறுத்தியதற்கு அவளா காரணம்! அவள் எப்படிக் காரணம் ஆவாள்?'' மயில்வாகனன் திரும்பக் கேட்டான்.

''ஆம்; நாச்சியார் தான் போதும் பாட்டு என்றாள்; நான் நிறுத்தி விட்டேன். என் இசையை யாரும் விரும்பா விட்டால் நான் வாசிப்பது இல்லை.''

''என்ன சாரா, இது சரியான பதிலா? டாக்டரைப் பார்த்துக் குழந்தை பயந்துவிட்டால், மருந்து கொடுக்காமலா போய்விடுகிறோம்''?

''பாட்டை நிறுத்து என்று கையினால் ஜாடை காண்பிக்கும் போது, நான் ஏன் வாசிக்க வேண்டும்?''

"நாச்சியாரம்மா, இதெல்லாம் முறைதானு? இப்போது தான் உனக்கு நினைவு வருகிறது. அதற்குள்ளாக இவ்வளவு இடையூறு?... .. சாரா, அவளுக்காக என்னை மன்னித்து விடுங் கள். இசையை விட்ட இடத்திலிருந்து வாசியுங்கள். நாச்சியார் கோபிக்க மாட்டாள்" என்ருன் மயில்வாகனன்.

"உடைந்த பொம்மையை உடனே என்னுல் ஒட்ட வைக்க முடியாது. இதே ராகத்தை நாளைக்கு வாசிக்கிறேன்" என்று கூறிவிட்டு அவள் புறப்பட்டாள். வழக்கம் போல் மயில் வாகனன் அவளை வாசல் வரை சென்று அனுப்பி வைத்து விட்டு வந்தான். அப்போது 'நாளைக்கு நாங்கள் புது வீட்டுக்குப் போகிருேம்' என்பதையும் நினைவு படுத்திவிட்டு வந்தான்.

ஃ ஃ ஃ ஃ

நாச்சியாருக்கு இப்போது சித்தப் பிரமை சிறிது தணிந் திருந்தது. கணகளை இமைத்தல், காது கொடுத்துக் கூர்ந்து கவனித்தல் போன்ற சாதாரண நிலைக்கு அவள் திரும்பிக் கொண்டிருப்பது தெரிந்தது. லேடி டாக்டரின் மருந்தும் மருத் துவ முறையும் தான் அவளுக்குச் சுய நினைவைத் தருவதற்குத் துணை புரிகின்றன என்பதை அவள் உணராமல் இல்லை. வெகு வாக உணர்ந்தாள். ஆனல் அவள் மனத்தில் 'நான் ஏன் மீண்டும் உயிர் பெற வேண்டும், என்ற தேம்பல் அரும்புவிடத் தொடங்கியிருந்தது. பழைய நினைவுகள் அவளை வாட்டி வதைத்தன. தனது வாழ்க்கைப் பாதை, வித்தைக்காரன் காட் டும் வேடிக்கை விளையாட்டுக்களாகப் போய்விட்டதே என்ற ஏக்கம் அவளைச் சுருள வைத்தன.

எப்போதும் இல்லாமல், நோய்க்குப் பிறகு ஏன் நாச்சி யாருக்கு இந்த மனக்கலக்கம் ஏற்பட்டது? புருஷனைத் தெய்வ மாக மதிப்பவள்; கள்ளையும் சாராயத்தையும் கலந்து குடிப்ப வனுலும் அவன் கணவனுகிவிட்டால், அவன்தான் கடவுள் என்று மதிக்கும் தமிழ் மரபை மதிப்பவள், ஏன் திடீரென்று விரக்தியடைந்தாள்? வெட்கம் நிறைந்த அவளுக்கு அடக்கம்

நிறைந்த அவளுக்கு, எந்த இசை அ வ ளை ச் சுய நினைவிற்கு இழுத்து வந்ததோ, அதே இசை அ வ ள் வாழ்க்கையை முறிக்கும் ஒப்பாரியாகவும் மாறும் என்று எதிர் பார்க்கவில்லை. சாரா மகத்தான வெற்றியை ஈட்டி விட்டாள். அ வ ள் அடைந்தது இரட்டை வெற்றி. நி னை வை நாச்சியாருக்குக் கொடுத்தாள்; அவள் நெஞ்சில் இருந்த மயில் வாவனனை அபகரித்துக் கொண்டாள். ஆ ம்! மயில்வாகனனுக்கும் சாராவிற்கும் எப்படியோ ஒரு பிணைப்பு ஏற்பட்டு விட்டது. அதைக்கனவுபோல் அறை குறையாகத் தெரிந்து கொண்டிருந்த நாச்சியார் ஒரு நாள் கண்ணுரக் கண்டு விட்டாள். நாச்சியார் நினைவு பெறத் தொடங்கியதுமே கண்ட கா ட் சி அதுதான். மயில் வாகனன் தோளில் சாரா சாய்ந்திருந்தாள். தூக்கம் கலைவது போல் புரண்டு படுத்த நாச்சியாருக்கு இது தெரிந்துவிட்டது. முகத்தைச் சுழித்துக் கொண்டாள். ஆனுல் அவர்கள் நாச்சியார் ஸ்வரணை இல்லாமல் புரளுகிருள் என்று நினைத்து விட்டார்கள் போலும்! ஆனுல் நாச்சியாரோ நியாயமாகச் சிந்தித்தாள். வீடு காலியாக இருந்தால் முதலில் குப்பை, கூளங்கள் நிறையும் பின்பு விஷப்பூச்சிகள் குடியேறும்; இறுதியாக நல்ல பாம்பே குடிவந்துவிடும். ஒரு வீட்டுக்கே இந்த நிலை என்ருல் ஒரு செல்வந்தரின் உள்ளம் வெறிச் சோடிக் கிடந்தால் எந்தப் பெண் தான் சும்மா இருப்பாள். — இப்படி நினைத்தாள் நாச்சியார். அவள் மனம் கலங்கியிருந்தாலும் அவள் உடலில் நடுக்கம் தோன்றியிருந்தாலும் உள்ளூர அவள் மனத்தில் ஒரு வைரம் பாய்ந்திருந்தது. "அவர் யாருக்கு வேண்டுமானுலும் கணவராக இருக்கட்டும்; ஆனுல் நான் அ வ ரு டை ய மனைவிதான். ஏனென்ருல் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு பெண்ணின் ஜீவனும் அவர்களுடைய கணவன்மார்களிடம்தான் இருக்கிறது" என்ற மந்திரத்தை அவளது ஊமை நெஞ்சு தியானம் செய்து கொண்டே இருந்தது.

"அத்தான்!"

மயில்வாகனன் எதிர் பார்க்கவே இல்லை. வாய்க்குழப்பத்தோடு அழைத்தாள் நாச்சியார்.

'இதோ வந்திட்டேன்' என்று அலறிக் கொண்டே அவள் அருகில் ஓடினான் மயில்வாகனன்.

"எனக்கு இப்போது கொஞ்சம் நினைவு திரும்பியிருக்கிறது. பேசக் கூட நாக்கு இணங்குகிறது" என்று கண்ணீர் சிந்தக் கூறிக் கொண்டே அவனுடைய நுடம்பாய்ந்த க ர த் தை த் பிடித்துப் பார்த்தாள். அதில் இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது.

"அத்தான்!"

"சும்மா, சொல்லு நாச்சியார். உனக்காக எதுவும் செய்யத் தயாராகி விட்டேன்! புது வீடு, புதிய கார் எல்லாம் வாங்கி விட்டேன்." என்றான் மயில்வாகனன்.

"அதுமட்டும் தானா?" என்று ஒரு கேள்வியைப்போட்டாள் நாச்சியார். பெண்கள் ஜாடை பேசுவதில் ராஜதந்திரிகளை விட அரசியல் வாதிகளை விடச் சிறந்தவர்களல்லவா!

மயில்வாகனன் திகைத்துப் போனான். நாச்சியார் இப்படிக் கேட்டது வினயமில்லாமல் கேட்டது தானா அல்லது எல்லாம் அவளுக்குத் தெரிந்து விட்டதா? என்ற மனக்குழப்பம் அவனைக் குன்ற வைத்தது.

"அத்தான்! நான் பிழைத்தாலும் உங்களுக்கு மனைவியாக இருக்க அருகதையில்லாமல் போய் விட்டேன். என்னை விருந்து வேடிக்கைகளுக்கு உங்களால் அழைத்துப் போக முடியாதே. அதற்காகவாவது நீங்கள் ஒரு ஏற்பாடு செய்து கொள்வது நல்லது என்று நான் மனதார நம்புகிறேன். எந்தப் பெண்ணும் இப்படி ஒரு முடிவுக்கு வரமாட்டாள்.

"நான் உங்களுக்காக எவ்வளவோ துயரங்களை அனுப வித்து விட்டேன். எதை எதையோ தியாகம் செய்துவிட்டேன். இப்போது உங்களுக்காக வெளி உலகில் உங்களுக்கு மதிப்புக் குறைந்து விடக் கூடாது என்பதற்காக என் வாழ்க்கையையே

தியாகம் செய்யத் துணிந்து விட்டேன். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் என்றும் போல் வெளியூர்கள் போய் வரவேண்டும் என்பதே என் விருப்பம்'' என்று நாச்சியார் குழறியபடி பேசிக்கொண்டே போனுள்.

மயில்வாகனன் இடைமறித்துப் பேசினுன்.

"நாச்சியார், நீ சொல்ல வந்தது என்ன என்பதை மட்டும் சொல்லு. அதிகம் பேசி, குணமாகி வரும் உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே!'' என்ருன்.

"சுருக்கமாகச் சொல்லத்தான் பேசுகிறேன். எதற்கும் காரணம் வேண்டுமல்லவா. அந்தக் காரணத்தைத்தான் இது வரை சொன்னேன். என் பொருட்டு, என் மனச்சாந்திக்காக நீங்கள் இன்னொரு திருமணம் செய்து கொள்ள உங்களை பிரார்த்திக்கிறேன். அது என் வாழ்நாளிலேயே என் கண் முன்னுடியே நடந்து விட வேண்டுமென்று கெஞ்சுகிறேன்'' என்று கரைபுரளும் காவேரி போல் கண்ணீரை வடித்துக் கொண்டே சொன்னுள்.

"நாச்சியார்!''

"எல்லாம் உணர்ந்துதான் சொல்கிறேன், அத்தான் .. இனி நான் உங்களுக்கு அருகதையுள்ள மனைவியாக இருக்கவே முடியாது.''

"நாச்சியார் உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? யாராவது வரப்போகிருர்கள்.''

"நானும் அதற்காகத்தான் கதையை முடித்துவிடப் பார்க்கிறேன். விரைவில் நீங்கள் என் ஆசையை நிறைவேற்றி வைக்க வேண்டும். உலகில் எந்த மனைவியும் இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கவே முடியாது.''

# 3

"நீ இதை மனச் சுத்தத்தோடு சொல்லவில்லை. உன் மனத்தில் ஏதோ கல்மிசம் ஏற்பட்டு விட்டது. என்னைப் புண் படுத்தவே நீ இப்படிப் பேசுகிறாய்" என்னதான் மயில்வாகனன் பதில் பேசினாலும், அவன் முகத்தில் ஒளிந்து கொண்டிருந்த கள்ளத்தனத்தை அவனால் மறைக்க முடியவில்லை.

"நான் மனத்தில் துளியும் வேற்றுமையை வளர்த்துக் கொள்ளவில்லை. என்னால் மனைவியாக இருக்க முடியாது என்ற கட்டத்திற்கு வந்த பிறகு தானே, நான் இந்தப் பேச்சுக்கு வந்திருக்கிறேன். பெரிய குடும்பங்களில் பிரச்சினைகள் தோன்றி னால், அதைப் பெரிது படுத்த பல பேர் வாசலில் காத்திருப் பார்கள். அதனால்தான் கௌரவமாக நாமே இந்த ஏற்பாட்டை செய்துகொள்வோம் என்கிறேன். இந்த ஏற்பாட்டினால் எனக்கு உங்கள் மீதுள்ள மரியாதை குறையும் என்று கருதாதீர்கள். செடியின் அனுமதியின்றி பறிக்கும் மலர்கள்கூட தன்மனத்தைப் பரப்பத் தவறுவதில்லையே! தமிழ்ப் பெண்களும் அந்தப் பூக்கள் மாதிரித்தான்" என்றாள் நாச்சியார்.

மறுநாள் காலை வீட்டு வாசலில் கார் ஹாரன் சத்தம் கேட்டது.

"நல்ல நேரத்தில் சாராவும் வந்துவிட்டாள். இன்றைக்கே பிரச்சினையை முடித்துவிடலாம்" என்று மெதுவாகச் சொன்னாள் நாச்சியார்.

அதற்குள் தேவதை போல் அலங்காரம் செய்து கொண் டிருந்த சாரா மேலே மாடிக்கு வந்துவிட்டாள்.

"என்னம்மா நாச்சியார், கண் கலங்கியிருக்கிறாய்?" சாரா கேட்டாள்.

''ஆனந்தக் கண்ணீர், டீச்சர்! கண்ணீர் என்பது துன்பத்தின் அறிகுறி மட்டும் அல்ல: பலமாகச் சிரித்தாலும் கண்ணீர் வருவதுண்டு.''

நாச்சியாரின் பேச்சு சாராவை திகிலடைய வைத்தது.

''நாச்சியார் பூரண குணமடைந்துவிட்டாள்; இல்லையா மயில்வாகனன்'' என்று உணர்ச்சி பொங்கக் கேட்டாள், சாரா.

''நான் அப்படி நினைக்கவில்லை. சாரா மனக்குழப்பம் அடைந்திருக்கிறாள்.''

''இல்லை, மிஸ்டர் மயில்வாகனன், நாச்சியார் நிதானமாகத்தான் பேசுகிறாள். அவளிடம் துளியும் மனக்குழப்பம் இருப்பதாகத் தெரியவில்லையே! மனக்குழப்பம் உள்ளவர்களுக்கு இவ்வளவு களையாக முகம் இருக்காது என்று டாக்டர்கள் அடிக்கடி சொல்லுவார்கள்.'' பரபரக்கப் பேசினாள் சாரா.

''இல்லை சாரா, நீ, முன்னையும் பின்னையும் தெரியாமல் பேசுகிறாய்'' —மயில்வாகனன் குறுக்கே பேசினான்.

''டீச்சர் சொல்லுவதுதான் சரியானது. ஒரு பெண்ணை மற்றொரு பெண்தான் புரிந்துகொள்ள முடியும். எனக்கு எந்த மனக்குழப்பமும் இல்லை டீச்சர். நான் இனிமேல் இல்லற வாழ்க்கைக்கு உகந்தவளாக இருக்க முடியாது; என் கணவரோ பெரிய இடத்துப்பிள்ளை. பல விழாக்களுக்குப் போக வேண்டியவர். அவர் அப்படிப்பட்ட இடங்களுக்கு எல்லாம் மனைவி இல்லாமல் போவது எனக்கு அவமானமாகப்படும் என்பதற்காக நான் ஒரு யோசனை சொன்னேன், டீச்சர்'' என்று ஆரம்பித்தாள் நாச்சியார்.

''நாச்சியார் சொல்வது சரியாக இருந்தால், நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதானே! உங்கள் திருப்தியே நாச்சியாருக்குச் சிறந்த மருந்தாக அமையலாம் அல்லவா'' சாரா திரும்பப் பேசினாள்.

“அய்யோ இல்லை” சாரா, நாச்சியார் சொல்லும் யோசனை அதுவல்ல.

“நீ கேள்விப் பட்டால் உலகில் இப்படி எந்த மனைவியும் சொல்ல மாட்டாளே என்று தோன்றும்.”

“அவள் சொல்லக் கூச்சப்படுவாள். நீங்களே சொல்லுங்கள் நாச்சியாரின் ஆசை என்ன?” என்று துருவினாள் சாரா.

“நான் கூச்சப்பட வில்லையே, டீச்சர். என் வாயாலேயே நான் சொல்லி விடுகிறேன். அவர், என் கண் முன்னாலேயே இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ளட்டும் என்கிறேன்”.

“நாச்சியார்!” சாரா கூவினாள்.

“நாச்சியார்தான் பேசுகிறேன். தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்ட பிறகு, சாண்போனால் என்ன முழம் போனால் என்ன? நான் என் வாழ்க்கையின் தோல்வியை என் புருஷனிடமே ஒப்புக் கொள்வது ஒரு நாளும் தவறாகாது. அலெக்சாண்டரிடம் தோற்ற போரஸ் மன்னன் தன்னை மன்னனாகவே நடத்த வேண்டுமென்று கேட்டது எவ்வளவு வீரமோ, அந்த அளவு தெய்வாம்சம் - புருஷனுக்கு அவள் மனைவியே இரண்டாவது மணம் செய்து கொள்ளச் சொல்வது. சாரா, மனம் திறந்து பேசுகிறேன். எனக்கு எல்லாம் தெரியும். உங்கள் இசையும், டாக்டர் கோகிலாவின் சிகிச்சையும்தான் எனக்கு மறுபடியும் சுயநினைவைக் கொண்டு வந்தன. நீங்கள் அதில் தோல்வி அடைந்திருந்தால் எனக்கு இந்தக் கட்டமே வந்திருக்காது நான் பிழைக்கவேமாட்டேன் அல்லது சுயநினைவு பெறவேமாட்டேன் என்ற எண்ணத்தில் நீங்கள் இருவரும் வெகுதூரம் போய் விட்டீர்கள். நீங்கள் எனக்களித்த உதவிக்காகவாவது நான் இந்தத் தியாகத்தைச் செய்யக்கூடாதா?” என்று கூறியபடி மெதுவாகப் படுக்கையை விட்டெழுந்து வந்து இருவரின் கரங்களையும் ஒன்று சேர்த்து வைத்தாள் நாச்சியார்.

“நாச்சியார்!” என்று கூவினான் மயில்வாகனன்.

''இருக்கிறேன், நீங்கள் கட்டிய மாங்கல்யமும் என் கழுத்தில் தான் இருக்கிறது. நான் உங்களை விட்டுப் பிரியவே மாட்டேன் அத்தான். நீங்கள் சிரிந்தால் நான் சிரிப்பேன். நீங்கள் கலங்கினால் என் மனம் தாங்காது. இதுதான் என் கொள்கை'' என்று கூறினாள்.

சாராவும் மயில்வாகனனும் சிலைபோல் நின்றார்கள். ஒரு கணத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்து விடும் என்று அவர்கள் எதிர்பார்க்க வில்லை. சம்பவம் ஒரு மின்னலைப்போல் வெட்டி முடிந்துவிட்டது.

இப்போது டாக்டர் கோகிலா மாடிப்படியில் ஏறிவரும் அறிகுறி தென்பட்டது.

''நானே சொல்லுகிறேன்; நீங்கள் ஒன்றும் கலவரமடைய வேண்டாம்.''என்று நாச்சியாரே முந்திக் கொண்டாள். டாக்டர் வந்ததும் நாச்சியார் சுருக்கமாகச் சொல்லி முடித்து விட்டாள். ஆனால் டாக்டர் கோகிலாவிற்கு கண்மூடிக் கண் திறப்பதற்குள் ஒரு திடுக்கிடும் நாவலைப்படித்தது போல் தோன்றியது.

# 1

## சன்னதி

அன்று கோகிலா நாச்சியாரைக் கடைத் தெருவிற்கு அழைத்துப் போயிருந்தாள். வீட்டுக்கு வெளியே நாச்சியார் புறப்படுவது அது தான் முதல் தடவை. பெங்களூரில் எந்தப் பொருளும் வாங்கக் கூடிய மெர்க்கெண்ட்டயில் வீதிக்கு இருவரும் போனார்கள்.

கோகிலாவின் உள்ளத்தில் ஒரு வெற்றி மிதப்பு இருந்தது. பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணுக்குரிய சுய நினைவைக் கொடுத்து விட்ட வெற்றி மிதப்புத்தான் அது.

மெர்க்கண்ட்டயில் வீதியில் ஆணும் பெண்ணும் இணைந்தே திரிந்தார்கள். அப்படிப்பட்ட தோரணைகளை நாச்சியார் விரும் பாதவளாக இருந்தாலும் புருஷன் மனைவியாகப் போகும் வாய்ப்பை இழந்து விட்டோமே என்ற ஏக்கம் அவள் உள்ளத் தில் பூக்காமல் இல்லை அவள் அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டாள். இந்தக் காட்சியை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்ட டாக்டர் கோகிலா நாச்சியாரோடு பேச்சுக் கொடுத் தாள்.

"ஏன் நாச்சியார் திடீரென்று இந்த முடிவுக்கு வந்தாய்?"

"தக்க நேரத்தில் தான் நான் முடிவு செய்தேன் டாக்டர் என் புருஷனைப் பற்றி எனக்குத் தெரியாதா?"

"உனக்குத் தெரியலாம். எனக்குத் தெரியவேண்டாமா? நான் தான் உனக்கு வினையாக வந்து விட்டேனோ என்று என் மனம் உறுத்துகிறதே".

"ஐயோ, நீங்கள் என்ன செய்வீர்கள். நீங்கள் இல்லாவிட் டால் நான் புத்துயிர் பெற்றிருக்க மாட்டேனே!"

"அதைச் சொல்லவில்லை நாச்சியார்; நான் தானே சாரா தேவியை உங்களுக்கு சிகிச்சைக்காக அமர்த்தி விட்டேன். அதைத் தான் சொல்லுகிறேன" என்றாள் டாக்டர்.

"இல்லை டாக்டர், நானாக இந்த முடிவுக்கு வந்து பெருந் தன்மையோடு அறிவிக்காமலிருந்தாலும், அவர்களே இந்த முடிவுக்குத் தான் வந்திருப்பார்கள். அதனால் மருத்துவச் சிகிச் சைகள் பாதியிலேயே நின்று போயிருந்தாலும் போயிருக்க லாம்" என்றாள் நாச்சியார்.

"மகாலெட்சுமி மாதிரி இருக்கிற உன்னைவிட சாரா எந்த வகையில் உயர்ந்து விட்டாளாம்?"

"நான் இதற்கு எப்படி டாக்டர் பதில் சொல்லுவது அழகின் ருசி, பார்ப்பவர்களைப் பொறுத்தது என்கிறார்களே,

அந்தத் தத்துவத்தில் அவர் சிக்கிக்கொண்டார் போலிருக்கிறது. ஏன் டாக்டர், நாம் மல்லிகை சூடுகிறோம். நாம் வணங்கும் தெய்வத்திற்கு அரளிப்பூ மாலைதானே சூடுகிறார்கள். அரளிப் பூவில் என்ன மணம் இருக்கிறது! தெய்வங்களே அரளிப்பூக்களை விரும்புவது மாதிரி, அவருக்கு அவள் பிடித்தமானவளாகி விட்டாள். அதற்கு நான் என்ன செய்வது டாக்டர்.'' என்றாள் நாச்சியார்.

"நீ சொல்லுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. கசந்து கண்களைப் பிடுங்கும் பாகற்காயைச் சிலர் முறுக்குத் தின்பதுபோல் தின்கிறார்கள். அவர்களுக்கு அல்வா, ஜிலேபி ஒத்துக் கொள்வதில்லை. உடலுக்கே சில குணங்கள் இருக்கும் போது, உடலை இயக்கும் மனத்திற்கும் சில குணங்கள் இல்லாமலா போய்விடும்!'' டாக்டர் விரித்துரைத்தாள்.

ஃ ஃ ஃ ஃ

இருவரும் கடை வீதியிலிருந்து வீட்டுக்குத் திரும்பினார்கள், கண்டோன்மெண்ட் போகிற வழியில்தான் டாக்டர் கோகிலாவின் வீடு இருந்தது. கோகிலா முதன் முறையாக அன்று தான் நாச்சியாரை வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். வீடு பெரிய வீடு. பங்களாத் தோற்றமுடையது.

"ஏன் நாச்சியார், உன்னைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கிறேனே, கொஞ்சமாவது நீ என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்ப வில்லையே''?

"விருப்பமில்லாமலா இருக்கும்! ஒரு பெண்ணுக்கு. இன்னொரு பெண்ணைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டு மென்ற ஆசையை விட நகைகள் மீது கூட அவளுக்கு ஆசை அதிகம் இராது. உங்கள் கழுத்தைப் பார்த்தேன். மாங்கல் யத்தைக் காணவில்லை. அதனால் உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்று தெரிந்து கொண்டேன். அதனால் அடுத்த கட்ட விசாரணைக்கு நான் போகவில்லை. மேலும் ஒரு பெண், அவள் சிநேகிதியைப் பற்றி முழுதும் தெரிந்து கொள்வதில்

லாபமும் உண்டு. நஷ்டமும் உண்டு. அந்த லாப நஷ்டம் பெண்களின் குணங்களேப் பொருத்துத்தான் அமைகிறது. என்னேப் பற்றி உங்களுக்கு முழுதும் தெரியாவிட்டாலும் ஓரளவாவது தெரியும். அதனுல் என்னேக் குறித்து உங்கள் மனத்தில் ஒரு அளவுகோல் உருவாகியிருக்கும். ஆனுல் எனக்கு உங்களேப்பற்றி இன்னும் தெரியாததால் அப்படிப்பட்ட நினேப்பே தோன்றவில்லே. அதனுல் மதிப்புக் குன்ருது''.

டாக்டர் கோகிலா சிரித்துக் கொண்டே வீட்டைச் சுற்றிக் காண்பித்தாள்.

"இவ்வளவு பெரிய வீட்டில் தன்னந்தனியாக வாழ்கிறீர்களே, பயமாக இல்லேயா?'' நாச்சியார் கேட்டாள்.

"பயமில்லாமலா இருக்கும்; என்ன செய்வது கூர்க்காவை நம்பித்தான் இருக்கிறேன்'' என்ருள் கோகிலா.

"எத்தனே நாளேக்கு வாசலில் நிற்கும் கூர்க்காவையே நம்பிக் கொண்டிருக்கப் போகிறீர்கள். மனத்துணேக்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்கிறேன் டாக்டர்''. நாச்சியார் உரிமையோடு பேசினுள்.

"உன் கேள்வி எனக்கும் புரிகிறது. என் பெற்ருேர்களுக்கும் என் விஷயம் பெரிய மன உளேச்சலாகத்தானிருக்கிறது. எனக்கு ஒரு அண்ணன் இருந்தார். அவர்மீது என் அம்மாவும் அப்பாவும் உயிரையே வைத்திருந்தார்கள். நன்ருகப் படிக்க வைத்தார்கள். ஆனுல் அவர் எங்களேயெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டார்''.

"என்ன நடந்தது டாக்டர்!''

"உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லே. ஆனுல் அவர் பாதிரியாகி விட்டார்'' என்ருள்.

"துறவின் மீது உங்கள் அண்ணனுக்கு அவ்வளவு பற்று ஏன்?''

"துறவு கொள்கிறவர்களெல்லாம் அதன் மீதுள்ள பற்றினலா அப்படி மாறுகிருர்கள்; ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணம்! என் அண்ணனுக்கு என்ன காரணமோ''? என்ருள் டாக்டர்.

"இப்போது அவர் எங்கிருக்கிருர்?"

"அவர் போதராகி இரண்டாண்டுகளாகி விட்டன. மிஷனில் அவருக்கு நல்ல பெயர். இப்போது அவர் சென்னையில் சாந்தோம் கோயிலில் இருக்கிருர்" என்ருள் டாக்டர்.

"ஏன் நாச்சியார், நீ சென்னைக்குப் போயிருக்கிருயா?"

"நான் பிறந்தது, வளர்ந்ததே அங்குதானே!" என்ருள் நாச்சியார்.

இப்படி பேசிக்கொண்டிருக்கும் போதே டாக்டர் கோகிலா ஒரு போட்டோ ஆல்பத்தைக் கொண்டு வந்து மேஜையில் வைத்தாள்.

"இதில் எங்கள் குடும்பமே இருக்கிறது. புரட்டிப்பார்த்துக் கொள்!" என்ருள் டாக்டர்.

நாச்சியார் முக மலர்ச்சியோடு ஒவ்வொரு தாளாகப் புரட்டினுள். டாக்டரின் வயோதிகப் பெற்ருேர்கள் புதிய மணத் தம்பதிகளைப் போல எடுத்த படம் முதல் தாளில் இருந்தது. அந்தப் படத்தைப் பார்த்ததும் இருவரும் பூரித்துப் போனுர்கள்.

"நாச்சியார் இவர்கள் இப்படியேதான் பழகுகிருர்கள். "லவ் பேர்ட்ஸ்" மாதிரி ஒன்ருகத்தான் உலாவப் போவார்கள். ஒன்ருகத்தான் படத்திற்குப்போவார்கள். வாழ்நாள் முழுவதும் 'லைப் பார்ட்னராக இருப்பது சாதாரணக் காரியமா? உயிருக்கு உயிரான நண்பர்களே இரண்டாண்டு சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்ய முடியாத காலமல்லவா இது! இந்தக் காலத்தில்

இவர்கள் இப்படி இருப்பது பல பேருக்குப் படிப்பினை நாச்சியார்'' என்று டாக்டர் கூறினார்.

“அதைத்தான் டாக்டர் நானும் சொல்ல வந்தேன். எனக்கே இது ஒரு பலமான அடிதான்.'' நாச்சியார் விம்மினாள்.

“உன் கதை வேறு. நீ நினைத்திருந்தால் இப்படியும் வாழ்ந்திருக்கலாமே! நீயாகத்தானே இந்த முடிவுக்கு வந்தாய்?'' டாக்டர் பதில் கேள்வி போட்டாள்.

“இல்லை டாக்டர், எனக்கும் அவருக்கும் உள்ள பாலம் உடைந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நானாக ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தேன். அவர் எப்படியும் என்னை உணர்வார். பெண்மையும், கற்பும் எல்லாப் பெண்களிடமும் இல்லை டாக்டர். சில பூக்கள் மணமில்லாமல் இருப்பதில்லையா அதைப் போல!''

நாச்சியார் ஆல்பத்தின் அடுத்த பக்கத்தைப் புரட்டினாள்.

“இதுதான் அண்ணன் டேவிட் கருணையானந்தம்'' என்றாள்.

நாச்சியாரின் கண்கள் திறந்தவை திறந்தவையாக இருந்தன. அப்படியே மயங்கி நாற்காலியில் சாய்ந்தாள்.

“என்ன நாச்சியார் மறுபடியும் வந்துவிட்டதா?'' என்று பதறினாள் கோகிலா.

“இல்லை டாக்டர், லேசான பித்தக் கலக்கம்'' என்று கூறித் தப்பித்துக் கொண்டாள்

## 2

**அ**ன்று வெள்ளிக்கிழமை. “இன்று நல்ல சினிமா படம். வந்திருக்கிறது. நாச்சியாரையும் கூட்டிக் கொண்டுபோய் வந்தால் என்ன?'' என்று ஆரம்பித்தான் மயில்வாகனன்.

“போகலாம்; நாம் இரண்டு பேரும்தான் போகமுடியும்!” என்று விடுகதை போடுவது போல் பேசினுள் சாரா.

“ஏன் நாச்சியார் வரமாட்டாளா? நான் கூப்பிட்டால் கூடவா வரமாட்டாள்!” எரிச்சலோடு கேட்டான் மயில் வாகனன்.

“அது வேறு விஷயம் அத்தான். அக்காள் வீட்டில் இருந்தால்தானே நீங்கள் கூப்பிடுவீர்கள். அவர்கள்தான் எந்த நேரமும் லேடி டாக்டரோடு நகர் வலம் போய் விடுகிறுர்களே! நீங்கள் ஒரு வாரமாக ஊரில் இல்லே. இந்த ஒரு வார காலத்தில் ஒரு நாளாவது மாலே நேரத்தில் வீட்டில் இருந்தார்களா என்று கேட்டுப் பாருங்கள்” சாம்பிராணி போடத் தொடங்கி விட்டாள் சாரா.

“இருவரும் நெருங்கிப் பழகிவிட்டார்கள். அதனுல் டாக்டர் அவளே விட்டுப் பிரிய மாட்டேன் என்கிறுர்கள். சாரா, உனக்கொன்றைச் சொல்லி வைக்கிறேன். மற்ற பெண்கள் மாதிரி நாச்சியாருக்கு ஆடம்பரம், அலங்காரம் எல்லாம் அறவே பிடிக்காது. மிகவும் அடக்கமான சுபாவம் அவளுக்கு!” மயில் வாகனன் மிகுந்த பெருமிதத்தோடு சொன்னுன்.

“ஐயோ அத்தான் அதெல்லாம் அந்தக் காலம். இப்போது அக்கா வெளியில் போகும் போது நீங்கள் பார்த்ததில்லே. புடவைக்குத் தகுந்த கம்மல், கைக்கடிகாரம், ஒரு கை நிறைய வளேயல்கள்—இதெல்லாம் என்ன அடக்கமான சுபாவமா? ஒரு நடிகை கூட இப்படி அலங்கரித்துக் கொள்ள மாட்டாளே!” சாரா விடவில்லே.

“சாரா, நாச்சியாரை அப்படி யெல்லாம் சொல்லாதே! அவள், அவளேயே தியாகம் செய்து கொண்டவள். அவளுடைய தியாகத்தால், நீ தான் பலன் கண்டவள். நீயே அப்படிப் பேசலாமா?”

அதற்காக குடும்பப் பெருமையை இழந்து விடுவதா? நாலு பேர் பார்த்தால் என்ன சொல்லுவார்கள்!”

“குடும்ப கௌரவம் முக்கியம்தான். ஆனுல் நாச்சியாரினுல் நம் கௌரவம் பாதிக்குமென்று நான் நம்பவில்லை.” மயில் வாகனன் சற்று முகத்தைச் சுழித்துக் கொண்டான்.

“எதைத்தான் நான் சொல்லி நம்பப் போகிறீர்கள். ஒரு நாளாவது நீங்கள் அக்காவை கண்டித்ததுண்டா? இது போல் நான் போயிருந்தால் என்னென்ன பேசுவீர்கள்? என்ன இருந்தாலும் கூத்தாடிதானே, பாட்டுக்காரிதானே என்று பேசியிருக்க மாட்டீர்களா?” சாரா பொறிந்து தள்ளினுள். எங்கேயும் எப்போதுமே மூத்த தாரம் பேசக் கூசுவதையெல்லாம் இளைய தாரம் பேசிவிடுவது வழக்கம்தானே!

“சாரா, நீயாக எதையும் கற்பனை செய்து கொள்ளாதே! குடும்ப கௌரவத்தைப் பொருத்த வரையில் அவளாக இருந்தாலும் சரி, நீயாக இருந்தாலும் சரி, இரண்டு பேருமே எனக்கு ஒன்றுதான்! நீ உன் மனத்தில் வேற்றுமையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பதையே நான் விரும்புகிறேன். அவளைக் கண்டிக்கும் நேரம் வரும்; அப்போது நிச்சயம் கண்டிப்பேன்” என்று ஆறுதல் சொன்னுன் மயில்வாகனன்.

ஃ ஃ ஃ ஃ

சாரா கூறியவையெல்லாம் மயில்வாகனனுக்கு உறுத்தலாகத்தான் இருந்தன. அவனுடைய இரண்டு மனங்களும் அவனேடு பேசின.

“என்ன இருந்தாலும் ஒரு பெரிய இடத்துப் பெண் அடிக்கடி இன்னொருவர் வீட்டிற்குப் போவது நல்லதல்ல., பெண் மனம் எப்போதும் கடல் மாதிரி. பொங்கி எழுந்தால் ஊரே தாங்காது” என்றது ஒரு மனம்.

“தவறு; நாச்சியார் வந்தது சிகிச்சைக்குத் தானே. அவளுக்கு எங்கெங்கு நாட்டம் போகிறதோ அங்கெல்லாம் போக விடுவதும் ஒரு சிகிச்சைதான். அவளைக் கண்டித்துத்

தடுத்தால் மீண்டும் மூளையில் இரத்தம் உறைந்து கொண்டாலும் ஆச்சரியமில்லை,'' என்றது அடுத்த மனம். எப்பேர்ப்பட்ட அறிவாளியின் உள்ளத்தில் மனப்போராட்டம் ஏற்பட்டாலும் கோபம் வெல்லுமா குணம் வெல்லுமா என்று கண்டு பிடித்து விடுவது சுலபம். ஏனெனில் கோபம் வந்த பிறகுதானே அவனுக்குமனப் போராட்டமே வலுக்கிறது. இதில் செல்லப் பிள்ளையாக வளர்ந்த மயில்வாகனனின் மனப்போரிலே மட்டும் எப்படிக் குணம் வெல்லும்! என்ன இருந்தாலும் ஒரு சுமங்கலி, அடிக்கடி புருஷனுடைய அனுமதியின்றி இன்னொரு பங்களாவுக்குள் போய் வருவது நியாயமல்லதான்; அது கண்டிக்கப்பட வேண்டியதுதான், என்று யோசித்த மயில்வாகனன் நேராக கோகிலாவின் வீட்டுக்குப் புறப்பட்டான்.

மாலை மயங்கிடும் நேரம். கோகிலாவும், நாச்சியாரும் கோயிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மயில்வாகனன் வருகை வியப்பைக் கொடுத்தது.

''இன்று நல்ல அறிகுறி அத்தான், இன்று உங்களுக்காக அர்ச்சனை செய்யத்தான் புறப்பட்.டோம். புனர்பூசநட்சத்திரம் தான் நீங்கள் பிறந்தது என்று நான் சொல்லி முடிப்பதற்கும் நீங்கள் வருவதற்கும் சரியாக இருந்தது நீங்களும் எங்களோடு வந்தால் மிகவும் சிறப்பாகஇருக்கும்'' என்று உற்சாகம் பொங்க பேசினாள் நாச்சியார். எதுவும் அவன் காதுகளில் ஏறவில்லை. செடியின் வேர்கள் நன்றாக இருந்தால்தான் மலர்களே பூக்கின்றன. அது போலவே தான் மனிதனின் மனம் நிதானமாக இருந்தால்தான் காதுகள்கேட்கின்றன. கண்கள் பார்க்கின்றன மனம் கெட்டிருந்தால் மின்சாரம் இல்லாத இயந்திரம் போல் அவயங்கள் செயலற்று விடுகின்றன. மௌனமாக இருந்த மயில்வாகனனை டாக்டர் கோகிலாவின் குரல் உசுப்பியது.

''வணக்கம், மயில்வாகனன் சார் என்றும் இல்லாமல் முதல் முறையாக வந்திருக்கிறீர்கள். காபி கொண்டு வந்திருக்கிறேன். ஒரு நிமிஷம் நீங்கள் தாமதமாயிருந்தால் எங்களைச் சந்தித்திருக்க முடியாது. நான் இன்று மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கிறேன். உங்கள் இருவரையும் மீண்டும் பேசவைத்த பெருமை, பழக வைத்த அருமை எல்லாமே எனக்குத் தானே சேரும். இல்லையா?'' — டாக்டர் கோகிலா மட மட வென்று பேசிக் கொண்டே போனாள். மயில்வாகனன் மெய் மறந்த நிலையில் சிலை போல உட்கார்ந்திருந்தான்.

"மிஸ்டர் மயில்வாகனன் இதோ ஆல்பம், இதில்தான் எங்கள் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் இருக்கிறார் கள்'' என்று ஆல்பத்தை மயில்வாகனனிடம் கொடுத்தாள்.

மயில்வாகனன் வேண்டா வெறுப்பாக ஆல்பத்தைப்புரட்டினான். முதல் பக்கத்தில் டாக்டரின் பெற்றோர்களின் படம் இருந்தது. அடுத்த பக்கத்தைப் புரட்டினான். அவ்வளவுதான். அவன் தலையில் இடி விழுந்து விட்டது போல் உணர்ந்தான். அவன் பார்த்த அடுத்த படம் கருணையானந்தத்தின் படம்.

"இவர் என் அண்ணன்! டேவிட் கருணையானந்தம். இப்போது பாதிரியாக இருக்கிறார்.'' என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னாள் டாக்டர் கோகிலா.

மயில்வாகனன் நிமிர்ந்து டாக்டரைப் பார்த்தான்.

"இப்போதுதான் டாக்டர் எனக்கு எல்லாமே புரிகிறது. இதெல்லாம் உங்கள் ஏற்பாடுதானா?...... நாச்சியாரம்மா உன்னுடைய வேஷம் இன்று குலைந்து விட்டது. விட்ட குறையைப் பூர்த்தி செய்யவும்; தொட்ட குறையைத் தொடர்ந்து புரியவும்தான் இங்கே வருகிறாயா? சாரா சொன்னதுதான் சரியாகப் போய்விட்டது........''

"என்ன மிஸ்டர் மயில்வாகனன் என்னென்னமோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது என்ன நடந்து விட்டது?'' கோகிலா அதிர்ச்சியோடு கேட்டாள்.

"எது நடந்து விடும் என்று பயந்தேனோ அது நடந்து விட்டது. எது நடக்கக் கூடாது என்று வேண்டிக் கொண்டே வந்தேனோ அதுதான் டாக்டர் நடந்துவிட்டது.''

“மிஸ்டர் மயில்வாகனன் நீங்கள் நினைக்கிற மாதிரி எங்கள் குடும்பம் மோசமான குடும்பம் அல்ல. பெரிய குடும்பம். நான் உங்களுக்குச் செய்தஉதவிக்கு நீங்கள் செய்யும் கைமாறு இது?” கோகிலா கொதித்துப்போய் பேசினாள்.

“டாக்டர், இதற்குமேல் நான் உங்களிடம் எதையும் பேச விரும்பவில்லை. நீங்கள் மட்டும் என்னிடத்தில் ஆல்பத்தைக் கொடுக்காமல் இருந்திருந்தால் எதுவுமே நடந்திருக்காது” என்று சினந்து பேசினான் மயில்வாகனன்.

“என்ன மிஸ்டர் புதிதாக ஏதோ புதிர் போடுகிறீர்கள்? ஆல்பம் எங்களுடையது. அதில் என் பெற்றோர்கள், அண்ணன் இவர்கள் தானே இருக்கிறார்கள்” என்று வியப்போடு கேட்டாள் டாக்டர் கோகிலா.

“உண்மைதான். யார் தெரியுமா அந்தப் பாதிரியார்.

“அது தான் திரும்பத் திரும்பச் சொல்கிறேனே என் அண்ணன் என்று” —டாக்டர் கோகிலா உரக்கப் பேசினாள்.

“உங்களுக்கு அண்ணனாக இருக்கலாம்; இவளுக்கு ஒன்றும் தெரியாத மாதிரிப் பேசுகிறீர்களே டாக்டர். எல்லாமே உங்கள் ஏற்பாடுதான் போலிருக்கிறது”. மயில்வாகனன் எடுத்தெறிந்து பேசினான்

“மயில்வாகனன், நிதானமாகப் பேசுங்கள். உங்களுக்கும் நாச்சியாருக்கும் ஆயிரம் இருக்கலாம். அதற்கு நானா பொறுப்பு?”

“நீங்கள் பொறுப்பல்ல; இந்த ஆல்பம் பொறுப்பு. ஆனால் எதுவும் உங்களுக்குத் தெரியாமல் நடக்கிறது என்று நம்ப நான் தயாராக இல்லை. நீங்கள் போட்ட மையில் தான் அவள் ஆடுகிறாள்; மறைக்க வேண்டாம், டாக்டரம்மா!”

“வார்த்தைகளைக் கொட்டி விட்டால், பிறகு அவற்றை அள்ளிக் கொள்ள முடியாது. எதையும் யோசித்துப் பேசுங்கள்” டாக்டர் இரைந்தாள்.

“மழுப்ப வேண்டாம். இந்த ஆல்பத்திலுள்ள உங்கள் அண்ணன்தான் இவளுடைய மாஜி காதலன் என்று உங்களுக்குத் தெரியாதா? தெரியாமலா அவள் மீது உங்களுக்கு இவ்வளவு பற்றுதல் ஏற்பட்டது. எத்தனையோ பேருக்கு வைத்தியம் பார்க்கும் நீங்கள், யாரிடமாவது இவ்வளவு பிரியம் வைத்தது உண்டா?” —மயில் வாகனன் பேச்சில் கோபம் வீறிட்டு நின்றது.

“என்ன நாச்சியார், இதெல்லாம் உண்மைதானா? ஒரு வார்த்தையாவது நீ இதைப் பற்றி என்னிடம் சொன்னதுண்டா?” டாக்டர் கோகிலா நாச்சியார் பக்கம் திரும்பிக் கொண்டு கேட்டாள்.

“அதெல்லாம் பழைய கதை டாக்டர். அதைக் கெட்ட கனவாக நினைத்து பல வருஷங்களாகி விட்டன, டாக்டர். அன்று முதன் முதல் ஆல்பத்தைப் பார்த்ததும் எனக்குக் கிறுகிறுப்பு ஏற்பட்டதற்குக் காரணமும் இதுதான் டாக்டர், ஆனால் இப்போது நான் புதிய நாச்சியார். இல்லாவிட்டால் நான் ஏன் புனர்பூச நட்சத்திரத்திற்கு அர்ச்சனை செய்ய உங்களை அழைக்கிறேன்”. நாச்சியார் தேம்பிக் கொண்டே உருக்கமாகப் பேசினாள்.

இவ்வளவுக்குப் பிறகு கோகிலா, மயில்வாகனன் பக்கம் திரும்பினாள். அவன் அந்த இடத்தில் இல்லை போய்விட்டான்.

## 3

மேஜர் காசிநாத்திற்கு நெடு நாட்களுக்குப் பிறகு அன்று தான் மருமகனிடமிருந்து கடிதம் வந்தது. தன்னுடைய மகளால், மருமகனால் எந்த விதத் தொல்லையும் தனக்கு இருந்ததில்லை என்று அவர் அடிக்கடி கூறிக் கொள்வதுண்டு “பெண்கள் அபூர்வமான தெய்வப் பிறவிகள். யார் புருஷனாகக் கிடைக்கிறானோ, அவனைக் கொண்டே திருப்தியடைந்து விடுகின்றனர்.

பாரதத்தை விட, இராமாயணத்தை எல்லா இனத்தவரும் அதிகம் மதிப்பதற்கு சீதை தான் காரணம்; இன்னும் பெருமை இராமன் யாராக இருந்தாலும், இராவணன் யாராக இருந்தாலும் சீதையின் படைப்பு மட்டும் தென்னிந்தியச் சாயல் கொண்டதாக இருப்பதால் தான்''-என்று எப்போதோ ஒரு சொற்பொழிவில் கேட்டது அன்று காசிநாத்தின் நெஞ்சுக்குள் திரும்ப நுழைந்தது.

இராமாயணம் ஒரு ராஜ குடும்பத்தின் நுக்கமான சோதனைகள் நிறைந்த சரித்திரம். ஆனால் பாரதம் அப்படிப் பட்டதல்ல. பாரதத்திற்கு கதாநாயகனோ நாயகியோ இல்லை. அது அரசியல் சூழ்ச்சிகள் நிறைந்த ஆட்சிப் பிரியர்களின் கதை. இந்த இரண்டு இதிகாசங்களிலும் இராமாயணமே அதிகமாக மதிக்கப்படுகிறது என்பதற்கு ஊரெல்லாம், வீடெல்லாம் பெண்களுக்கு ஜானகி, சீதை, வைதேகி என்று பெயர்கள் சூட்டியிருப்பதே போதுமான ஆதாரங்களாகும், காசிநாத்தின் செவிகளில் எப்போதோ கேட்ட இந்த உபன்யாசங்கள் ஊரத் தொடங்கின. காசிநாத் பெருமூச்சு விட்டார். நான் என் மகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் தவறியிருந்தாலும், அவள் ஒரு பெண்ணுக்குரிய இலக்கணத்திலிருந்து தவறவில்லை. ''என்ன தான் பெண்கள் நிராயுத பாணிகளாக இருந்தாலும், அவர்கள் கற்பைக் காக்கும் போரில் ராணுவத் தளபதிகளுக்குச் சமமான பலமுள்ளவர்களாகி விடுகிறார்கள்'' என்று மனத்துக் குள்ளேயே சொல்லிக் கொண்டார் மேஜர்.

அப்போதுதான் தபால்காரன் வீட்டுக்குள் நுழைந்து ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போனான். மேஜர் மிகுந்த உற்சாகத்தோடு கடிதத்தை உடைத்தார். கடிதம் மிகவும் சுருக்கமாக இருந்தது. ஆனால், கடிதத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஈட்டி முனைகளாக இருந்தன.

அன்புள்ள மாமாவுக்கு,

வணக்கம். நான் நாச்சியாரை விவாகரத்து செய்வதென்று தீர்மானித்து விட்டேன். நன்றாக யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன்.

இப்படிக்கு
மயில்வாகனன்.

காசிநாத்திற்கு நெஞ்சம் தணலானது. போர்க்களத்து அதிர் வேட்டுகள் அவர் நெஞ்சில் வெடித்துக் குமுறின. விருப்பமில்லாமல் செய்து வைத்த திருமணம் விபத்தில் முடிந்து விட்டதோ? என்று மேஜர் புலம்பினார்.

அந்த நேரத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள். மேஜர் கதவைத் திறந்தார். ஒரு பாதிரி வாசலில் நின்றார்.

''வணக்கம்!''

''யார் நீங்கள்?''

''என் உடையைப் பார்த்தாலே தெரியவில்லையா? நான் ஒரு பாதிரியார் என் பெயர் டேவிட் கருணையானந்தம்.''

''தெரிகிறது! திருடரென்று வீட்டுக்கு வந்திருக்கிறீர்களே என்று கேட்டேன்.''

''நான் எப்போதும் பிறருக்கு உதவுகிறவன் தான். இன்று காலை நான் கோகுலே ஹாலில் நடந்த பாதிரிமார் கூட்டத்திற்குச் சென்றேன். நான் சென்ற வாடகைக் காரில் இந்தக் கைப்பை இருந்தது; அதில் இந்த வீட்டு விலாசமும் இருந்தது. அதைத் தான் தங்களிடம் கொடுத்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்றார் டேவிட் கருணையானந்தம், பிறகு தான், அவர் பையைத் தவற விட்ட செய்தியே அவருக்குத் தெரிய வந்தது.

"மிகவும் நன்றி சுவாமி. அதில் நிறையப் பணம் வைத் திருந்தேன். நல்ல வேளையாக உங்களிடம் கிடைத்தது. வேறு யாரிடமாவது கிடைத்திருந்தால் எதுவும் எனக்குக் கிடைத் திருக்காது." என்ருர் மேஜர் காசிநாத்.

"நான் விடை பெறட்டுமா?" கனிவாகக் கேட்டார் டேவிட்.

"நல்லதும் கெட்டதும் மாறி மாறித் தான் வருகின்றன. சற்று முன்பு எனக்கு ஒரு கடிதம் வந்தது. அது என் மனதைத் துளைத்துக் கொண்டிருந்தது. அந்த நேரம் பார்த்து நீங்கள் வந்து என் பையைக் கொடுத்தீர்கள். எனக்குக் கொஞ்சம் இதமாக இருக்கிறது. காபி அருந்தி விட்டுப் போகலாமே!"

"போகலாம், ஆனுல் இந்த வீட்டில் நீங்கள் தானே எல்லா வேலைகளையுமே பார்க்க வேண்டும் போலிருக்கிறது. தங்களைத் தவிர வேறு யாரையுமே காணவில்லையே!"— பாதிரி துளாவினுர்.

"உண்மைதான். இந்த மாளிகையில் நான் தான் நடமாடிக் கொண்டிருக்கிறேன். ஒரு பொருளை இடம் மாற்றுவதென்ருல் கூட நான் தான் எழுந்து போய்ச் செய்ய வேண்டும்." தளர்ந்த குரலில் பதில் சொன்னுர்.

"உங்களுக்கு மனைவி மக்கள் இல்லையா? இதோ பட்டம் பெற்ற ஒரு பெண்மணியின் படம் இருக்கிறதே, அது யார்?", என்று ஏறிட்டுப் பார்த்து திகிலடைந்தார். அதுவா, அது என் மகள் நாச்சியார். அவள்தான் இன்றைக்கு என்னைப் பூ நாக மாக வந்து தீண்டிக் கொண்டிருக்கிருள். நீங்கள் எல்லாவற் றையும் துறந்து இளமையிலேயே சாமியாராகி விட்டீர்கள். நான் அப்படி இருக்க முடியுமா? ஒரு மனிதனுடைய இதயத்தில் கவலை மட்டும் குடி கொண்டு விட்டால், அது பெரிய ஆல மரத்தில் பொந்து விழுந்த மாதிரித்தானே!" என்ருர் மேஜர்.

"கவலைகள் எல்லோருக்கும் உண்டு. சிலருக்கு, தேவைகளே கவலைகளாகலாம்; இன்னும் சிலருக்கு தோல்விகளே கவலைகளாகலாம். கவலையில்லாத மனிதன் ஏது?"

"நியாயம் தான். ஆனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் கவலை மாதிரி உங்களுக்கு ஏற்பட வழி இல்லை. இதோ பாருங்கள் என் மருமகன் எழுதியிருக்கிறார் கடிதம். என் தலை சுற்றுகிறது சாமி."

டேவிட் கடிதத்தை எடுத்துப் படிக்கிறார்.

"இந்தக் கடிதத்தில் காரணமே சொல்லப்படவில்லையே! காரணமில்லாமல் விவாகரத்து எப்படிச் செய்வது?" திகைப்புடன் கேட்டார் பாதிரி.

"நான் வெள்ளைக்காரன் காலத்திலிருந்து வேலை பார்த்தவன். அவன் ஒரு நாயைச் சுடுவதென்றாலும் அதற்குக் காரணம் சொல்லுவான். இப்போது அப்படியா நடக்கிறது" மேஜர் கண்கலங்கச் சொன்னார்.

"மேஜர், நீங்கள் மனத்தை இழந்து விடக் கூடாது. முழு விவரம் அறிந்து எனக்கு தகவல் கொடுங்கள். மற்றவர்களுக்கு உழைக்கவே கர்த்தர் எங்களைப் படைத்திருக்கிறார்." என்று சொல்லி விடைப் பெற்றுச் சென்றார்.

## மூலஸ்தானம்

டேவிட்டின் உள்ளத்தில் பழைய எண்ணங்கள் அலை மோதின.

"எனக்குத் துரோகம் செய்ததற்கான பலனை அவள் அனுபவிக்கிறாள்."

"இல்லை; அவள் உத்தமி; அவள் மீது எந்தத் தவறும் இருந்திருக்காது. மயில்வாகனன் பணத்திமிரில் ஏதாவது தொல்லை கொடுத்திருப்பான்."

பாதிரியின் உள்ளத்தில் இந்த மனப் போராட்டம் முடிவில்லாமலே நிகழ்ந்து கொண்டிருந்தது.

இடையிடையே பெரு மூச்சு விட்டுக் கொண்டான்.

டேவிட் கருணையானந்தத்திற்குக் குழப்பம் தீரவில்லை. மீண்டும் பழைய நினைவுகள் அவனைப் பின்னுக்கிழுத்துச் சென்றன. ஒரு பேராசிரியனாக, மனைவி மக்களோடு வாழ வேண்டிய நான், இன்று கடவுளின் சன்னிதானமே வாழ்வின் புகலிடம் என்ற நிலைக்கு வந்து விட்டேன். அதைப் போல, புருஷன், பிள்ளைகள் என்று வாழ வேண்டிய நாச்சியார் இன்று எல்லோராலும் கை விடப்பட்டு நடுத் தெருவுக்கு வந்து விடப் போகிறாள். ரோஜாக் கொல்லை மண் வளத்தைப் பொறுத்தே பலன் தருகிறது. சில பேர் சேற்றில் நட்டு விட்டு நல்ல ரோஜா பட்டுப் போய் விட்டதே என்கிறார்கள். அது போலத் தான் பெண்களின் வாழ்க்கையும்! பெண்ணின் வாழ்க்கை அவளுடைய அழகில் இல்லை; ஆடை ஆபரணங்களில் இல்லை; புருஷனைப் பொறுத்துத் தான் அமைகிறது. பாவம், எங்கோ, எப்படியோ வாழ வேண்டியவள் எங்கோ எப்படியோ அலை மோதுகிறாள்.

டேவிட்டின் சிந்தனை ஓயவில்லை. தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அது பெங்களூரில் இருந்து கோகிலா எழுதிய கடிதம். அவள் அதில்,

"அன்புள்ள அண்ணன் அவர்களுக்கு, வணக்கம். மிக முக்கியமான ஒரு விஷயம் பற்றிப் பேச தங்களைச் சந்திக்க விரும்புகிறேன். நெடு நாட்களுக்குப் பின் பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது மாதிரியும் இருக்கும்."

—கடிதத்தை இதோடு முடித்திருந்தால் சகோதரியை வரும்படி பதில் கடிதம் எழுதியிருப்பான். ஆனால் கடிதத்தின் பிற்பகுதி அவனை நிலை குலைய வைத்துவிட்டது.

"உங்கள் பள்ளி வாழ்க்கையிலும் எங்களுக்குத் தெரியாமல் எவ்வளவோ நடந்திருக்கின்றன. இன்று அவை பேய் வடிவம் எடுத்து தலை விரித்து ஆடத் தொடங்கி விட்டன. கடிதத்தின் இந்த வாசகங்கள், கருணையானந்தத்தை மேஜரின் முன் கொண்டு போய் நிறுத்துவது போலிருந்தது பாதிரியாருக்கும் மனம் இருப்புக் கொள்ளவில்லை. மறுநாளே அவர் பெங்களூருக்குப் புறப்பட்டுப் போனார். அங்கே டாக்டர் கோகிலா அவரை அன்புடன் வரவேற்றாள். முன்பு எப்போதோ ஒரு முறை தான் டேவிட் அந்த வீட்டிற்குப் போயிருக்கிறார். இரண்டாவது முறையாக இப்போதுதான் போகிறார். முன்னைய வீடு விரிவாக்கப்பட்டிருந்தது. கோகிலாவிடம் கார் இருந்தது. வேலையாட்கள் இருந்தனர். அடிக்கடி போன் மணி அடித்தது. தன்னைப் போல கோகிலா வாழ்க்கையில் விரக்தியடைந்து விடவில்லை என்பதை மட்டும் அவர் உறுதிப் படுத்திக் கொண்டார்.

"ஏன் கோகிலா, என்ன கடிதத்தில் ஏதேதோ கிறுக்கியிருந்தாயே!"

"அது பெரிய கதை அண்ணா, பிறகு பேசுவோம். நானே வரலாம் என்றிருந்தேன். நீங்களே வந்து விட்டீர்கள். நீங்கள் இங்கு வந்தது கூட எனக்கு 'அலர்ஜி'யாகத்தான் இருக்கிறது" கோகிலா சொன்னாள்.

"என்ன கோகிலா, ஏதோ பெரிய நாவலுக்கு முகவுரை கொடுத்துக் கொண்டிருக்கிறாயே!"

"ஆம் நாவல்தான். ஒரு பெண்ணின் வாழ்க்கை - புயலில் சிக்கிய படகாகத் தவிக்கிறது. நாச்சியார் என்று யாராவது உங்களோடு படித்தாளா?"

"ஆம், படித்தாள். அவள் ஒரு மேஜரின் மகள். அவளை விவாகரத்துப் பண்ணப்போகிறார்கள். அதுதானே நீ சொல்லப்

போவது!'' -பாதிரி இப்படிச் சொன்னதும், கோகிலா திகிலடைந்துவிட்டாள். மயில்வாகனன் சந்தேகப்பட்டது உண்மைதானு? என்று கூட எடுத்த எடுப்பில் கோகிலா நினைத்து விட்டாள். பிறகு, டேவிட் விளக்கமாகச் சொன்ன பிறகுதான் மன அமைதி ஏற்பட்டது.

''மயில்வாகனன் உடனே விவாகரத்து செய்துவிட வேண்டும் என்கிருரே!''

''செய்துவிட்டு?''

''ஏற்கனவே, இதே நாச்சியார், தான் பிழைக்க மாட்டோம் என்று தீர்மானித்து ஒரு பியாஞ வாத்தியக்காரியை அவனுக்கு மனம் முடித்து வைத்திருக்கிருளே, அவளுக்குத்தான் இப்போது கொண்டாட்டம் ஆகிவிட்டது'' என்ருள்.

'' அவசரக்காரர்களிடத்திலும், அற்பத்தனமானவர்களிடத்திலும் வெற்றி நீண்ட காலம் நிலைத்ததில்லை. கோகிலா என் தொண்டு தெய்வத் தொண்டு. தெய்வத் தொண்டுக்கு இலக்கணமே- பிறருக்கு உழைப்பது, பிறருக்கு உதவுவது, நிரபராதிகளைக் காப்பதுதான். நான் இதை ஒரு அறைகூவலாக எடுத்துக் கொள்கிறேன். எப்படியும், நாச்சியாரை மயில்வாகனனேடு சேர்த்துவைக்க வேண்டும். அதுதானே உன் இலட்சியம்'' ஆழ்ந்த சிந்தனையோடு பேசினுன் டேவிட்.

''என் இலட்சியம் மட்டுமல்ல; உங்களுடைய இந்தப் புனிதமான கோலத்திற்கும் அதுதானே அழகு'' என்ருள் கோகிலா.

இந்த நேரத்தில் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து மயில்வாகனன் இறங்கி வந்தான்.

வாசலில் டேவிட்டைப் பார்த்ததும் அவன் முகம் கருத்து விட்டது. பாதிரி உடையில் முதன் முதலாக அப்போதுதான் பார்க்கிருன்.

"மிஸ்டர் மயில்வாகனன், உங்கள் சந்தேகத்தை நிவர்த்திக்கத்தான் வந்திருக்கிறேன். கோகிலா கடிதம் எழுதியிருந்தாள். நீங்கள் என்னோடு மனம் விட்டுப் பேசலாம். என்னிடத்தில் எந்த மாசும் இல்லை. நான் பத்தாண்டுகளுக்குப் பின் நாச்சியாரைப் பார்த்தது கூட இல்லை. என் வாழ்க்கைப் பாதையே மாறிவிட்டது. இனி அதை மாற்றவே முடியாது அவள் என்னை ஏமாற்றவில்லை; தந்தை செய்த குற்றத்திற்காக தன் காதலை தியாகம் செய்தாள். அவளாக என்னை விட்டுப்பிரிய நினைத்தாள். அதை நான் தடுக்க முடியுமா?"-பாதிரி அமைதியாகப் பேசினார்.

"உங்களோடு நான் வாதாடவரவில்லை. டாக்டர் கோகிலாவிடம் விடை பெற்றுப் போக வந்தேன். வீண் விவகாரம் வேண்டாம்."

"இதுவா வீண் விவகாரம். இது உன் மனைவியைப் பற்றிய விஷயமாக மட்டும் இருந்தால் நான் தலையிட மாட்டேன். எங்கோ இருக்கும் என்னையும் இழுத்துப் போட்டுப் பேசப்பட்ட விஷயம், நான் இன்று தனி மனிதனல்ல. நான் ஒரு நிறுவனம். என்னைக் கலங்கப்படுத்த நீங்கள் முயன்றிருக்கிறீர்கள். அதைப் பற்றித்தான் நான் பேசவேண்டும்."

"உங்களுக்கும், நாச்சியாருக்கும் சம்பந்தமில்லாவிட்டால் நீங்கள் இந்தக் கட்டத்தில் இங்கு வரக் காரணம் என்ன? இது வரை, நாடகம் எது வரை போயிருக்கிறது என்பதை அறிவதற்காகத்தானே!"-துடுக்காகப் பேசினான் மயில்வாகனன்.

"உன்னைப்போலவே நானும் பாதிக்கப்பட்டவன். ஆகையால் உன்னைப்போலவே நானும் எடுத்தெறிந்து பேசிவிடலாம் ஆனால் அணிந்திருக்கும் உடைக்கு அது அழகாகாது."

"அந்த உடைதான் உடம்பை இப்போது காப்பாற்றியிருக்கிறது. இல்லாவிட்டால் நடப்பதே வேறு!" மீண்டும் இரைந்தான் மயில்வாகனன்.

இடையில் கோகிலா குறுக்கிட்டாள். "மிஸ்டர் மயில் வாகனன், நீங்களாகத்தான் என் வீடு தேடி வந்தீர்கள், வைத்தியம் பார்த்தோம்; சாராவையும் நானேதான் உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். இதற்கும் எங்கள் அண்ணனுக்கும் என்ன சம்பந்தம்?"

"உங்களிடம் வந்ததால் வந்த வினைதானே இது! இங்கு வராவிட்டால் அவள் இறந்திருப்பாள்; நிம்மதியாக இருந்திருப்பேன்." மயில்வாகனனின் தொனியில் தொய்வு ஏற்படவே இல்லை.

"இவ்வளவு பேசுகிறீர்களே, மயில்வாகனன், உங்களுக்கு மனசாட்சி இருந்திருந்தால் மனைவி படுத்த படுக்கையாக இருந்தபோது சாராவோடு கொஞ்சி மகிழ்ந்திருப்பீர்களா?" கோகிலாவின் கேள்வி வேலாகப் பாய்ந்தது.

"டாக்டர் மிதமிஞ்சிப்பேசாதீர்கள்!"

"பேச வேண்டிய கட்டம் வந்துவிட்டால் எல்லாவற்றையும் உடைத்துத்தானே பேச வேண்டும்! ஒன்றும் நாச்சியாருக்குத் தெரியாமலில்லை. எல்லாம் தெரிந்து தான் அவள் தெய்வமாக ஒதுங்கிக் கொண்டிருக்கிறாள்! அவளுடைய பாவம் உங்களை விடப்போவதில்லை" கோகிலா வார்த்தைகளைக் கொட்டினாள்.

"கோகிலா, நீ பேச வேண்டாம். இது எனக்கும் அவருக்கும் உள்ள விஷயம். நான் இப்போது தும்பைப் பூவாக இருக்கிறேன். ஆனால் அவர் என்னை பழைய கதைகளோடு ஒட்டிப் பார்க்கிறார். ஆனால் அவருக்கு உண்மையை உணர்த்தியே ஆக வேண்டும். இதில் நான் தயக்கம் காட்டினால் என் உடைக்கும் அழகல்ல, என் தொண்டுக்கும் பெருமை அல்ல. ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இன்று அவர் கோபத்தில் பேசுகிறார். ஆகையால் உணர்வுகள் நிதானமாக இருக்க மாட்டா. எப்போதாவது ஒரு நாளைக்கு நாச்சியார் நிரபராதி என்று தெரிந்து

கொண்டால் அப்போதாவது அவளை ஏற்றுக் கொள்வாரா என்பதை மட்டும் நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்'' என்றார் பாதிரி.

''அதுவரை இருக்கவா போகிறாள். அவள் அடக்கமானவளாக இருந்தாலும் மானமுள்ளவள்''-கோகிலா குறுக்கிட்டாள்!

''இருந்துதான் ஆக வேண்டும் கோகிலா! குற்றம் சாட்டப்பட்டவர்களெல்லாம் இறந்து போய் விட்டால் பொது மக்களுக்கு எப்போதுதான் உண்மை தெரிவது'' பாதிரியார் இடையிட்டுப் பேசினார்!

மயில்வாகனன் பலமாகச் சிரித்தான்! அது ஏளனச் சிரிப்புத்தான்!

''அவள் இறந்து விட்டாலே நிரபராதிதான் அவள் இறப்பதற்காகவா என்னை மோசம் செய்திருக்கிறாள். எப்படிடியாவது வாழ்வதற்காகத்தானே நாடகம் ஆடி இருக்கிறாள். மானமிருந்தால் அவள் அன்றைக்கே விஷம் குடித்து இறந்திருப்பாளே! அவளாவது இறப்பதாவது!'' என்று இகழ்ச்சியாகப் பேசிவிட்டு அந்த இடத்தை விட்டுப்போய் விட்டான் மயில்வாகனன்.

ஃ ஃ ஃ

இரண்டு வாரங்களுக்குப் பிறகு மல்லீஸ்வரம் சாலையில் ஒரு அழகிய பெண்ணின் பிரேதம் அடையாளம் தெரியாமல் அழுகிப் போய்க் கிடப்பதாக நகரில் பரபரப்பு ஏற்பட்டது. உடனே டாக்டர் கோகிலா போலீசுக்கு தொலைபேசி மூலம் கேட்டாள். அதற்கு அவர்கள் ''அந்தப் பெண்ணின் மடியில் ஒரு கடிதம் இருந்தது. அதில் நான் விஷம் குடித்து இறந்து போய் விட்டேன். உத்தமியாக வாழ்ந்த என்னை, கணவனுக்காக எதையும் தியாகம் செய்து வாழ்ந்த என்னை என் கணவர்

சந்தேகித்ததால் நான் நஞ்சு குடித்து விட்டேன். நான் இறந்த பிறகாவது அவர் என்னைப் பற்றிய முடிவை மாற்றிக் கொள்ளட்டும் என்பதற்காகத்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன். இப்படிக்கு, நாச்சியார் என்று எழுதியிருப்பதாக விவரமாகச் சொன்னார்கள். கோகிலாவுக்கு உடல் புல்லரித்தது. இந்தத் தகவலைச் சொல்லியாவது, மயில் வாகனனைத் திருத்தலாம் என்று கோகிலா அங்கு புறப்பட்டாள்.

அவள் எதிர்பார்க்கவில்லை. மயில்வாகனனுக்கும் செய்தி எட்டி அவன் கண்ணீரோடு நாற்காலியில் சாய்ந்து கிடந்தான். கோகிலாவுடன் முகம் கொடுத்துப் பேசவே அவனுக்கு வெட்கமாக இருந்தது.

கொடுமை நடந்து விட்டது டாக்டர். அவள் நோயாளியாகவே இறந்திருக்கலாம். அவளைக் குணப்படுத்திக் கொன்று விட்டேன். மகரந்தம் நிறைந்த மலராக அவள் என்னிடம் வந்தாள். ஆனால் நானே அவளைக் குப்பைக் கூளமாக்கி விட்டேன். செல்லப் பிள்ளைகளுக்கு சுய சிந்தனை இருக்காது என்பது உண்மையாகி விட்டது. டாக்டர், பாதிரி கருணையானந்தத்திற்கு என் மன்னிப்பைத் தெரிவிக்க வேண்டும். எனக்காகவாவது அவர் இறைவனைப் பிரார்த்திக் கட்டும்; வாழ்க்கையின் வெற்றிக்கு பணமல்ல முக்கிய காரணம், பண்பும் குணமும்தான் மிக முக்கியமான மூலதனங்கள்'' என்று புலம்பினான். கோகிலாவும் கண்ணீரைச் சொரிந்தாள். அப்போது தெருவில் ஒரு பாட்டுச் சத்தம் கேட்டது.

''டாக்டர், இந்த ராகம் என்றால் நாச்சியாருக்கு உயிர். கல்யாண மேடையில் இருக்கும்போது இந்த இராகத்தை நாதசுரக்காரர்கள் வாசித்தார்கள். இது ஆனந்த பைரவி ராகம் அவளுக்காக இதே ராகத்தில் பல இசைத் தட்டுக்களை வாங்கி வைத்தேன். இன்று அவளில்லாமல் நான் மட்டும் அந்த ராகத்தைக் கேட்கிறேன். கணவனுக்கும் மனைவிக்கும் சேர்த்துப் படிப்பதுதானே நலுங்கு. அந்த நலுங்குப் பாடலை நான் மட்டும் ரசிக்கமுடியுமா டாக்டர்.'' மயில் வாகனன் பைத்தியம் பிடித்

தவனைப்போல் பேசினான். முதலில் கோகிலா பயந்து விட்டாள், பிறகு தேற்ற முயன்றாள்.

"சாரா எங்கே"?

"அந்தக் கொடுமையைக் கேட்காதீர்கள். அவள் நாடகத்திற்குப் போயிருக்கிறாள்" என்றான் மயில்வாகனன்.

பெங்களூரில் பாதிரியார் விடுதியில் தங்கியிருந்த டேவிட் கருணையானந்தத்தை வரவழைத்து, டாக்டர் கோகிலா விவரமாகச் சொன்னாள். அவர் கலங்கவில்லை. "இப்படியெல்லாம் நடக்கும் என்று எனக்கு ஓரளவு தெரியும்" என்று மட்டும் சொன்னார் டேவிட். கோகிலா திகைப்படைந்தாள்.

"நீ ஆச்சரியப்படுவாய் கோகிலா, இந்த ஏற்பாட்டை நான் தான் செய்தேன். மானமுள்ளவளானால் அவள் சாகட்டும் என்று அவன் சொன்னதுமே எனக்குத் தோன்றிய எண்ணம் இது தான், அதற்கு ஏற்ற மாதிரி மல்லீஸ்வரத்தில் ஒரு பெண்ணின் பிரேதம் கிடப்பதாக இரவோடு இரவாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. நானே ஒரு கடிதத்தை எழுதி அந்தச் சடலத்தின் மடியில் வைத்து விட்டு வந்து விட்டேன். அது யாருடைய பிரேதமோ தெரியவில்லை. நான் அதை நாச்சியாரின் பிரேதமாக எடுத்துக் கொண்டு இந்தப் பணிகளைச் செய்தேன்" என்று சொல்லி முடிப்பதற்குள் கோகிலா குறுக்கிட்டாள்.

"அப்படியானால் நாச்சியார் இருக்கிறாளா? அது அவள் சடலம் இல்லையா?"

"இல்லை! இல்லை! அவள் கன்னிமாடத்தில் பெண்கள் காப்பகத்தில் இருக்கிறாள். இப்போதாவது மயில்வாகனன் உணர்கிறானா? பாவம், பணக்காரப் பிள்ளைகள் பரபரப்புக்கு ஆளானவர்கள். அதனால் தான் மாரடைப்பு ரத்த அழுத்தம் எல்லாம் பணக்கார வியாதிகளாகி விட்டன." என்றார் டேவிட்.

இருவரும் காப்பகத்திற்குச் சென்று நாச்சியாரை அழைத்துக் கொண்டு மயில்வாகனன் மாளிகைக்குச் சென்றார்கள். மயில்வாகனன் நம்பவே இல்லை. தெய்வங்களே உயிர் பெற்று வந்ததாகக் கருதி விட்டான்.

“தொடக்கத்திலேயும் நாச்சியார் நல்ல மனத்தோடு தான் வந்தாள். இப்போதும் அதே மனத்தோடுதான் வந்திருக்கிறாள். நான் இப்போது ஒரு பாதிரி. உங்களுக்குத் திருமணம் செய்விக்கப் போகும் பாதிரி” என்று கண் கலங்கச் சொன்னார் டேவிட். எல்லோர் கண்களிலும் நீர் துளிர்த்தது.

முடிவுரை

சாரா என்ன ஆனாள் என்று படிப்பவர்கள் நினைக்கலாம். இது நாச்சியாரின் கதையே தவிர, சாராவின் கதையல்ல; எனக்கு வாய்ப்பு ஏற்படும் போது ‘இப்போது சாரா!’ என்று எழுதத்தான் போகிறேன்.

# முறைப்பெண்

## விஜயரகுநாத சேதுபதி

எங்கள் அன்பிற்குரிய தெய்வமான ராஜராஜேஸ்வரியின் திருவுடையால் என் குலமும், என் கொற்றமும் தப்பித்துக் கொண்டன. மங்களேஸ்வரியின் மீது கருத்த உடையார் கொடுத்திருந்த புகாரை மேலோட்டமாக மட்டும் படித்து விட்டுத் தீர்ப்புக் கூறியிருந்தால் சேதுபதிகள் சேமித்து வைத்திருந்த செல்வாக்கு அனைத்தும் செல்லரித்துப் போயிருக்கும். கீர்த்திமிக்க கிழவன் சேதுபதியின் ஆவிகூட என்னைச் சும்மா விட்டிருக்காது.

நான்கூட ஒரு காலத்தில் மங்களேஸ்வரியை மனைவியாக்கிக்கொண்டு அவளைச் சேதுநாட்டின் நாச்சியாராக ஆக்கிவிட அலைமோதிக் கிடந்தவன்தான். மறவர் நாட்டின் மரபுகள் தானே நெடுஞ்சுவர்களாகக் குறுக்கே எழுந்து அந்த என் விருப்பத்தைத் தடுத்துவிட்டன! என்தந்தைசொன்னார் - "மகனே, நாமோ செம்பிய நாட்டு மறவர்; மங்களேஸ்வரியோ ஆப்ப நாட்டைச் சேர்ந்தவள்; இதுவரை செம்பிய நாட்டுக்கும், ஆப்ப நாட்டுக்கும் கொள்வினை, கொடிப்பினைகள் நடந்ததே கிடையாது; ஆகையால், நம்மால் குலமரபுகள் குலைந்ததாக இருக்கக் கூடாது"-என்று பிறகு நான் என்ன செய்ய முடியும். கசப்பான மருந்தை வாயில் போட்டுக் கொண்டு அதை விழுங்குவதற்குத் தண்ணீரைக் குடிப்பதைப் போல் என் நிலைமை ஆயிற்று. சில விஷயங்களில் பெரியவர்களின் கனிந்த கருத்துக்கள் ஆருடங்களைப் போல் ஆகிவிடுகின்றன என்பதற்கு, மங்களேஸ்வரியின் மீது நான் கொண்டிருந்த மாளாக் காதலை என் தந்தை, தடுத்தது ஒரு அழியாத சான்றாகிவிட்டது.

மங்கஸ்ேஸ்வரி, கவர்ச்சியான தோற்றமுடையவள். அவளது குரல்கூட மிகவும் இனிமையானது தான். மறவர் நாடு முழுதும் தேடினலும் மங்கஸ்ேஸ்வரிக்கு இணையான ஒரு பெண்ணழகியைப் பார்க்க முடியாது செம்பிய நாட்டு மறவர் மண்ணுக்கு மன்னவனுக வர இருக்கும் எனக்கு இல்லத்தரசியாக வந்துவிடக்கூடிய சாத்தியக் கூறுகளெல்லாம் மங்களேஸ்வரிக்கு இருந்தும் குல விதிகள் குறுக்கே நின்று தடுத்து அவளை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டன.

பாவம்; நான் யாரை பட்டத்து மகிஷியாக்கிக் கொள்ளத் துடித்தேனே, யார்மீது மையல் கொண்டு மதிமயங்கிக் கிடந்தேனே-அந்தச் சித்திரப் பாவை இன்று என் முன் குற்றக் கூண்டில் நிற்கிருள். இன்று அவளது எதிர்கால வாழ்க்கை அல்லது அவள் வாழப்போகிருளா, சாகப்போகிருளா என்கிற பிரச்சினை என்னுடைய தீர்ப்பில்தான் தொடுக்கிக் கொண்டிருக்கிறது. பெண்களின் அழகு-சிலருக்கு அற்புத ஆயுதங்களாக அமைகின்றன; வேறு சிலருக்கோ, தங்களைத் தாங்களே தற்கொலை செய்து கொள்ளும் நச்சுக்கோப்பைகளாகவும் அமைந்து விடுகின்றன.

வழக்கில் பாரபட்சம் காட்டக் கூடாது என்பது சேதுபதி வம்சத்தினர் பின்பற்றிவரும் அழியாத கொள்கை. யாராக இருந்தாலும்-குடிமக்களாக இருந்தாலும், அரச வம்சத்தினராக இருந்தாலும் குற்றவாளி தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பதுதான் இதுவரை சேதுபதிகள் அளித்து வந்திருக்கிற தீர்புக்களாகும். அதிலும் நான் மிகவும் கண்டிப்பானவன். என் மகளை வாழ வைக்கும் மருமகன் என்றுகூடப் பார்க்காமல், இராமேஸ்வரத்திற்கு வந்த வட இந்திய யாத்ரீகர்களைத் துன்புறுத்தினன் என்பதற்காக அவனுக்கு மரண தண்டனை வழங்கியவன் நான். ஒரு மன்னன் அளிக்கும் நல்ல தீர்ப்பு அவன் புகழை நானூறு ஆண்டுகளாவது காப்பாற்றும் என்பது கிழவன் சேதுபதியின் அருள்வாக்கு. அதனல்தான் சேதுபதி வம்சத்தில் யாரும் நீதி தவறுவதில்லை. சேதுபதிகள் கலைகளை ரசிப்பார்கள்; கானகத்தில் வேட்டையாடிக் குதுகலிப்பார்கள்.

ஆனால் நீதிமன்றத்திலே மட்டும் அவர்கள் ஒரு துளிகூட நிதானம் இழக்கமாட்டார்கள்.

அன்று எனக்கு அழகுராணியாகத் தோன்றிய மங்களேஸ்வரி இன்று ஒரு அபலைபோல் தெரிகிறாள். எவ்வளவு கொடிய மாற்றம்! ஒரு பெண் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்கும் வரை அவள் தெய்வமாக வணங்கப்படுகிறாள்; ஆனால் அவள் மீது ஏதாவது சிறு களங்கம் கற்பிக்கப்பட்டு விட்டாலும் அவளது கடந்த காலத்தூய்மைகள் அனைத்தும் கண்ணாடித் துண்டுகளைப் போல் தூளாகி விடுகின்றன.

நான் மனதுக்குள்ளேயே கற்பனை செய்து பார்த்துக்கொள்கிறேன். என் பக்கத்தில் அரியணையில் அமரவேண்டிய அன்னக்கிளி, கன்னத்தில் நீர்வடியக் கலங்கிப்போய் நிற்கிறாள். என்னுடைய நாவசைப்பில்தான் இனிமேல் அவளது ஆயுளே இருக்கிறது. அவள் குற்றவாளியாகிவிட்டால் அவளது பரம்பரையே இனிமேல் தலையெடுக்க முடியாது மனிதர்களுக்குச் சிலநேரங்களில் சில பெரிய பதவிகள் மீதுகூட வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. இன்று எனக்கும் அந்த நிலைதான். நான் சேதுபதியாக்கப்பட்டு அரசனாக இல்லாதிருந்தால் இன்று நான் அளவில்லா ஆனந்தம் அடைந்திருப்பேன். மங்களேஸ்வரியின் எதிர்காலம் என் தீர்ப்பில் அடங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காது அல்லவா!

அவள் யார்? சாதாரணக்குடும்பத்தில் பிறந்தவளா? மானமறவர் குடும்பத்தில் பிறந்த ஒரு மணிப்புறா பாளையப்பட்டின் தலைவனாகவும், கமுதிக் கோட்டை அதிபதியாகவும் விளங்கும் உறங்காப்புலி சேர்வையின் மனைவி அவள். உறங்காப்புலி என்ன எளிதான மனிதரா? அவர் ஒரு வேங்கை. எதிரிகளை உருட்டி, மிரட்டிப் பணியவைப்பதில் நிகரற்ற வீர புருஷன். அத்தகைய மறவர் திலகத்திற்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டவள் தான் மங்களேஸ்வரி; அப்பேர்ப்பட்ட வம்சத்தைச் சேர்ந்த ஒரு அதிபதியின் மனைவியின் நடத்தைமீது மறவர் நாட்டில் சந்தேகம் கிளம்பிவிட்டதே என்பதை எண்ணித்தான் நான் வெதும்பிக்

கொண்டிருக்கிறேன். அரச குடும்பத்தினரை மக்கள் ராச கோபுரங்களாக மதிப்பார்கள்; வணங்குவார்கள். இது சேது நாட்டின் வம்சாவழிப்பழக்கம். அப்படிப்பட்ட நாட்டில் இப்படி ஒரு வழக்கா? அதுவும் ஒரு அந்தப்புரப் பெண்ணின் மீதா?

நான் என்ன செய்யப்போகிறேன் இந்தவழக்கில்?-எனக்கே குழப்பமாக இருக்கிறது. குருதியைக் கொட்டி கமுதிக் கோட்டை, கொத்தளங்களைக் காத்த உறங்காப்புலியின் மானத்தைக் காக்கப் போகிறேனு? கமுதிக்கோட்டையின் அதிபதியின் தர்ம பத்தினி நெறிதவறிவிட்டாள் என்று தீர்ப்புக் கூறி ஆப்பநாட்டு மறவர் வம்சத்திற்கே உலைவைக்கப் போகிறேனு? கிழவன் சேதுபதியை என்மனத்தில் இறுத்திக் கொண்டு பெருமூச்சு விடுகிறேன்.

போரில் தோற்ருல் மீண்டும் ஜெயித்துக் கொள்ளலாம்; சொத்தை இழந்தால் உழைத்துச் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனுல் குடும்பத்தலைவி கற்பை இழந்துவிட்டாள் என்ருல் உலகத்தில் அதற்கு ஏது பிராயச்சித்தம்? எத்தனை போர்களில் வென்று என்ன பயன்? எண்ணற்ற கோட்டைகளைக் கைப் பற்றித்தான் யார் மதிக்கப் போகிருர்கள்.

வழக்கு என் கவனத்திற்கு வந்த நாளிலிருந்து உறங்காப் புலி உணவு கொள்ளாமல் இருக்கிருராம். நீதிபதி ஸ்தானத்திலிருக்கும் நானே மாறுவேடத்தில் போய் அவருக்கு ஆறுதல் கூறுவது என்பது முறையான செயலாகுமா? எதற்கும் கலங்காத உறங்காப்புலி, சேதுநாட்டின் சேனுதிபதிகளின் தலையாய சேனுதிபதியாக விளங்கும் உறங்காப்புலி, வழக்கு வந்தநாளிலிருந்து உளுத்தமரம்போல் கலகலத்துப் போனுர் என்று நான் கேள்விப்படும்போது என் நெஞ்சம் துணுக்குறத்தான் செய்கிறது. மனிதன் மகிழ்ச்சியோடு இருக்கும்போது தான் உறுதியாகவும் பலமாகவும் இருக்கிருன். அவன் மனம் எந்தக்காரணத்திலாவது கலங்கிவிட்டால் அவனே கோழையாகிவிடுகிருன்.

உறங்காப்புலி வெறும் வீரன்மட்டும்மல்ல. சேதுபதியின் பெரிய அரண்மனையில் நன்கு பழகி நல்ல மதியூகங்களையும்

கற்றுக் கொண்டவர். அவருக்கு, தன் மனேவிமீது துரும்பளவு சந்தேகம் ஏற்பட்டிருந்தாலும் அவர் அவளை சம்ஹாரம் செய் திருப்பாரே! அப்பேர்ப்பட்ட மானஸ்தராயிற்றே உறங்காப் புலி! இப்படி ஒரு ஐயமும் என் உள்ளத்தில் எழாமல் இல்லை. மங்களேஸ்வரி தனக்குக்கிடைக்கவில்லை என்பதற்காக, அல்லது மங்களேஸ்வரியைக் குற்றவாளியாக்கிவிட்டால் கமுதிக் கோட்டையின் அடுத்த வாரிசு தனக்குத்தான் கிடைக்கும் என்ற பேராசையில் கருத்த உடையார், மங்களேஸ்வரி மீது இப்படி ஒரு அவதூறை ஏன் கிளப்பிவிட்டிருக்கக்கூடாது. இந் தச் சந்தேகமும் எனக்கு உண்டு. ஆனுல், கருத்தடையார் கூறியிருக்கும் வழக்கில் ஆழமான சில உண்மைகள் இருப்பது போல் எனக்குத் தெரிவதால் நான் நிதானமாக வழக்கை விசாரிக்க ஆயத்தமாகியிருக்கிறேன்.

மங்களேஸ்வரி, — உறங்காப்புலிக்கு நான்காவது மனேவி- முதல் மூன்று மனேவிகளுக்கும் பிள்ளைப்பேறு இல்லாததால், நானகாவது மனேவியாக மணந்து கொண்டார் உறங்காப்புலி சேர்வை. இதையே தான் குற்றச்சாட்டாகச் சொல்கிருர் கருத்த உடையார். முதல் மூன்று மனேயாட்டி களுக்கும் பிள்ளைப்பேறு இல்லாதபோது மங்களேஸ்வரிக்கு மட்டும் எப்படி பிள்ளை வந்தது என்பது தான் கருத்த உடையாரின் கேள்வி? தனக்கு வாரிசு இல்லாமல் போனுல் தனக்குப் பிறகு நான் அதிபதியாகிவிடுவேனே என் பதற்காக மங்களேஸ்வரியை சோரம் போக வைத்து மகப் பேற்றை உண்டாக்கிக் கொண்டார் உறங்காப்புலி என்கிருர் கருத்த உடையார். இது அபாண்டமான குற்றச்சாட்டா அல் லது ஆதாரப்பூர்வமான குற்றச்சாட்டா என்று தீர்மானிக்க ராஜசபை பயப்படவில்லை. ஆனுல் இப்படி ஒரு அசிங்கமான குற்றச்சாட்டு சேதுபதியின் அரசவையில்,அதுவும் அதிபதிகளின் வம்சத்திற்குள்ளேயே கிளம்பிவிட்டதே என்ற கூச்சம் மட்டும் என்னை அடிக்கடி அலைக்கழித்துக்கொண்டுதானிருந்தது.

வழக்கு நடந்துகொண்டிருக்கும் போதே உறங்காப்புலி கவலையால் நோயுற்று மடிந்து விட்டார். அவர் மறைவு எனக்கு

மேலும் ஒரு சிக்கலை உருவாக்கிவிட்டது. மங்கலேஸ்வரிக்கு குழந்தை பிறந்திருப்பதும் உறங்காப்புலி இறந்திருப்பதும் ஒரே மாதத்தில். நான் எதை நம்புவது? கருத்த உடையார் சொல்வதை நம்புவதா? அல்லது எனக்குக்கருத்தரித்த மாதத்தில்தான் என் கணவர் உறங்காப்புலி உடல் நலம் குன்றி படுக்கையில் விழுந்தார் என்று மங்கலேஸ்வரி சொல்வதை நம்புவதா? முனிவர்கள் முள்ளில் தவமிருந்தார்கள் என்று கூறுவது இப்படிப் பட்ட தர்மசங்கடமான நேரங்களைத்தானோ என்று கூட நான் நினைத்துக் கொண்டதுண்டு.

நான் கவலைப்பட்டதெல்லாம் — என்னுடைய தீர்ப்பு, யாரோ சிலரைத் திருப்திப்படுத்துவதாக மட்டும் அமைந்து விடக்கூடாது. ஆப்பநாட்டுக்கொண்டையன் கோட்டை மறவர் வம்சத்தையே நிலைகுலையச் செய்தால் கூட நான் கவலைப்பட போவதில்லை. ஆனால் தீர்ப்பு நல்ல தீர்ப்பாக இருக்கவேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனை.

## கருத்த உடையார் சேர்வை

**உ**றங்காப்புலி இப்போதுதான் வகையாகச் சிக்கிக் கொண்டான். வாள்எடுத்தால் அவனை வெல்ல யாராலும் முடியாது; மல்யுத்தம் என்றாலும் பீமனைப்போல் களத்தில் குதித்து எதிரிகளின் உடலையே முறித்துவிடுவான். அப்பேர்ப்பட்ட உறங்காப் புலி சேர்வை, இப்போது அலைமோதிக் கொண்டிருக்கிறான். யானையையே கொல்லும் சிங்கம் அதன் காலில் சிறுமுள் தைத்து விட்டால் பலம்குன்றி, குகைக்குள்ளேயே கிடப்பதைப்போல் இன்றுஉறங்காப்புலி சேர்வை வீட்டைவிட்டுவெளியேற முடியாமல் தவிக்கிறான். வாள்கொண்டு, வேல்கொண்டு அவனால் எதிரிகளை வீழ்த்த முடியும். அவனுக்கு வியாதி வந்துவிட்டால் என்ன செய்வது? ஆம்; உறங்காப்புலிக்குத் தீராத மனவியாதி வந்து விட்டது. கொற்றவனானாலும் குடும்பக் கவலைக்குத் தலைகுனிந்து தானே ஆக வேண்டும்.

உறங்காப்புலி சேர்வைக்கு மங்களேஸ்வரி நாலாவது மனைவி. முதல் மூன்று மனைவிகளுக்கும் புத்திர பாக்கியம் இல்லை. தனக்குப்பிறகு கமுதிக்கோட்டையைக் கட்டியாளும் வம்ச பாத்தியத்தை தனக்கு வேண்டுமே என்பதற்காக மங்களேஸ்வரியை நாலாவது மனைவியாக்கிக் கொண்டான் உறங்காப்புலி. முறைப்படி மங்களேஸ்வரி எனக்குக் கிடைக்க வேண்டியவள். நான் அவளுக்கு மாமன் மகன். அவள் எனக்கு முறைப்பெண். கமுதிக் கோட்டைக்கு அதிபதியே தன்மகளைப் பெண் கேட்கிறாரே என்ற பவிசில் மங்களேஸ்வரியின் தகப்பன் முறைகளைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, மகளை உறங்காப்புலிக்குக் கொடுத்துவிட்டார். தனக்கு அரண்மனை வாசம் கிடைக்க வேண்டுமென்பதற்காக குலமுறைகளை மறந்தவள், வாரிசு உரிமைக்காக ஏன் தவறி நடந்திருக்கக் கூடாது? இதுதான் எனக்கு எழுந்த சந்தேகம். முதல் மூன்று மனைவிகளுக்குப் புத்திர பாக்கியம் இல்லாதபோது மங்களேஸ்வரிக்கு மட்டும் எப்படி மகன் பிறப்பான்? நான் மட்டுமல்ல; ஆப்ப நாட்டு மறவர் வம்சமே இந்த விஷயத்தில்தானே திகைக்கிறது! நாட்டுக்கூட்டங்களிலும், சேனைகள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கும் கிசுகிசுப்பு நெருப்பில்லாமல் புகையாது என்ற நாட்டு மொழிக்குச் சான்றாகவே இருந்தது. தக்க ஆதாரத்துடனேயே பட்டாளத்தினர் அடிக்கடி பேசிக்கொள்கிறார்கள். யாரோ மதுரை நாயக்க மன்னருக்கு வேண்டிய இளைஞன் ஒருவன் அடிக்கடி கமுதிக் கோட்டைக்குள் போய் வந்து கொண்டிருக்கிறானும். அவனுக்கு உறங்காப்புலி சேர்வையிடம் அடங்காத மதிப்பாம். எதற்கும் ஒட்டுப்போட்டுப் பார்த்து உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொள்ளும் மனித சமூகம் இவ்வளவு கிடைத்தால் விட்டுவிடுமா? அவ்வளவுதான் தக்க நேரத்தில் பக்க வாத்தியங்களோடு மங்களேஸ்வரியைப் பற்றி அசிங்கமாகப் பேசத் தலைப்பட்டார்கள். சேதுபதியின் கோட்டைகள் அனைத்திலும் பரவி இப்போது அது அவருடைய கொலுமண்டபத்திற்கே வந்துவிட்டது.

உறங்காப்புலி சேர்வை எனக்கு உறவினர்தான். அவருக்கு ஏற்படும் அவமானம் என்னையும் சார்ந்ததுதான். ஆனால் ! அவர்

எனக்கிழைத்த கொடுமையை மறந்துவிட முடியுமா? கோட்டைக்கு அதிபதி என்பதற்காக எனக்குச் சேரவேண்டிய முறைப் பெண்ணை நான் இழக்க வேண்டுமா? மறவர் முறைப்படி பொறுப்புத்தொகை எனக்கு கட்டிவிட்டால் மங்களேஸ்வரி எனக்கு அத்தை மகள் இல்லாமல் போய்விடுவாளா? பழி தீர்த்துக் கொள்வது வேண்டாத வேலைதான். ஆனால் பழி தீர்த்துக் கொள்ளாதவன் எப்போதாவது வீரனாக மதிக்கப்பட்டிருக்கிறானா? சகித்துக்கொண்டே போவதுதான் வீரமென்றால் தென்னிந்தியாவில் பாளையக்காரர்கள் போர்க்களங்களையே அமைத்திருக்க மாட்டார்களே.

நான் நொந்துபோனவன். நான் காதலில் தோல்வி கண்டவன். என்னுடைய காதல் ஒருதலைக் காதலாக இருந்தால் கூட என்னைக் குறைகூறிக் கொள்ளலாம். நானும் விரும்பினேன். மங்களேஸ்வரியும் விரும்பினாள். கண்கள் பேசின. மானசீகமான மனத்தொடர்பும் இருந்தது மங்களேஸ்வரி எனக்குத்தான் என்று நாடே பேசியது இவ்வளவையும் அறிந்தும் கமுதிக்கோட்டைக்கு அதிபதி என்ற அகந்தையில் மங்களேஸ்வரியின் தந்தையை மிரட்டி அவளுக்கு மாலை சூட்டுகிறான் உறங்காப்புலி என்றால் ஒரு மானமறவன் பொறுத்துக் கொள்ளக்கூடிய செயலா இது? குழந்தையின் கையிலிருந்த சர்க்கரைக் கட்டியை வித்தை காட்டி அபகரித்துக் கொண்டதைப் போல எனக்கு வேண்டிய மங்களேஸ்வரியை உறங்காப்புலி மனைவியாக்கிக் கொண்டது எந்த வகையில் நியாயம்?

தீமைகளை விளைவித்தவர் உறங்காப்புலி தானே; அதற்காக, மங்களேஸ்வரியின் மீது களங்கம் கற்பிப்பது என்ன நியாயம்; அதனால் என்ன இலாபம்-என்று பலர் என்னைக் கேட்டார்கள். தங்க நகைசெய்யும் போது தட்டானுக்குக் கிடைக்கும் சேதாரம்போல மங்களேஸ்வரியின் கண்ணீரை நான் எனக்குச் சேதாரமாக எடுத்துக் கொள்கிறேன். படுகளத்தில் குதித்துவிட்ட பிறகு பாட்டுக் கச்சேரியைப்பற்றி கவலைப்படுவது கொண்டையன் கோட்டை மறவனுக்கு அழகல்ல.

சேதுபதியின் சீமையில் சுமார் எழுபது பாளையப்பட்டு கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாளையப்பட்டிலும் பெண்கள் இல்லாமலில்லை. உறங்காப்புலி விரும்பி இருந்தால் அவர் களுள் ஒரு பெண்ணை மணந்து கொண்டிருக்கலாம். எனக்குச் சேர வேண்டியவளைக் குறி வைத்துத் தாக்குவது என்றால் என்னுடைய காண்டீபம் மட்டுமென்ன ஒடிந்ததா? ஒரு பெண்ணுக்காக ஆசைப்பட்ட உறங்காப்புலி, கௌரவமிக்க கமுதிக் கோட்டையின் சொல்வாக்கையே இழக்கப்போ கிறான். "உறங்காப்புலி ஒரு மலடன். மங்களேஸ்வரி பெற்ற தாகக் கூறப்படும் குழந்தை உறங்காப்புலிக்குப் பிறந்ததல்ல" என்ற தீர்ப்பு சேதுபதியின் வாயிலிருந்து உதிருமானால் மற வர் நாட்டு மயானத்தில் கூட உறங்காப்புலிக்கு இடம் கிடைக்காது.

நானும் சாதாரணமானவன் அல்ல: பாளையப்பட்டுக் குரிய குடும்பத்தில் பிறந்தவன் தான். உறங்காப்புலிக்கு வாரிசு இல்லையென்றால் நான்தான் கமுதிக்கோட்டைக்கு அதிபதியாக வரவேண்டியவன்; வம்சா வழிப்படி சேதுபதி என்னைத் தவிர வேறு எவரையும் நியமிக்க முடியாது. அத னால் தான் உறங்காப்புலி நான் அதிபதியாகிவிடக் கூடாது என்பதற்காகத் தன் கௌரவத்திற்கே ஊனம் விளைவித்துக் கொண்டான். மங்களேஸ்வரி இன்று மதிகெட்டு, நிலைதடு மாறி கண்ணீரும் கம்பலையுமாய் நிற்பதற்கு வேறு என்ன காரணம்? வெட்கக்கேடு மனைவி சோரம்போனால் கூட பரவா யில்லை, கருத்த உடையார் மட்டும் கமுதிக்கோட்டைக்கு அதி பதியாக வரக்கூடாது என்பது தானே உறங்காப் புலியின் கொள்கையாக இருந்திருக்கிறது. தர்மம் இன்று தன் னுடைய தராசுவைச் சேதுபதியிடம் தந்திருக்கிறது. போர்க் காலங்களில் புலிபோல் சீறிப்பாயும் உறங்காப்புலி, கோட்டை கொத்தளங்களைக் காப்பதில் வல்லவன் என்ற பெயர் பெற்ற உறங்காப்புலி என்னுடைய குற்றச் சாட்டிற்கு என்ன பதில் சொல்லப் போகிறான்?

"மங்களேஸ்வரிக்குப் பிறந்திருக்கும் ஆண் குழந்தை உறங்காப்புலி சேர்வைக்குப் பிறந்ததல்ல; அவன் மலடன்

அல்ல என்ருல் முதல் மூன்று மனைவிகளுக்குள் யாருக்காவது ஒருத்திக்குக் குழந்தை பிறந்திருக்க வேண்டும். இப்போது பிறந்திருக்கும் குழந்தை, மதுரையிலிருந்து மாறுவேடத்தில் கமுதிக்கோட்டைக்குள் வந்து போகும் இளைஞனுக்குப் பிறந்தது''-என்பது தான் என்னுடைய அழுத்தமான குற்றச்சாட்டு. எனக்குக் கோட்டைக்கு அதிபதியாக வேண்டும் என்ற ஆசை இப்போது இல்லை. அது எப்போதோ மடிந்து விட்டது. ஆனுல், கமுதிக் கோட்டைக்கு அதிபதியாக வர விருக்கும் ஒருவன்கற்புள்ள பெண்ணின் வயிற்றில் பிறந்தவனுக இருக்க வேண்டும். ஏனென்ருல் பாளையப்பட்டு என்பது ஒரு சாதாரண பணக்கார வீட்டுக்குடும்பத்தைப் போன்றதா? அதற்கு ஒரு பின்னணி உண்டு. எல்லாம் வல்ல எங்கள் சேதுபதி இதிலும் நல்ல தீர்ப்பு வழங்குவார் என்று எதிர்பார்க்கிறேன். பாவம், உறங்காப்புலி திடீரென்று இறந்துவிட்டார்; மங்களேஸ்வரிக்குப் பிள்ளை பிறக்கிறது. அதே மாதத்தில் மங்களேஸ்வரியின் மணாளன் இறக்கிருன்.

## உறங்காப்புலி சேர்வை

நான் ஆயிரம் களங்களைக் கண்டவன். சேதுபதியிடம் தங்கப் பதக்கங்கள் பெற்றவன். எத்தனையோ களங்களில் யானை மிரண்டு பிளிறிய போது கூட நான் அம்பாரியில் நின்று கலங்கியதில்லை. என் மீது பாய்ந்த வேலைப்பிடுங்கி எதிரி மீது வீசியிருக்கிறேன். என்னை நோக்கிவரும் அம்பைத் தடுத்து ஒடித்திருக்கிறேன்—ஆனுல் இன்று மனங்குன்றிக் கண்கலங்கி நிற்கிறேன். என் நெஞ்சம் பதறுகிறது. திருடன் பதுங்கலாம், குற்றவாளி கூனிப்போகலாம். ஆனுல் நிரபராதியான நான் ஏன் இப்படி நிலைகுலைந்து நிற்கிறேன்? மானமே பெரிது என்று மதிக்கும் மறவர் தேசம் மனதிற்குள்ளே என்னைத் தூற்றிக் கொண்டிருக்கிறது. நான் ஊர் ஊருக்குப் போய் உண்மையைச் சொல்ல வழியில்லை. மங்களேஸ்வரி ஒரு உத்தமி; மாசற்ற மணிவிளக்கு. தங்கத்தாம்பாளத்தை

சேற்றில் வீசியதைப்போல அவள்மீது அவதூறை வீசுகிறார்களே என்பதை நினைக்கும்போது தான் எனக்கு நெஞ்சம் பதைக்கிறது. என்னை மலடன் என்கிறான் கருத்த உடையான். எனக்கு குழந்தையே பிறக்காது என்று கேலி பேசுகிறான். அதற்கு அவன் கற்பிக்கும் நியாயம் எனக்குக் குழந்தை பிறப்பதாக இருந்தால் முதல் மனைவிக்கே பிறந்திருக்க வேண்டுமாம். சந்தர்ப்பம் அவனுக்கு இப்படித் துணை நிற்கிறது. என்னுடைய முதல் மூன்று மனைவிகளுக்குப் புத்திரர்கள் இல்லை என்பது உண்மைதான். அதற்காகவேதான் நான் மங்களேஸ்வரியை நாலாவது மனைவியாக ஆக்கிக் கொண்டேன் என்பதும் பொய்யல்ல. அதுதான் கருத்துடையானுக்குக் கோபம். எத்தனையோ பாளையப்பட்டுக்கள்! இருந்தும், அங்கெல்லாம் பெண்ணெடுக்காமல், மங்களேஸ்வரியை எப்படி மனைவியாக்கிக் கொள்ளலாம் என்று அவன் குமுறுகிறான். மனித மனம் தோல்வியடையும் போதும் கோபம் அடையும்போதும் சூடாகிறது. மகிழ்ச்சியடையும் போதும், வெற்றியடையும் போதும் குளிர்ச்சியடைகிறது. அதில் கருத்துடையான் மட்டும் தெய்வப்பிறவியாக இருக்க முடியுமா?

பல பாளையப்பட்டுக்களில் மங்களேஸ்வரியைவிட அழகான பெண்கள் இருந்தும் நான் ஏன் மங்களேஸ்வரியைத் தேர்ந்தெடுத்தேன்? அதற்குக் காரணம் அவள் அழகல்ல. இவள் குணமல்ல. அவளுடைய குலப்பெருமையுமல்ல, என் நெஞ்சில் ஆழமாக ஊறி, சுனைபோல் தேங்கி நின்ற நன்றியுணர்ச்சிதான் அதற்குக் காரணம். சேதுபதி போருக்கு அழைத்தபோதெல்லாம் போர்க்களம் நோக்கிப்படையோடு சென்ற பாளையப்பட்டுகளில் நானே முதற்பரிசைப் பெறுவது வழக்கம். ஒரு முறைகூட, சேதுபதியின் அழைப்பை நான் உதாசீனப்படுத்தியதில்லை. உயிரே போனாலும் என் உதிரத்தில் ஊறிப்போயிருந்த உக்கிரம் என்னைக் களத்தில் மிருகமாகவே ஆக்கிவைத்துவிடும். அந்தப் பெருமைக்கெல்லாம் மூல காரணம் ஆப்ப நாட்டின் அஞ்சா நெஞ்சம் என்ற பேர்

பெற்ற ராமையாத்தேவர்தான், அவன்தான் மங்களேஸ்வரியின் தகப்பன்.

"ராமையா படையை அனுப்பு" என்றால் "பத்தாயிரம் வேண்டுமா? அதற்கு மேலும் வேண்டுமா" என்றுகேட்டவன், இப்படிஎன் பெருமைக்கெல்லாம் காரணமாயிருந்தவன் வீட்டில், என்நெஞ்சில் மின்னும், பதக்கங்களுக்கெல்லாம் காரணமாயிருந்தவன் குடும்பத்தில் பெண்ணெடுக்க நான்விரும்பினேன். அந்தப் பெண் வயிற்றிலாவது ஒருவம்ச விளக்குத் தோன்றாதா என்ற ஏக்கம் எனக்கு. திருமணமான தொடக்கத்தில் இது கூடத் தோல்வியாகிவிடுமோ என்றுதான் நான் பயந்தேன். வேறு இடத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தால், குழந்தை குட்டிகளோடு மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டிய மூன்று பெண்களைக் கெடுத்த நான், அரச போகத்திற்காகவும், அதிபதி பதவிக்காகவும் நாலாவதாகவும் ஒரு பெண்ணைக் கெடுத்துவிட்டோமோ என்ற அச்சம் எனக்கு தோன்றியதுண்டு. சேதுபதியின் கிருபையால் அந்த அச்சம் எனக்கு நீங்கியது. திடீரென்று ஒரு நாள் மங்களேஸ்வரி என் அருகில் வந்து அந்தத் தகவலை என் காதிற்குள்ளே சொன்னாள். முதலில் எனக்குக் கூட அது ஆச்சரியமாகவும் நம்பமுடியாததாகவும் தான் இருந்தது. எப்போதும் ஆச்சரியமான செய்திகள் முதலில் நம்ப முடியாததாகத்தான் தோன்றும்.

"மங்களேஸ்வரி; உண்மையாகத்தான் சொல்கிறாயா?" என்றுகேட்டேன். "பெண்கள் எதிலும் விளையாடுவார்கள். இதில் விளையாடமாட்டார்கள்" என்றாள் மங்களேஸ்வரி, எனக்கு உள்ளம் பூரித்தது. பிறப்பது ஆணோ, பெண்ணோ எதுவானாலும் அதையே கோட்டைக்கு அதிபதி ஆக்கிவிடுவது. என்றுபெருமூச்சு விட்டேன் பிள்ளைக்கலி தீர்ந்தாலே போதுமென்று பேதலித்துக்கிடந்த உள்ளமல்லவா இது?

திடீரென்று எனக்கு வாத நோய் வந்துவிட்டது. ஆருடக்காரர்கள் இதை அபசகுணம் என்றார்கள். அவள் கர்ப்பம் தரித்த நேரம் சரியில்லை என்று குதர்க்கம் பேசினார்கள்.

திடகாத்திரமான எனக்கு இப்படி ஒரு நோய் வரும் என்று நான் கனவாவது காண முடியுமா? கை கால்களை நீட்ட முடியவில்லை. நாளுக்கு நாள் என்னுடைய நடை உடைகளில் தொய்வுகள் தோன்றின. ஒரு கட்டத்தில் படுத்த படுக்கையாகவே ஆகிவிட்டேன்.

வயிற்றில் சிசுவோடு இருக்கும் என் மனைவிக்கு அருகிலிருந்து முக்கனிகளை வாங்கிக் கொடுக்க வேண்டிய நான் முடமாகிப் போய் ஒரு மூலையில் கிடந்தேன். கோட்டை கொத்தளங்கள் எதையும் என்னால் கவனிக்க முடியவில்லை. சேனைகளுக்குள்ளே சச்சரவுகள் தலையெடுத்தன.

என் அருமை மனைவி மங்களேஸ்வரி மலர்ந்த பூவாக இருந்தாலும் கண்ணீர்ப்பூவாகவே இருந்தாள். நான் என்னுடைய கடைசி நாட்களை நெருங்கிக் கொண்டு போவதாக நினைக்கவேயில்லை. துயரென்று தோன்றும் போதெல்லாம் பாரத்தை எங்கள் சேதுபதி மீதுதான் போட்டு விடுவது எங்கள் குலப் பழக்கம். அதைப்போலவே இப்போதும் பாரத்தை சேதுபதிமீது போட்டுவிட்டேன். சேதுபதி எது சொன்னாலும் அதுதான் எங்களுக்கு வேதவாக்கு. அன்றும், இன்றும் இதுதான் எங்கள் நம்பிக்கை.

எனக்கு இப்போது அடிக்கடி மயக்கம் வருகிறது, காரணம் குடிப் பழக்கமோ, உடற்சோர்வோ அல்ல: என் காதுக் கெட்டிய தீயினும் கொடிய செய்திகள் என்னைச் சாம்பலாக்கிக்கொண்டிருந்தன. சேதுபதியிடத்தில் என் குடும்பத்தைப் பற்றிய புகார்களைக் கருத்த உடையான் அள்ளி அள்ளி வீசியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். மங்களேஸ்வரி சோரம் போய்விட்டாளாம். மகாலெட்சுமியைப் பார்த்து அப்படிச் சொன்னால் சேதுபதி நம்பியா விடுவார்?

மங்களேஸ்வரி கர்ப்பம் தரித்திருப்பதில் சந்தேகம் வருவதாயிருந்தால் எனக்குத்தானே வரவேண்டும். எனக்குத் துளியும் சந்தேகமில்லை. அவள் கர்ப்பம் தரித்திருப்பது எனக்குத்தான். பிறக்கப்போகும் குழந்தையும் எனக்குத்தான்.

ஆனாலும் கருத்த உடையார் ஊரார் மத்தியில் பரப்பி வைத்திருக்கும் வதந்திகள் சில நேரங்களில் என்னையும் குழப்பத்தான் செய்தன.

முதல் மூன்று மனைவிகளுக்குக் குழந்தைகளைக் கொடுக்க முடியாத எனக்கு மங்களேஸ்வரிக்கு மட்டும் எப்படிக் குழந்தை கொடுக்க முடிந்தது? இது எனக்குள் நானே எழுப்பிக் கொண்ட சந்தேகம்.

## மங்களேஸ்வரி:

தமிழ்ப் பெண்கள் மலர்கள் போன்றவர்கள். மலர்கள் மாலையாகி எந்தப் பெண்ணுடைய தலைக்காவது போய்விட்டால், பின் அவை கருகி விழும்வரை அவற்றிற்கு வாழ்வு அந்த முடியில்தான். பெண்ணினத்தில் தமிழினத்தைச் சார்ந்த பெண்களுக்குத்தான் இந்த இலக்கணம் பொருந்தும். கற்பையும் பொற்பையும் கல்விச்சாலையில் போதிக்கும் வெறும் பாடமாகக் கொள்ளாமல் அவற்றையும் பெண்கள் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிகள் என்று மனதார நினைப்பது தமிழ்ப் பெண்கள்தான். அதுவும் அரசகுலத்துப் பெண்கள் பற்றிச் சொல்லவேண்டுமா? நெறிகள்தானே அவர்களுக்கும் பாதுகாப்பு அரண்கள்.

நான் கன்னிப் பெண்ணாக இருக்கும் போது கருத்த உடையார் என்னை விரும்பியது உண்மைதான். எனக்குக் கூட அவர் மீது ஜாடைமாடையாக ஒரு விருப்பம் தோன்றியது இதைப் போய் என் தந்தையிடம் கூறி நான் வாதாட முடியுமா? பெற்றோர்களால் வாங்கித்தர முடியாத பொன்னுக்கும், பொருளுக்கும் கூட மகள் வாதாடுவாள்; ஆனால், இன்ன புருஷன்தான் வேண்டுமென்று எந்தத் தமிழ்ப் பெண்ணும் வாதாடமாட்டாள். அந்தப் புருஷனுக்கே மகளைக் கொடுப்பதாக இருந்தாலும் பெரியவர்களாகவே பேசுவார்களே தவிர, பெண்ணிடம்

வந்து கேட்கமாட்டார்கள். இதுதான் தமிழ்ப் பண்பின் தனிச் சிறப்புக்களில் கிரீடம் போன்றது. நானோ ஒரு நாட்டுத் தலைவனின் மகள். ஐயாயிரம் தலைக்கட்டு மக்கள் என் தந்தைக்கு மரியாதை செலுத்துகிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு அதிபதியை எதிர்த்துப் பேசவோ, அவர் கருத்தை மறுத்துப் பேசவோ என்னால் எப்படி முடியும்? பூக்கள் செடியில் உள்ளவரை தோட்டக்காரனுக்குதானே சொந்தம்!

நான் உறங்காப் புலி சேர்வைக்கு மனைவியாகிவிட்டேன். ஆம்! நான் இப்போது கமுதி அதிபதியின் மனைவி. அவருக்கும், எனக்கும் வயதில் வித்தியாசம் உண்டு என்பது உண்மைதான். சிலநேரங்களில் பார்ப்பவர்களுக்கு அவர் எனக்குப் பொருத்தமற்றவராகக் கூடத் தெரியலாம் ஆனால் என்று அவரை நான் கணவனாக ஏற்றுக்கொண்டேனோ அது கல்வெட்டு மாதிரி என் தலையெழுத்தாகிவிடுகிறதல்லவா? வயது, மூப்பு, பருவம், இளமை, அழகு எல்லாமே சம்பிரதாயம் என்னும் கூண்டுக்குள் அடைக்கப்பட்டுவிடுகிறதே!

அவருடைய மூன்று மனைவிகளுக்கும் குழந்தைகளே இல்லையென்று தெரிந்துதான் என் தந்தை அவருக்கு என்னை வாழ்க்கைப்பட வைத்தார். இதைப் பெண்கள் இரண்டுவிதமாக எடுத்துக்கொள்ளலாம். ஒரு இளம் பெண்ணை ஒரு தந்தை இப்படி பலியிடலாமா என்று கருதவும் செய்யலாம். அல்லது, ஏதாவது ஒரு நன்மையைக் கருதியல்லாமல் ஒரு தந்தை இப்படிச் செய்வாரா என்றும் கருதிக் கொள்ளலாம். நான் இந்த இரண்டு வரிசையிலும் சேராதவள். நான் வாழ்க்கையில் களிப்படையாவிட்டாலும் சேதுபதியின் உற்ற நண்பராக உள்ள என் தந்தையும், அதைப்போல் சேதுபதியின் வலதுகரமாக இருக்கும் கமுதிக் கோட்டை அதிபரும் சேர்ந்து எடுத்த முடிவை எங்கள் பாளையப்பட்டின் நன்மையாகக் கருதினேனே தவிர, இதனால் என் வாழ்வு நிலவாகுமா, நாசமாகுமா என்பது பற்றிக் கருதவேயில்லை.

என்னுடைய கணவருக்குச் சேதுபதியிடம் மிகுந்த செல்வாக்கு இருந்தது. அவர் முகவை அரண்மனைக்குப் போனால் வர்ணிக்கமுடியாத வரவேற்புக் கிடைக்கும். என்னதான் செல்வாக்கு இருந்தாலும், தனக்குப் பிறகு வாரிசு இல்லை என்ற கவலை அவரையும், என்னையும் தணலில் தங்கமாகக் கொதிக்க வைத்தது. இதை நினைத்துச் சில நேரங்களில் அவர் பெருமூச்சு விடுவதையும், மனம் நொந்து குப்புறப் படுத்துக் கொள்வதையும் நான் பலமுறை பார்த்துக் கண்ணீர் வடித்திருக்கிறேன்

அவர் ஒரு நாள் அந்திவேளையில் என்னிடம் பேச்சுக் கொடுத்தார். எப்போதுமே, அவர் மனம் கோணும்படி நான் நடந்துகொண்டதேயில்லை. என் வாழ்க்கையில் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எனக்கு என்றைக்குமே ஏற்பட்டதும் இல்லை.

"மங்களேஸ்வரி"

"அத்தான்!"

"உன் மனநிலை எனக்குப் புரிகிறது. எனக்கே சில நேரங்களில் உள்ளம் துணுக்குறும் போது உனக்கு எப்படி இருக்கும் என்பதை நான் யூகித்துப் பார்க்காமலில்லை. நமது குலதெய்வமான ராஜ ராஜேஸ்வரி எப்படியாவது ஒரு வாரிசை நமக்கு வழங்கிடுவாள் என்ற நம்பிக்கை எனக்கு மேலோங்கியிருந்ததால் உனக்கு நான் மாலையிட்டேன் என்றால் உன்னுடைய இளமையும், இல்லறமும் பாழாகிவிட்டனவோ என்று நீ மன வருத்தப்படுவாய் என நான் அஞ்சுகிறேன். நான் யாருக்கும் தீங்கிழைத்ததில்லை. முதிர்ந்த, பல களங்களைக் கொண்ட தளபதிக்குச் சொந்த விஷயங்கள் எதுவும் இருக்கக்கூடாது என்பது சேதுபதியின் புத்திமதிகளில் ஒன்று. அதனால்தான் பிற விஷயங்களில் தலையிடுவதில்லை, கோட்டையைக் காப்பது, சேதுபதியின் ஆணையை நிறைவேற்றுவது, அலுவலில்லாத நேரங்களில் செந்தாமரை போன்ற உன் முகத்தைப் பார்த்துப் பேசி மகிழ்வது இதுதான் இன்றுவரை என்னுடைய அன்றாடவேலைகள் ஆனால் நீ என்ன நினைக்கிறாய் என்று என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

"எனக்கென்று தனி நினைப்பு எதுவும் இல்லை. பெண்கள் கல்யாணம் ஆகும்வரை மேகத்தில் நிற்கும் நீராவி மாதிரி. கல்யாணமாகி விட்டாலோ, தரையில் விழுந்த மழைத்தண்ணீர் மாதிரி. எப்படிப்பட்ட தரையில் மழைத்துளி விழுகிறதோ அப்படிப்பட்ட மண்ணின் குணமேதான் அந்தத் தண்ணீருக்கும் உண்டு. அது போலத்தான் நானும். அதிபதியின் அலங்காரச் சிமாட்டி நான். அதிபதி என்ன நினைக்கிறாரோ அதுதான் என்னுடைய நினைப்பும்."

"மங்களேஸ்வரி! நான் உன் மனதைச் சோதிப்பதாகக் கருதாதே! உன் வயிற்றில் நிச்சயமாக ஒரு புலி பிறப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நம்பிக்கை மட்டும் இருந்தால் போதுமா? அதற்கான முயற்சியும் நாம் செய்ய வேண்டாமா?"

"நான் எதற்கும் தயார். அந்தப்புரத்தில் தாலாட்டுக் கேட்க எனக்கு விருப்பமில்லாமலா இருக்கும்?"

"மங்களேஸ்வரி; அருகில் வா. ஒரு முக்கியமான தகவலை நான் உன்னிடத்தில் சொல்லப் போகிறேன். உனக்கு விருப்பமிருந்தால் அதைச் செய்வோம். மதுரைக்கோட்டையில் ஒரு பிரபல வைத்தியர் இருக்கிறாராம்! குழந்தை இல்லாத பெண்களுக்குக் கருத்தரிப்பதற்கான தலைசிறந்த மருந்து அவரிடம் இருக்கிறதாம். அரண்மனைகள், நம்மைப் போன்ற அதிபதிகளின் மாளிகைகளுக்கு மட்டும்தான் அந்த வைத்தியர் வருவாராம். அவரிடம் மருந்து சாப்பிட்டால் இந்தக் கோட்டையில் தீராத மன வியாதியாகப் பரவியிருக்கும் வம்சவிளக்கு இல்லையே என்ற குறை நிச்சயமாகத் தீர்ந்துவிடுமாம்; எனக்கு இந்தத் தகவல் ஒரு நம்பகமான இடத்திலிருந்து கிடைத்திருக்கிறது. உன் விருப்பம் அறிந்துதான் அவருக்கு அழைப்பு அனுப்ப வேண்டுமென்றிருக்கிறேன்."

"அரும்புகள் அருணோதயத்திற்குத் தவம்கிடப்பது போல், ஒரு மழலையை என் மடியில்போட்டு நீலாம்பரி பாட நான் துடிக்கிறேன் இதற்குக் கூடவா என்னிடம் அனுமதி கேட்க வேண்டும்."

இந்த உரையாடல் எங்கள் மத்தியில் படுக்கையறைப் பேச்சுப்போலவே இங்கிதமாக அமைந்தது. குழந்தை இல்லையே என்ற தாகம் என்னை விட அவருக்குத்தான் அதிகமிருப்பது போல் எனக்குத் தெரிந்தது.

மறுநாளே ஓலைகள் பறந்தன. மதுரை நாயக்கர் அரண்மனையைச் சேர்ந்த ரங்கபாஷ்யம் என்ற அரச வைத்திய சிகாமணி கமுதிக் கோட்டைக்கு வரவழைக்கப்பட்டார். தகதக்வென்று மின்னும் தங்கநிற மேனியுடைய அவர் ஒரு ராஜகுருவைப் போலவே தோன்றினார். அவருடைய மருந்துக்குக் கடுமையான பத்தியம் ஏதும் இல்லை. ஆனால், அதிசயமான பத்தியம் ஒன்று உண்டு சுமார் நாற்பத்தைந்து நாள் கணவனோடு தொடர்ந்து மகிழ்ச்சியாகவே இருக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் கணவன் முகத்தில் கோபக்குறியை உண்டாக்கிவிடக் கூடாது. இதுதான் அந்த மருந்துக்குள்ள பத்தியம். வெறும் மருந்து குழந்தையைக் கொடுத்துவிடுமா? சில கனிகள் கொம்பிலே பழுக்கின்றன. வேறு சில கனிகள் தாமாகவே கனிக்கின்றன. இன்னும் கனிகளையோ ஊதித் தானே கனிய வைக்கவேண்டியிருக்கிறது. என் கதை மூன்றுவது கனி வகையைச் சேர்ந்தது போலும்!

அடுத்த கிழமையே வைத்தியம் தொடங்கியது. வைத்தியர் சொன்ன பத்தியப் படி நானும் அவரும் மகிழ்ச்சியாகவே இருந்தோம். அரச காரியங்கள் பார்க்கிற நேரம் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம் அவர் என் அந்தப்புரத்திலேயே இருந்தார். வேளை தவறாமல் அவர் மருந்து சாப்பிட்டார். சிலநேரங்களில் ரோமாபுரி ராணிகள் திராட்சைப் பழங்களை ஊட்டுவதைப் போல மருந்து உருண்டைகளை நானே அவர் வாயில் ஊட்டியிருக்கிறேன். இதிலிருந்து ஓர் உண்மை எனக்குத் தெரிந்தது. நானும் அவரும் வாரிசு இல்லை என்று வருந்துகிறோம்; ஆனால், வைத்தியர் அவருக்கு மட்டுமே மருந்து கொடுக்கிறார்; என் வயிற்றில் கருத்தரிக்காமலிருப்பதற்கு என் உடல் கூறு காரணமில்லை என்பதனைத் தெரிந்துகொண்டேன். இதை வெளியில் சொன்னாலும் அவர் வருந்துவார். இந்த உண்மையை நான்

தெரிந்துகொண்டதாக அவர் அறிந்தாலும் வருந்துவார். இதை நன்கு உணர்ந்த நான் வழக்கத்திற்கு மேலாக அதிக உற்சாகம் காட்டினேன். என்னுடைய நடவடிக்கைகள் அவரை மேலும் மகிழ்வித்தன. மனிதனுக்கு மகிழ்ச்சி ஒரு புதிய ரத்த ஓட்டத்தைக் கொடுக்கிறது. அதே மகிழ்ச்சி தொடர்ந்திருக்குமானல் அவர்கள் முகத்தில் புதிய களையே தோன்றிவிடுகிறது. அப்படித் தான் என் கணவருடைய முகத்தில் ஜீவகளை அரும்பியது. அவருடையபேச்சிலும், நடையுடை பாவனையிலும் வாலிப மிடுக்குத் தெரிந்தது இப்படியும் ஒரு மருந்திருக்கிறதா என்று நான் பிரமித்துப் போனேன். அந்த நாற்பத்தைந்து நாளும் நான் புதிய உலகத்தில் சஞ்சரித்தேன். கைமேல் பலன் கிடைத்துவிட்டதைப் போல எனக்குள் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அந்த இன்பச்சேதியைத் தமிழ்ப் பெண்களுக்கே உரிய முறையில் சூசகமாக அவருக்குச்சொன்னேன். அவரும் புரிந்துகொண்டார். "மங்களம் நமக்கு ஆண் குழந்தைதான் பிறக்க வேண்டும் என்று நாம் நமது சேதுபதியை வேண்டிக் கொள்ளவேண்டும். அப்படிப் பிறக்கும் குழந்தையைச் சேதுபதியின் திருப்பாதத்தில் வைத்துத்தான் பெயர் சூட்ட வேண்டும்" என்று அவர் பதில் சொன்னர்.

நாளுக்கு நாள் என் உடல் நிலையில் மாறுதல் தெரிந்தது. கணவனுக்குத் தெரியாத ரகசியம் இருக்கக்கூடாது என்பதற்காக உண்மையை அவருக்குச் சொல்லி அவர் மனதிற்கு இனிப்பு ஊட்டினேன். அவர் அளவில்லாத மகிழ்ச்சியடைந்து மதுரை அரண்மனைக்குத் தகவல் அனுப்பி வைத்தியரை வரும்படி ஓலை அனுப்பினர். வைத்தியர் ஓலையைக் கண்டதும் ஏதோ விபரீதம் ஏற்பட்டுவிட்டது என்று பயப்பட்டு, இரவோடிரவாக் கமுதிக்கு வந்தார். வந்தவர் என்னைச் சோதித்துப்பார்த்துவிட்டு என் கணவர் வாழ்நாளில் அடையாத ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொன்னர். "பிரபு; கமுதி நாச்சியார் கர்ப்பவதியாகிவிட்டார்" என்ற செய்தியை வைத்தியர் சொல்லி முடிப்பதற்குள், அவருக்கு ஆயிரம் பொற்காசுகளை மகிழ்ச்சிக்கு அறிகுறியாக அளித்தார் என் கணவர்.

ஆனல்...?

உறங்காப்புலி சேர்வையின் புகழை பரப்புவதற்கு என் வயிற்றில் ஒரு ஒளிவிளக்கு உருவாகிவிட்டது என்ற மங்களமான செய்தியை நான் தொடர்ந்து மகிழ்ச்சியோடு அனுபவிக்க முடியவில்லை. என்னைச் சாடி என் மனதை வேதனைப் படுத்துவதற்கு ஒரு துன்பம் ஒளிந்திருந்தது என்பது மறுகணமே எனக்குத் தெரியவந்தது. மனிதர்கள் தொடர்ந்து பகற்பொழுதுகளை அனுபவிப்பது இல்லை. எப்படியும் இருட்டு வந்து பகலைக் கவ்விக் கொண்டு விடுகிறது அதுவரை பதுங்கிக்கிடந்த ஆந்தைகளும், காட்டுப் பூனைகளும் இருள் வந்ததும் இன்பக் கூத்தாடுகின்றன. என் வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட சம்பவங்கள்தான் குறுக்கிட்டன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாயடக்கத்திற்குக் கூட இலக்கணம் வகுத்து வைத்திருப்பது நம் நாடு. ஆண்கள் எல்லாவற்றையும் வெளியில் பேசலாம்; சொல்லிச் சொல்லிச் சிரிக்கலாம்; ஆனல், பெண்களுக்கு அந்தச் சுதந்திரம் உண்டா? எதைச் சொல்லலாம், எதைச் சொல்லக்கூடாது என்ற விதி முறைகள் பெண்களுக்குத்தானே விதிக்கப் பட்டிருக்கின்றன. அந்த விதிமுறைகளை உயிருக்கு ஆபத்து வரும்போது கூடப் பெண்கள் மீறமாட்டார்கள். ஆனல், மானத்திற்கும், கௌரவத்திற்கும் பங்கம் ஏற்படும் சூழ்நிலை வந்துவிட்டால் தான் தவிர்க்க முடியாமல் தமிழ்ப் பெண்களுக்கு மனம் விட்டுச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடுகிறது.

எனக்கு அந்த விபரீதமான கட்டமும் வந்துவிட்டது. என் வயிற்றில் கரு உருவான காலத்திலேயே உறங்காப்புலி சேர்வைக்கு வாதம் வந்துவிட்டது. அவர் படுத்த படுக்கையாகி விட்டார். வயிற்றில் பிள்ளையோடு, நான், அவருக்குப் பாசத்துடனும், பணிவுடனும், பணிவிடைகள் செய்து வந்தேன். குனிந்தால் நிமிர முடியாமலும், நிமிர்ந்தால் உட்கார முடியாமலும் இருந்து கொண்டு குழந்தையைச் சுமக்கும் ஒரு கர்ப்பஸ்திரீ படும் துயரங்கள்தான் அவள் குழந்தைமீது கொள்ளும் பாசத்தையும் புருஷன்மீது வைக்கும் பக்தியையும் பிரதிபலிக்கின்றன. என்னைப் பொருத்தவரையில் நான் அப்படித்தான் கருதுகிறேன். ஏழைப் பெண்கள் எப்படி நினைக்கிறார்களோ தெரியவில்லை.

ஒவ்வொரு நாளும் அவரது உடல்நிலை மோசமடைந்து கொண்டே வந்தது. என்னை நோக்கி ஊர்ந்து வந்த விபரீதம் திடீரென்று ஓடிவரத் தொடங்கிவிட்டது போல் எனக்கு அச்சத்தை ஊட்டியது. எவ்வளவுதான் கற்றவர்களானாலும் தடுக்க முடியாமல் அவர்கள் வாழ்க்கையில் விபத்துக்கள் நேர்ந்துவிட்டால் உடனே விதி விளையாடிவிட்டது என்று தங்களையும் அறியாமல் சொல்லிவிடுவது நம் நாட்டுப் பழக்கமாகிவிட்டது. தமிழர் இரத்தத்தில் ஊறிப்போன அந்தப் பழக்கம் என்னை மட்டும் விட்டுவைக்குமா? ஆம்; என் வாழ்க்கையிலும் விதி விளையாடத் தொடங்கிவிட்டது. விதி என்று ஒரு உருவம் இல்லை; இது பேயும் அல்ல, பிசாசுமல்ல! முடிவுகளுக்கும், நடந்தவைகளுக்கும் நாம் ஆறுதல் அடைந்து கொள்வதற்காக நாமாகச் சூட்டிக்கொண்ட பெயர்தான் விதி என்பது.

எங்கள் ஆசைப்படியே எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால், அதைக்கேட்டு மகிழ அவருக்கு உணர்ச்சி இல்லை. அவர் நினைவிழந்த பின்னர்தான் எனக்குக் குழந்தை பிறந்தது. அதை விடக்கொடுமையானது குழந்தை பிறந்த பத்தாவது நாள் அவர் மரணமடைந்தது தான். விதி விளையாடமட்டுமல்லாமல் வெறியாட்டமே கொள்ளத் தொடங்கிவிட்டது. திடீரென்று இடியும் மின்னலும் தொடங்கி பசுமையான கிளைகளை எரித்து விட்டு அடி மரத்தை மட்டும் விட்டுவைத்து விட்டுப் போனது போல் என் வாழ்க்கை எனக்குத் தெரிந்தது.

அரண்மனைகளிலும், மாளிகைகளிலும் அந்தந்புரம் வரை தான் ரகசியங்கள் காப்பாற்றப்பட்டு வரும். அதைக் கடந்து விட்டால் அந்த ரகசியங்கள் காற்றைவிட வேகமாகப் பரவிடத் தொடங்கி கடைவீதி முதல் கள்ளுக்கடை வரை உடைத்து நொறுக்கப்பட்டுக்கிடக்கும். இதிலிருந்து நான் மட்டும் எப்படித் தப்பமுடியும்? நானோ, புருஷனை இழந்த மாதத்திலேயே பிள்ளையைப் பெற்றவள். என்னை விட்டு வைப்பார்களா?

என் கணவரின் மறைவு குறித்து சேதுபதி புலம்பினார். எனது வலது கரம் ஒடிந்துவிட்டது என்று கூட வாய்விட்டுச்

சொன்னார். இதைவிட அந்தச்சாவு வீட்டிலேயே வாரிசு உரிமை பற்றிப் பேசியதுதான் அவருக்கு உள்ளத்தில் ஈட்டி பாய்ச்சியது போல் இருந்தது. வெறும் வாயை மென்று கொண்டிருந்த கருத்த உடையார் தனக்குப் பாலும் தெளிதேனும் கிடைத்து விட்டதைப்போல் உரத்த குரலில் உரிமைகொண்டாடத் தொடங்கிவிட்டார்.

“நான்தான் அடுத்து, கமுதிக் கோட்டைக்கு அதிபதி. இனி மேல் கமுதிக் கோட்டை எனக்கே சொந்தம்?” என்று அறை கூவத்தொடங்கினார்.

அதுவரை பொறுமையாக இருந்த என் த்ந்தை இராமை யன் கொதித்தெழுந்துவிட்டார்.

“கமுதிக் கோட்டை உனக்கு எப்படிச் சொந்தமாகும்? இதோ என் மகளுக்கு வாரிசு வந்துவிட்டது. அவள் மகன் ஆளாகும் வரை என் மகள் மங்களேஸ்வரியே கோட்டைக்கு அதிபதியாக இருப்பாள்” என்று என் தந்தை கர்ஜனை புரிந்தார். என் தந்தை இராமையனுக்கு என்றைக்குமே இவ்வளவு கோபம் வந்ததில்லை. அவர் முகம் சிவந்துவிட்டது. கண்கள் எரிதழல் களைப்போல் பழுக்கக் காய்ந்திருந்தன.

கருத்துடையார் அதோடு நின்றிருந்தால் கூட என் தந்தை கோபத்தை அடக்கிக் கொண்டிருப்பார். மறவர் நாடே கொதித்து எழக்கூடிய வார்த்தைகளைக் கருத்த உடையார் கொட்டிவிட்டதுதான் என் தந்தையைப் போர்க்களத்துச் சிப்பாயாகச் சித்தரித்துவிட்டது என்று பக்கத்தில் நின்றவர்கள் பிற்பாடு என்னிடம் சொன்னார்கள். அதை இப்போது நினைத் தாலும் என் மனம் கொதிக்கிறது. அதை திரும்பவும் நினைத்துப் பார்த்தால் கூட என் நெஞ்சம் நெருப்பாகிவிடுகிறது. என் வயிற்றில் பிறந்திருக்கும் குழந்தை-உறங்காப்புலி சேர்வைக்குப் பிறந்ததில்லையாம், யாரோ, மதுரை நாய்க்க வம்சத்தைச் சேர்ந்த ஒரு இளைஞருக்குத்தான் என் மகன் பிறந்தானாம்.

நாடாள வேண்டும் என்ற ஆசையால்தான் இந்த அவதூறுகளை யெல்லாம் கிளப்புகிறார். எனக்குக் கோட்டை வேண்டாம். என் வயிற்றில் பிறந்த என் மகன் என் கணவர் உறங்காப்புலி சேர்வைக்குப் பிறந்தவன் என்று நான் நிரூபித்தால் போதும். எனக்குக் கற்புத்தான் உயர்ந்தது; கமுதிக்கோட்டை எனக்கு உயர்ந்ததல்ல. வழக்கு சேதுபதியின் கொலுமண்டபத்திற்கு வந்துவிட்டது. இதுவரை செங்கோல் வழுவாத சேதுபதி இதற்கு என்ன தீர்ப்பளிக்கப் போகிறார் என்று பார்க்கத்தானே போகிறேன். இந்தத் தீர்ப்பினால் ஆப்ப நாடே ஆறாகப் பிரிந்தாலும் நான் கவலைப்படப் போவதில்லை. பெண்களுக்கு மானம்தான் உயிர்; மறவர் குலப் பெண்களுக்கு மானம்தான் பூர்வீகச் சொத்து. எங்கள் பகுதியில் ஒரு பழமொழி உண்டு — கற்புள்ளவள் கழுத்தில் கிடக்கும் கருப்பு மணிக்கு, கற்பிழந்தவள் கழுத்தில் கிடக்கும் வைர மாலைகூட ஈடாகாது என்று. அதைப் போலத்தான் எனக்குக் கமுதிக்கோட்டையும். கெட்டுப்போனவள் என்ற பெயரோடு கோட்டையில் வாழ்வதைவிட உத்தமி என்ற பெயரோடு ஊமத்தை மலிந்த குட்டிச்சுவர்களுக்குள் குடியிருப்பது உத்தமம்.

சந்தர்ப்பம் சிலருக்குச் சாதகமாக அமையலாம். அதுவே சாசுவதமாகிவிடுமா? பொய், புயலைப்போல் வேகமானது. வீசிவிட்டு ஓய்ந்துவிடும். உண்மை அப்படிப்பட்டதல்ல. அது தென்றலைப்போல் மென்மையானது; நிரந்தரமானது.

எனக்குப் பிறந்த குழந்தை உறங்காப்புலி சேர்வைக்குத்தான் என்றால் அவருடைய முதல் மூன்று மனைவிகளுக்கும் ஏன் குழந்தை பிறக்கவில்லை? இதுதான் கருத்த உடையார் கிளப்பிவிட்ட புயலுக்கு அடிப்படை. எங்கள் ரகசியம் எனக்கு மட்டும்தான் தெரியும். கோளாறு எனக்கு அல்ல. உறங்காப்புலியின் ரத்தத்தில்தான் கோளாறு. அதனால்தான் வைத்தியர் அவருக்கு மட்டும் மருந்தைக்கொடுத்தார். இதே வைத்தியர் எனது கல்யாணத்திற்கு முன்பே கிடைத்திருந்தால் என்கணவரின் மூத்த

தாரங்களுக்கும் குழந்தைகள் பிறந்திருக்கும்; நான் உறங்காப் புலி சேர்வைக்கு நாலாவது மனைவியாக வந்திருக்கவும் மாட்டேன். இந்த அவக்கேடும் எனக்கு நேர்ந்திருக்காது. இதை நான் நிரூபித்தாக வேண்டும். நிரூபித்தே தீருவேன். ஆனால், எங்கள் வழக்கைக் கேட்பவர்களுக்கு என்ன தோன்றும்? கருத்த உடையார் கூறுவதிலும் உண்மை இருக்கத்தானே செய்கிறது? அவன் தான் உறங்காப்புலியின் முதல் மனைவிகளுக்கு ஏன் குழந்தை பிறக்கவில்லை என்று கேட்கிறானே என்று நினைப்பார்கள். இது சாட்சிகள் இல்லாத வழக்கு. வைத்தியரும் அவரது வைத்தியமும்தான் எனக்கு ஆதாரம்! உத்தமிகளின் வாழ்க்கை வெற்றிகளில் முடியும்; அல்லது தற்கொலைகளில் முடியும். இதுவரை நடந்த முடிவுகள் இப்படித்தான் முடிந்திருக்கின்றன. என் வாழ்க்கை எப்படி முடிகிறதோ?

## வைத்திய சிகாமணி

ஒருவன், 'பாவம்' என்று பெயர் வாங்குவதைவிடப் 'பொல்லாதவன்' என்று பெயர் வாங்குவதுதான் அழகு என்று எங்கள் மதுரை நாயக்க மன்னர் அடிக்கடி கூறுவார். ஆனால் பெண்கள் விஷயத்தில் அவர் அந்தச் சித்தாந்தத்தை வலியுறுத்த மாட்டார். அதில், அவர் கருத்து மாறுபாடானது. "எந்தப் பெண்ணும் பொல்லாதவள் என்று பெயர் வாங்கக் கூடாது. அடக்கமானவள், நல்லவள் என்றுதான் பெயர் வாங்க வேண்டும்." என்பதுதான் பெண்களைப் பற்றி எங்கள் மன்னரின் கருத்து. நான் ஏன் இவ்வளவு பீடிகை போடுகிறேன் என்று உங்களுக்குத் தெரிகிறதா? எங்கள் நாயக்க மன்னரின் கருத்துப்படி, பழக்கப்பட்டவர்கள் உறங்காப்புலி சேர்வையும், அவர் மனைவி மங்களேஸ்வரியும் என்று சுட்டிக்காட்டுவதற்காகத் தான்.

உறங்காப்புலி உள்ளக் கிடக்கையைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். தொடுத்த போர்களிலெல்லாம் வெற்றி முகத்தையே கண்டவர் அவர். தனக்கு ஒரு வாரிசை உருவாக்கிடும் காரியத்தில் மட்டும் தோல்வி கண்டு தினம் தினம் துக்

கித்துக் கொண்டிருப்பது எங்கள் மதுரை அரண்மனைவரை பரவியிருந்தது. அதைக் கேட்கும் போதெல்லாம் என் மனம் கலங்கிவிடுவதுண்டு. மதுரை அரண்மனையில் நடந்த பல விழாக்களுக்கு உறங்காப்புலி சேர்வை சேதுபதியோடு வந்திருக்கிருர், அப்போதெல்லாம் உறங்காப்புலியின் முகத்தில் இனம் தெரியாத துயரத்தின் சாயல் படர்ந்திருப்பதை நான் உணராமல் இல்லை அவர் மனத்தை முற்றுகையிட்டிருக்கும் முள் வேலியை அகற்றி எறிய என்னிடம் கண் கண்ட மருந்து இருக்கிறது என்று உறங்காப்புலிக்குத் தெரிந்தால் என்னைத்தான் அவர் சேதுபதிக்கு அடுத்தபடியாக மதிப்பார் என்றும் எனக்குப் புரிந்தது. ஆனல் அந்த ரகசியம் எங்கள் மதுரை மன்னருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. இந்த விஷயத்தைப் பரம ரகசியமாக வைத்திருப்பது மதுரை அரண்மனையில் தொடர்ந்து ஒரு ராஜரீகமாகவே இருந்து வருகிறது. அப்படிப்பட்ட அரண்மனை ரகசியக்காப்பு, உறங்காப்புலி சேர்வைமீது எங்கள் மன்னர் கொண்டிருந்த பாசத்திஞல் முதல் முறையாக மீறப்பட்டது.

மன்னர்கள் என்னதான் உற்ற நண்பர்களாக இருந்தாலும் ரகசியங்களைப் பரிமாறிக் கொள்ளமாட்டார்கள். சொந்த விஷயங்களைக் கூடப் பேசிக் கொள்ள மாட்டார்கள். உறங்காப்புலி விஷயத்தில் எங்கள் மன்னரும் சேதுபதியும் மனம் விட்டுப் பேசியிருக்கிருர்கள். அரசர்கள் ஒரு வகையில் ரகசியக் காப்பு விஷயத்தில் பெண்கள் மாதிரிதான். பெண்கள் மற்றவர்களின் ரகசியங்களை உடைப்பார்களே தவிர, தங்கள் ரகசியங்களை மூடி மறைத்துக் கொள்வார்கள். உறங்காப்புலி விஷயத்தில் மட்டும் எங்கள் மன்னருக்கு எப்படியோ இரக்கம் பிறந்துவிட்டது. சேதுபதி 'உறங்காப்புலி குழந்தை இல்லாக் குறையால் வரவரக் கூனிப் போய்க் கொண்டிருக்கிருர்' என்று மதுரை மன்னரிடம் கூறிய நேரத்தில்கூட உடனே "அதற்கு எங்கள் வைத்தியரிடம் ஒரு மாமருந்து இருக்கிறது' என்று மதுரை மன்னர் கூறிவிடவில்லை. அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு சேதுபதி போன பிறகுதான் என்னை அழைத்து விவரத்தைக் கூறிஞர்.

"கமுதிக் கோட்டையின் அதிபரான உறங்காப்புலியின் புத்திர சோகத்தை எப்படியும் நீங்கள் நீக்கி வைத்துவிட வேண்டும். நானோ அல்லது நீங்களோ இதில் தலையிட்டதாக வெளியில் யாருக்கும் தெரியக் கூடாது. ஏனெனில் இதுவரை நாம் பிறர் அரண்மனை உள் விவகாரங்களில் தலையிட்ட தில்லை. அது மரபும் இல்லை" என்று எனக்கு ஆணை பிறப்பித்தார் எங்கள் மன்னர்.

அந்த ஆணையை ஏற்றுக்கொண்டு பொழுது சாய்ந்த பிறகு கமுதிக்கு போனேன். உறங்காப்புலி என்னை உச்சி மகிழ வரவேற்றார். எங்கள் மன்னரின் நல்லெண்ணத்தையும் பெருந் தன்மையையும் அவர் வெகுவாக மெச்சிக் கொண்டார்.

அன்றுதான் நான் மங்களேஸ்வரியைப் பார்த்தேன். உண் மையிலேயே அவள் ஒரு தியாகிதான். ரதிக்கிளி மாதிரி இருக் கும் அவள், அவளைவிட வயதில் மூத்த ஒரு புலியைத் திருமணம் செய்துகொண்டிருப்பது பொருத்தமில்லாமல்தான் இருந்தது. என்ன செய்வது, சமுதாயம் சில வேளைகளில் ஊசி இழைக் குள் எப்படியோ ஒட்டகத்தைத் திணித்து விடுகிறது. யாரை நாசப்படுத்தியேனும் நெறிமுறைகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற வேர் அரண்மனைகளிலும் கோட்டை களிலும், வேரூன்றிப் போய்க் கிடக்கிறதே. கம்பீரமான ஒரு யானையின் முதுகிலே ஒரு அம்பாரி இருந்தால்தானே எடுப் பாக இருக்கும். அம்பாரிக்குப் பதிலாக ஒரு மாடப்புறா உட் கார்ந்திருந்தால் பொருந்துமா? உறங்காப்புலி மங்களேஸ்வரி ஜோடிப் பொருத்தம் எனக்கு அப்படித்தான் தோன்றியது.

வைத்திய தொழில் எங்கள் குடும்பத் தொழில். எங்கள் பாட்டன் காலத்திலிருந்தே நாங்கள் மதுரை அரச வம்சத்து வைத்தியராகி விட்டோம். அரண்மனையில் அரச வம்சத்திற்கு குழந்தை இல்லாக் குறையை நீக்குவது தான் எங்களுக்குப் பிரதானமான தொழில். மதுரை நாயக்க வம்சத்தில் எந்த மன்னருக்கும் பிள்ளைப்பேறு கிடைக்காமல் இருந்ததில்லை. என் பாட்டன் காலத்திலிருந்து என் காலம்வரை நாங்கள் அரண்மனைக்கு வெளியே யாருக்கும் மருந்து கொடுத்ததும் இல்லை; வைத்தியம் பார்த்ததும் இல்லை. இதுதான் முதல்

தடவை. அதுவும் எங்கள் மன்னர் விருப்பத்தின் பேரிலேயேதான் கொடுத்தேன். சிலர் திறமைகளைக் காசாக்கிக் கொள்கிறார்கள்; வேறு சிலர் திறமைகளை உதவிகளாக வழங்குகிறார்கள். என்னைப் பொறுத்தவரை நான் இரண்டிலும் சேராதவன். எங்கள் மன்னர் இட்ட கட்டளையை நிறைவேற்றுகிறவன்; அவ்வளவுதான். இதற்கெல்லாம் பணம் கேட்பதென்று நானோ எனது முன்னோர்களோ விரும்பியிருப்பார்களானால் நாங்களும் இப்போது கோடீஸ்வரர்களாக ஆகி இருப்போம்.

மங்களேஸ்வரி மாங்கனி போன்றவள். அவள் முகத்தில் இளமை ததும்பி நின்றது. முதிர்ச்சியின் முகப்பிற்குக்கூட கால் எடுத்து வைக்காத பிராயம் அவளது பிராயம், அவளது இளமையும் சேர்ந்து என் மருந்துக்குப் பூரண பலன் அளிக்குமென நான் நம்பிக்கை கொண்டிருந்தேன்.

'உறங்காப்புலியாரே, நீங்கள் ஒரு கோட்டைக்கு அதிபதி உங்களுக்கு யோசனை கூற எனக்கு அருகதை இல்லை. இருந்தாலும் என் தொழில் முறைப்படி ஒரு வார்த்தையைச் சொல்லிவைக்க என்னை அனுமதிப்பீர்கள் என்று கருதுகிறேன். என் மருந்தில் பாண்டித்தியக் கலப்பு எதுவும் இல்லை. சாதாரண மருந்துதான். ஆனால் எங்கள் குலமுறைப்படி அது, ரகசியமாகத்தான் இருக்கும். என்னுடைய ஊழியர் ஒருவர் இங்கேயே தங்கியிருப்பார். அவர் தினந்தோறும் மருந்தை அரைத்து, ஒரு மண்டலம், நாளைக்கு ஒரு தடவையோ இரண்டு தடவைகளோ கொடுப்பார். அதை அந்தப்புரத்தில் வைத்து நீங்கள் சாப்பிட வேண்டும். மறுபடியும் கூறுகிறேன்; இது சாதாரணமான மருந்துதான். ஆனால் வெளிக்குத் தெரியக்கூடாது; அதனால்தான் இந்த மருந்துக்கு இன்னும் மகத்துவம் போகவிலலை. இரண்டாவதாக என் மருந்தினால் தான் குழந்தை பிறந்தது என்பதும் ரகசியமாகத்தான் இருக்க வேண்டும். இது எங்கள் மன்னரின் கட்டளையும் கூட. என்று விளக்கமாகச் சொல்லி விட்டு வந்தேன். உலகத்தில் உள்ள ஏக்கம் நிறைந்தவர்கள் அனைவரும் சில நேரங்களில் ஏமாளிகளைப் போலவும், கோழைகளைப் போலவும் குனிந்து விடுகிறார்கள். வீரம் செறிந்த உறங்காப்புலி என்னிடம் குழைந்து பேசியது எனக்கு வியப்பாகத் தோன்றியது.

மதுரை அரண்மனையில், மன்னரின் ஆணைப்படி சில முக்கியஸ்தர்களுக்கு நான் இந்த மருந்தைக் கொடுத்திருக்கிறேன். ஆனால் அவற்றில் ஒன்று கூட வழக்கு மன்றத்துக்கு வந்தது இல்லை.

ஆனால், மங்களேஸ்வரி விவகாரம் பிற்காலத்தில் வழக்கு மன்றத்திற்கு வந்துவிட்டசேதி கேட்டு நான் தூக்கமில்லாமல் அவதிப் பட்டேன். எங்கள் மன்னர், இரக்கப்பட்டுச் செய்த உதவி, ஒரு பெரிய வாரிசு உரிமைப் போரில் சிம்மாசனம் யாருக்கு என்ற சிக்கலில் கொண்டுபோய் விட்டுவிட்டது.

சில நாட்கள் கழித்து மன்னர் சேதுபதியிடமிருந்து எனக்கு ஒரு ஓலை வந்தது. "எங்களது கமுதிக் கோட்டையில் எழுந்துள்ள வாரிசுத் தகராறில் தாங்களும் சம்பந்தப் பட்டிருப்பதாக வாக்கு மூலங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே தாங்கள் நேரில் ஆஜராகித் தங்கள் கருத்தைத் தெரிவிக்கக் கோரப்படுகிறீர்கள்" என்று சேதுபதியின் ஓலையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஓலையைப் படித்ததும், என் கண்கள் கலங்கின. எழுந்துள்ள விபத்திலிருந்து என்னையும், மங்களேஸ்வரியையும் காப்பாற்ற எனது மூதாதையர்களை வேண்டிக் கொண்டேன். எங்கள் பாட்டன் காலத்திலிருந்தே நாங்கள் கொடுத்து வரும் மருந்து பலருக்கு மக்கட்பேறுகளை வழங்கியிருக்கின்றன. ஆனால் மக்கட் பேறுகள் எங்கள் மருந்தினால் தான் ஏற்பட்டன என்று நிரூபிப்பதற்கு என்னிடம் ஆதாரமில்லாமல் நான் தவித்துக் கொண்டிருந்தேன். அதுவும் வழக்கு மன்றத்தில் பலர் முன்னிலையில் அழியாமல் நிற்கக்கூடிய ஆதாரமல்லவா வேண்டும்! என் குழப்பத்தையும் கலக்கத்தையும் அறிந்த என் தாத்தா என்னைக் கூப்பிட்டழைத்தார். அவரிடம் விவரம் கூறி அபயம் அளிக்கும் படிக் கேட்டேன்.

"முதல் முதல் நமது குடும்பம் இந்த அரண்மனைக்கு ராஜ வைத்தியராக வருவதற்கு எது காரணமாக இருந்தது தெரியுமா?" என்று கேட்டார் என் தாத்தா.

எனக்குத் தெரியாததால் நான் பதில் கூறாமல் இருந்தேன்.

"சிகாமணி, அதே பிரச்சினைதான் இப்போது உனக்கு வந்திருக்கிறது. நான் தான் நாயக்க மன்னருக்கு முதல் வைத்தியரானேன். குழந்தைப் பேறு கேட்டு அவர் பல இடங்களுக்கு அலைந்து திரிந்து விட்டு என்னிடம் வந்தார். என்னுடைய மருந்து அவருக்குக் குழந்தையைக் கொடுத்தது. எங்கும் எதிலும் எதிரிகள் முளைத்துவிடுவார்கள் அல்லவா? அவர்கள் மன்னருக்குத் தூபம் போட்டார்கள்.

"குழந்தை பிறந்தது சரிதான். ஆனால், அது வைத்தியரின் மருந்துக்குத்தான் பிறந்தது என்று எப்படி நம்புவது?" என்று கேள்வியைப் போட்டார் அமைச்சர். அவரைத் தவிர, வேறு யாரும் மன்னரிடம் நெருக்கம் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற அற்பத்தனம் அந்த அமைச்சருக்கு.

அமைச்சரின் கேள்வி என்னைத்திக்குமுக்காட வைத்தது. உடனே வீட்டுக்கு வந்து குவிந்துகிடந்த பழைய ஓலைச்சுவடிகளையெல்லாம் துருவித் துருவிப் பார்த்தேன். ஒரு அற்புதமான குறிப்புக் கிடைத்தது. அதையே அதாரமாக வைத்து அரசரிடம் வாதாடினேன். முதலில் திகிலடைந்து போயிருந்த மன்னர் வெற்றி என் பக்கம் வந்ததும் பெரு மூச்சுவிட்டு ஆறுதலடைந்தார். அன்றிலிருந்து அரண்மனையில் என் பெருமை உயர்ந்தது. என் பேரனாகிய உனக்கு இன்று அதே நிலை! பயப்படாதே! சோதனையில் நீதான் வெற்றி பெறுவாய். நீ கமுதிப் போகும் போது என்னிடம் அந்த ஓலைச் சுவடியை வாங்கிக் கொண்டுபோ அதில் கண்டுள்ளபடி சோதனைய நடத்திட மன்னரிடம் வேண்டிக் கொள்! நீதான் வெற்றி பெறுவாய்.

## விஜய ரகு நாத சேதுபதி

இதை ஒரு விசித்திரமான வழக்கு என்று சிலர் நினைக்கலாம். இது விசித்திரமான வழக்கல்ல; இராமநாதபுரத்தையே உலுக்கி எடுத்த வினயமான வழக்கு என்றுதான் சொல்ல வேண்டும். தென்னிந்தியாவில் மட்டுமல்ல; வட இந்திய சாம்ராஜ்யங்களில்கூட இப்படி ஒரு வழக்கு நடந்திருக்காது; நீதிபதி ஸ்தானத்திலிருக்கும் என்னைப்போன்ற அரசனுக்கு இப்படி ஒரு தர்ம சங்கடமும் ஏற்பட்டிருக்காது. ஒரு குடும்பப்

பெண்ணுக்கு புருஷன் வேண்டுமா பிள்ளை வேண்டுமா என்று தீர்மானிப்பது எவ்வளவு மனக்குழப்பத்தைத் தருமோ? அதை விடப் பெரிய குழப்பம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக நீதி தேவதை என்று ஒன்று இருப்பதை மறந்துவிடாதே, என்று கிழவன் சேதுபதி என் நெஞ்சில் தோன்றி உறுத்திக் கொண்டே இருந்தார்.

உறங்காப்புலி மரணத்திற்குப் பிறகு எழுந்த இந்த வழக்கு கமுதிக் கோட்டைக்குத் தலைவரை நியமிப்பதில் காலம் தவறச் செய்து கொண்டே வந்தது. வழக்கை விசாரிக்காமல்மங்களேஸ்வரியையும் அவள் மடியில் தவழ்ந்த குழந்தையையும் கோட்டையிலிருந்து அகற்றிவைக்க அரசு நீதி இடம் தரவில்லை. அதனால் வழக்கின் முடிவிற்காக நான் காலம் தாழ்த்தவேண்டியதாயிற்று உறங்காப்புலிக்குப் பிறகு, மங்களேஸ்வரியே தொடர்ந்து கோட்டைக்கு அதிபதியாக இருந்து வந்தாள்.

வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டுவிட்டேன். எனக்கு ஆலோசனை கூறுவதற்காக சான்றோர் நிறைந்த ஒரு ஆலோசனைக் குழுவையும் நான் நியமித்துக் கொண்டேன். அந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள் இதற்கு முன் பல வழக்குகளில் ஆலோசனைகளை வழங்கியவர்கள்; வயதில் எனக்கு மூத்தவர்கள். வழக்கில் நான் தவறான தீர்ப்பை வழங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் தக்க முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டேன். குற்றவாளியைக்கூடத் தப்பிக்க விடலாம்; ஆனால், நிரபராதியைத் தண்டித்துவிடக்கூடாது என்ற உலக நீதியைப் புரட்டிப் போட்டு விடக்கூடாது என்ற பயம்தான் என்னைப் பதைக்கவைத்தது.

எனக்கு ஒரு வகையில் மகிழ்ச்சிதான் ஏனென்றால் இரு சாராருமே, நான் நல்ல தீர்ப்பைத்தான் வழங்குவேன் என்ற நம்பிக்கை தெரிவித்தது தான் அந்த மகிழ்ச்சிக்குக் காரணம். இது போன்ற வழக்குகளில்தான் மன்னர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டுவிடுகிறது. கருத்த உடையாரோ, கமுதியைக் கைப் பற்றி அதில் கொலுவிருக்க முகூர்த்தம் பார்த்துக்கொண்டிருக்கிறார். மங்களேஸ்வரியோ மறவர் குல மங்கையர்க்கு அவமானத்தை ஏற்படுத்திய கருத்த உடையாரை தீர்ப்புக்குப் பின் நீண்ட நாள் வாழவிடமாட்டேன் என்று வீர சபதம் பூண்டு

நிற்கிருள். எது எப்படி இருந்தாலும், ஒரு கோட்டைத் தலைவனின் மனைவியைப் பற்றிய வழக்கை நான் மட்டும் விசாரித்து நீதி வழங்குவது முறையாகாது என்பதால்தான் ஒரு நியாய சபையையே நிறுவிக்கொண்டேன். மங்களேஸ்வரியின் கண்ணீர் பெரிதா, மறவர் நாட்டு மானம் பெரிதா என்ருல் இரண்டுக்கும் மேலாக நீதிதான் பெரிது என்று கருதக்கூடிய பரம்பரை எங்கள் பரம்பரை. அதனுல் தான் ஒவ்வொரு கட்டத்திலும் நான் துணுக்குற்றுப் போனேன்.

மங்களேஸ்வரி, மதுரை வைத்தியன் ஒருவனுல் கெடுக்கப் பட்டு விட்டாள் என்ற குற்றச்சாட்டு எனக்கு முதல்முதலில் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தாலும், வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும் அந்த அதிர்ச்சி படிப்படியாக குறைந்து கொண்டே வந்தது. ஏனென்ருல் அந்த இளைஞரே வழக்காடு மன்றத்தில் ஆஜராகி வாதாட முன் வந்துவிட்டார்.

அந்த வைத்திய இளைஞர் சாதாரணமாணவர் அல்ல. மதுரையை ஆளும் விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் அரண்மனை வைத்தியர் அந்த இளைஞர்.

அவர் வந்ததும் சபையை வணங்கி அவரது வாக்கு மூலத்தைக் கொடுத்தார். அவையின் ஒரு பகுதியில் கருத்த உடையார் சிவந்த கண்களோடு உட்கார்ந்திருந்தார். ஒரு திரைக்குப் பின்னுல் மடியில் குழந்தையுடன் மங்களேஸ்வரி உட்கார்ந்திருந்தாள்.

வைத்தியர் சொன்னுர்-பிரபு நான் மதுரை மண்டலாதிபதி மாட்சிமை தங்கிய விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் அரண்மனை வைத்தியன். மூன்று தலைமுறைகளாக நாங்கள் ஆஸ்தான வைத்தியர்களாக இருந்து வருகிருேம். எங்கள் குடும்பம் எவருக்கும் துரோகம் இழைத்திராத குடும்பம்; ஏனெனில், துரோகம் எப்போதாவது ஒரு நாளைக்குத் திருப்பித் தாக்காமல் விடாது என்பதை உணர்ந்தவர்கள் நாங்கள். நான் முடிவு செய்திருந்தால் இந்த வழக்கிற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று ஒரே வார்த்தையில் கூறி விட்டுப் போய்விடலாம். ஆனுல், நான் பொறுப்பைத் தட்டிக்கழிக்க விருப்பவில்லை. மதுரை நாயக்க வம்சத்தினர் தவிர வேறு எவருக்கும் செய்தறியாத உதவியைக் கமுதிக்

கோட்டை உறங்காப்புலி சேர்வைக்கு செய்து, அதில் வெற்றியும் கண்டேன், என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகத் தான் நான் விசாரணையில் முழுப்பங்குபெற வந்திருக்கிறேன். நான் உறங்காப்புலி குடும்பத்திற்குத் துரோகம் செய்தேன், மங்களேஸ்வரியை மயக்கினேன் என்பதெல்லாம் தெய்வத்திற்கு அடுக்காத அவதூறுகள். இதை, என் பேச்சினுல் மட்டும் கூறிவிட்டு நான் தப்பித்துக்கொள்ள விரும்பவில்லை. என்னைவிட ஒரு பெண்ணின் மானம் முக்கியம் என்பதால் அந்தப் பெண்ணும் நிரபராதி என்பதை ருசுப்படுத்திவிட்டுப் போகவே நான் வந்திருக்கிறேன். நான் தோற்றுப் போனுல் என் பிணத்தை ஊர்வலமாகக் கொண்டு போக நான் சம்மதிக்கிறேன். இது என் குலத்தொழில் மீது ஆணை'' என்று மதுரை வைத்தியர் மனமுருகப் பேசினுர்.

இந்தக் கட்டத்தில் கருத்த உடையார் குறுக்கிட்டார் "இது மாய்மாலம்; இவருடைய மருந்தினுல்தான் மங்களேஸ்வரிக்கு குழந்தை பிறந்தது என்பதை அரசவையிலே நிரூபித்துக்காட்டவேண்டும்'' என்று குமுறினுர். உடனே நியாய சபை அவரைத் தடுத்து நிறுத்தி இது போர்க்களமல்ல; நியாயசபை'' என்பதை ஞாபகப்படுத்தியது.

"வைத்தியரே, இது சாதாரணமான வழக்கல்ல; வாரிசுரிமைப் போராட்டம். இந்த வழக்கு மறவர் மண்ணுக்குள்ளேயே ஒரு பெரும் பிளவை உண்டுபண்ணியிருக்கிறது. ஆகவே, உன்னுடைய மருந்தினுல் தான் மங்களேஸ்வரிக்கு குழந்தை பிறந்தது என்பதை உன்னுல் நிரூபிக்க முடியுமா? இதில் ஒளிவு, மறைவு தயவு தாட்சண்யம் என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்று நான் இடைமறித்துப் பேசினேன். வைத்தியர் சிறிதும் கலங்கவில்லை. அவர் மிகவும் தெளிவாகப் பேசினுர். பலர் முன்னிலையில் நிரூபித்தால்தானே மங்களேஸ்வரியின் மாண்பும் பலருக்குத் தெரியும் என்பதை உணர்ந்தவன் நான். இல்லாவிட்டால் தங்களை மட்டும் சந்தித்து உண்மையை உணர்த்திவிட்டுப் போயிருக்க முடியும். இது ஒரு பெண்ணின் ஜீவனும்சப்பிரச்சினை அல்ல. ஒரு நாட்டின் மானப்பிரச்சினை. இல்லாவிட்டால் இந்த வயதில் உங்கள் முன் வாதாட வந்திருப்பேனு பிரபு'' என்ருர் வைத்தியர்.

இடையிடையே கருத்த உடையார் பேசினர். திரைக்குப் பின்னால் இருந்து தேம்பி அழும் மங்களேஸ்வரியின் புலம்பலும் எனக்குக் கேட்டது.

மீண்டும் வைத்திய இளைஞர் பேசினர்:

"இதோ என் கையில் பழங்காலச் சுவடி ஒன்று இருக்கிறது. இதை சபையோர் முன்னிலையில் மன்னர் முன்சமர்ப்பிக்கிறேன். மன்னர் அந்தச் சுவடியை படித்துப் பார்க்குமுன் இந்த அவையோர் முன்னிலையில் இன்னொரு சோதனையும் நடத்திக்காட்ட முனைகிறேன்" என்று கூறிய வைத்திய இளைஞர், மங்களேஸ்வரியின் குழந்தையின் வயதிற்கு இணையாக இன்னொரு குழந்தையைச் சபைக்குக் கொண்டுவரக் கேட்டுக் கொண்டார். அதன்படி இன்னொரு குழந்தையும் கொண்டு வரப்பட்டது.

"மன்னர்பிரான் அவர்களே, இந்த இரண்டு குழந்தைகளையும் வியர்க்க வியர்க்க விளையாட விடவேண்டும். நன்றாக வியர்த்துக்கொட்டும் போது, தனித்தனியாக அந்தக் குழந்தைகளின் வியர்வைத் துளிகளை இங்கே கூடியிருக்கும் நியாய சபை நிதானமாக அமர்ந்து நுகர்ந்து பார்க்கவேண்டும். சாதாரணமாக வியர்வைத் துளிகளில் உப்புக்கரிக்கும் என்பது உலகறிந்த உண்மை. மங்களேஸ்வரிக்குப் பிறந்திருக்கும் குழந்தை என் மருந்துக்குத்தான் பிறந்தது என்றால் அந்தக் குழந்தையின் வியர்வையில் மாறுபட்ட வாடை வீசும்" என்றார் வைத்தியர்.

வைத்தியரின் வாதம் கேட்டு நான் திகைத்துப் போனேன். அடுத்த கனமே நியாய சபையை இரண்டாகப் பிரித்து ஒரு பிரிவை மங்களேஸ்வரியின் குழந்தையின் வியர்வையைச் சோதிப்பதற்கும், அடுத்த பிரிவை அடுத்த குழந்தையின் வியர்வையைச் சோதிப்பதற்குமாக நியமனம் செய்தேன். சபையில் பரபரப்பு ஏற்பட்டது. இது வழக்காக இருந்தாலும் சபைக்கு ஒரு நாடகம் போலத் தோன்றியது.

குழந்தைகள் விளையாடின; சிரிக்கச் சிரிக்க விளையாடின. சபை கல கலப்படைந்தது. இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு

நியாயசபையினர் தனித்தனியாகத் தங்கள் தங்கள் குறிப்புகளை என்னிடம் வழங்கினார்கள்.

இப்போது வைத்திய இளைஞர் குறுக்கிட்டுப் பேசினார். மன்னர் அவர்கள் குறிப்புக்களைப் படித்துக்காட்டும் முன்னர், நான் சமர்ப்பித்திருக்கும் ஏட்டுச் சுவடியில் நான் கோடிட்டுக் காட்டியுள்ள பகுதியை முதலில் அவைக்கு அறிவித்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நான் படித்தேன்; அதில் "விஜயநகர சாம்ராஜ்யத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, மதுரை நாயக்க வம்சத்தினருக்கு மட்டும் பயன் படுத்தப்படும் இந்தப் புத்திரபாக்கிய மருந்து முக்கால் பங்கு வெங்காயத்தினால் செய்யப்பட்டது. இந்த மருந்தை ஒரு மண்டலம் அதாவது நாற்பத்தைந்து நாள் புருஷர்கள் சாப்பிட்டு மனைவியோடு மகிழ்ச்சியோடு இல்லறம் நடத்தினால் குழந்தை உற்பத்தியாகும். இந்த மருந்தினால்தான் குழந்தை பிறந்தது என்பதை பரிசோதிக்க விரும்பினால் அந்தக் குழந்தையின் வியர்வையில் வெங்காய நாற்றம் அடிக்கும். இதுதான் இந்த மருந்துக்குள்ள மூல ஆதாரம்".

நான் படித்து முடிக்குமுன் நியாய சபையின் ஒரு சாரார் திகைப்பில் ஆழ்ந்து போனார்கள்.

நான் நியாய சபையை ஏறிட்டுப் பார்த்தேன்.

மங்களேஸ்வரியின் குழந்தையைச் சோதித்தவர்கள் அந்த ஏட்டுச் சுவடியில் கண்டிருப்பது நூற்றுக்கு நூறு உண்மைதான். மங்களேஸ்வரியின் குழந்தை வடித்த வியர்வையில் வெங்காய வாடை பின்னிப் பிணைந்து இருக்கிறது என்கிறார்கள்.

அடுத்த குழந்தையின் வியர்வையைச் சோதித்தவர்கள் அதில் வெறும் உப்புக்கரிப்புத்தான் இருக்கிறது என்றனர். நான் தீர்ப்பு வழங்குவதற்கு வசதியாக ஆதாரம் கிடைத்தது.

தீர்ப்பு—மங்களேஸ்வரியே தொடர்ந்து கோட்டைக்கு அதிபதியாக இருக்கவேண்டும் என்பதுதான் நான் அளித்த தீர்ப்பு.

★

Eskay Art Printers, Madras-5.
Phone : 841478